இரண்டாம் பதிப்பு

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை - 20
பக்கங்கள் - 30

சுடர் 32 | கதிர் 132 | வள்ளுவர் ஆண்டு 2048 | பங்குனி 25 வெள்ளிக்கிழமை 07.04.2017

பல்கலை. மாணவர்கள் கொலை:

## 5 பொலிஸாரின் மறியல் நீடிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 7
யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர்கள் துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்ட வழக்கில் குற்றஞ் சாட்டப்பட்ட 5 பொலிஸ் உத்தியோகத்தர்களின் விளக்கமறியலை எதிர்வரும் 20ஆம் திகதிவரை நீடித்து யாழ்ப்பாணம் நீதிவான் மன்றம் உத்தரவிட்டது. >> 24

பொலிஸ் சந்தேகநபர்களின் மனுவில்

## இடைபுகு மனுவை ஏற்றது மேன்முறையீட்டு நீதிமன்று

யாழ்ப்பாணம், ஏப். 7
யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர்கள் மீதான சூட்டுச் சம்பவத்துடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ள பொலிஸார் தாக்கல் செய்த இடமாற்ற மனுவில், சுட்டுக் கொல்லப்பட்ட மாணவர்களின் பெற்றோரை இடைபுகு மனுதாரர்களாக மேன்முறையீட்டு நீதிமன்றம் ஏற்றுக் கொண்டுள்ளது. இடமாற்ற மனு மீதான ஆட்சேபனையை மே மாதம் 29ஆம் திகதிக்கு முன்னர் கோப்பிடுமாறு, இடைபுகு மனுதாரர்கள் சார்பில் முன்னிலையான மூத்த சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் மற்றும் சட்டத்தரணி கே. சயந்தன் ஆகியோருக்கு மன்று அறிவுறுத்தல் வழங்கியது. >> 24

## மிதமிஞ்சிய வெப்பம் மக்களே மிக அவதானம்

தேசிய வைத்தியசாலை பணிப்பாளர் எச்சரிக்கை

கொழும்பு, ஏப். 7
நாட்டில் தற்சமயம் நிலவிவரும் மிதமிஞ்சிய வெப்பநிலையிலிருந்து பிள்ளைகளையும், வயது முதிர்ந்தோரையும் காப்பாற்றிக் கொள்ளவேண்டியது மிக முக்கியமெனக் கொழும்பு தேசிய வைத்தியசாலையின் பணிப்பாளர் >> 24

## தற்போதைய சூழலில்

# அரசமைப்பு திருத்தத்துக்கே சு.க. ஆதரவு

அந்தக் கட்சி வெளிப்படையாக அறிவிப்பு

கொழும்பு ஏப்ரல் 7
தற்போதைய சூழலில் புதிய அரசமைப்பு ஒன்றுக்காக மக்களிடம் பொது வாக்கெடுப்புக்குச் செல்ல முடியாது என்பதால் நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் நிறைவேற்றக்கூடிய அரசமைப்புத் திருத்தங்களுக்கே சிறிலங்கா சுதந்திரக் கட்சி ஆதரவு வழங்கும்.
அந்தக் கட்சியின் பேச்சாளரும் இராஜாங்க அமைச்சருமான டிலான் பெரேரா நேற்று இதனைத் தெரிவித்தார். கட்சித் தலைமையகத்தில் நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பில் அவர் இதனைத் திட்டவட்டமாகக் கூறினார்.
புதிய அரசமைப்பு ஒன்றைக் கொண்டு வருவதா அல்லது அரசமைப்பு சீர்திருத்தங்களை மட்டுமே மேற்கொள்வதா என்பது தொடர்பில் அரசமைப்புச் சபையாக மாற்றப்பட்டுள்ள நாடாளுமன்றமே தீர்மானிக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.
புதிய அரசமைப்பை உருவாக்குவதற்கான வழிநடத்தல் குழுவின் அமர்வு கடந்த செவ்வாய் மற்றும் புதன்கிழமைகளில் நடைபெற்ற போது, அதில் கலந்துகொண்டிருந்த சுதந்திரக் கட்சி >> 04

## மொத்த அதிகாரமும் மத்தியிடம் இருக்கும் வகையிலேயே தீர்வு

பௌத்த பீடங்களின் தலைமைகள் அரச தலைவருக்கு இடித்துரைப்பு

கொழும்பு, ஏப். 7
கொழும்பு அரசின் (மத்தியிடம்) கரங்களில் அதிகாரம் காணப்படும் அரசியல் தீர்வே ஏற்படுத்தப்பட வேண்டும் என்று அஸ்கிரிய மற்றும் மல்வத்து பீடங்களின் >> 23

## ஐ.நா. தீர்மானம் மீதான விவாதம் நடத்தாமலேயே சபை ஒத்திவைப்பு

எதிரணி சர்ச்சையில் ஈடுபட்டதால்

கொழும்பு, ஏப். 7
ஐ.நா. மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் தொடர்பில் விவாதம் நடத்துவதற்குத் தமது தரப்புக்கு >> அ

## ஆவணங்கள் சகிதம் சபையில் சம்பந்தன்

கொழும்பு, ஏப். 7
நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெறவிருந்த ஐ.நா. தீர்மானம் தொடர்பான சபை ஒத்திவைப்புவேளை பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றுவதற்கு, உரிய >> 24

ஐ.நா. தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவது எப்படி?

## கால அட்டவணையைத் தயாரிக்க தமிழ்க் கூட்டமைப்புத் தீர்மானம்

யாழ்ப்பாணம், ஏப். 7
இலங்கை அரசுக்கு வழங்கப்பட்டுள்ள 2 ஆண்டுகள் கால அவகாசத்தில், ஐ.நா. தீர்மானத்தை எப்படி நடைமுறைப்படுத்த வேண்டும் என்ற கால அட்டவணையைத் தயாரிப்பதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் >> 04

## ஈபிடிபியில் இணைந்திருந்ததால் மக்கள் என்னை வெறுத்தனர்

நெடுந்தீவு சிறுமி கொலை வழக்கின் எதிரி மேல் நீதிமன்றில் சாட்சியம்

யாழ்ப்பாணம், ஏப். 7
"ஈழ மக்கள் ஜனநாயக கட்சியில் நான் இணைந்திருந்தது பிழை. அதனால்தான் மக்கள் என்னை வெறுத்தனர்"
இவ்வாறு நெடுந்தீவு சிறுமி கொலை வழக்கின் எதிரி யாழ்ப்பாண மேல் நீதிமன்றில் தெரிவித்தார்.
நெடுந்தீவில் 13 வயதுச் சிறுமி ஒருவர் கொடூரமாக வன்புணர்வுக்கு உட்படுத்திக் கொல்லப்பட்ட வழக்கு விசாரணை 5 வருடங்களின் பின்னர் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றத்தில் கடந்த திங்கட்கிழமை ஆரம்பமானது. 2012ஆம் ஆண்டு மார்ச் மாதம் 3ஆம் திகதி சிறுமி கொல்லப்பட்டிருந்தார். கொலையைச் செய்தவர் என்ற சந்தேகத்தில் ஈபிடிபியில் இருந்தவர் என்று தெரிவிக்கப்படும் கந்தசாமி ஜெகதீஸ்வரன் (வயது 31) கைது செய்யப் >> 24

## கடலில் மூழ்கி மீனவர் சாவு

யாழ்ப்பாணம், ஏப். 7
வள்ளத்தில் கடலுக்கு மீன்பிடிக்கச் சென்றதாகக் கூறப்படும் குடும்பத் தலைவர், நீரில் மூழ்கி மயக்கமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். எனினும் சிகிச்சை பயனின்றி அவர் உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர். காரைநகரைச் சேர்ந்த சுந்தரலிங்கம் கிருஸ்ணராசா (வயது34) >> 04

## பண்டிகைக் காலத்தில் சதொசவில்

10 அத்தியவசியப் பொருள்கள் அடங்கிய ரூ. 1,515 பெறுமதியான பொதி ரூ. 975க்கு

கொழும்பு, ஏப். 7
பண்டிகைக் காலத்தை முன்னிட்டு நாடு முழுவதுமுள்ள சதொச விற்பனை நிலையங்களின் ஊடாக ஆயிரத்து 515 ரூபா பெறுமதியான 10 அத்தியவசிய உணவுப் பொருள்கள் அடங்கிய பொதியை >> 04

## வறட்சி பாதித்த விவசாயிகளுக்கு புத்தாண்டுக்கு முன் ரூ. 10 ஆயிரம்

கொழும்பு, ஏப். 7
வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்குரிய கொடுப்பனவு எதிர்வரும் சித்திரைப் புத்தாண்டுக்கு முன்னர் வழங்குவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக, கொழும்பு அரசின் விவசாயத்துறை அமைச்சர் துமிந்த திசாநாயக்க தெரிவித்தார். >> 24

## இரசாயனத் தாக்குதல் பின்னணியில் ரஷ்யா

ஜேர்மனி குற்றச்சாட்டு



இரசாயனத் தாக்குதலில் சாவடைந்த தனது இரட்டைக் குழந்தைகளுக்கு விடை கொடுக்க சுமந்து செல்கிறார் தந்தை...

பெய்ரூட், ஏப். 7
சிரியாவில் அரச படைகள் அல்லது அரச ஆதரவு பெற்ற நாடுகள் நடத்தியதாகச் சந்தேகிக்கப்படும் வான் வழி இரசாயனத் தாக்குதலின் >> 24

## காய்ச்சலால் ஏற்படும் உயிரிழப்புக்குக் காரணம் தாமதமான சிகிச்சையே

மக்களை எச்சரிக்கிறது கிளிநொச்சி சுகாதார சேவைகள் திணைக்களம்

கிளிநொச்சி, ஏப். 7
பன்றிக் காய்ச்சல் எனப்படும் எச்1என்1 வைரஸ் உட்பட காய்ச்சலால் ஏற்பட்ட உயிரிழப்புகள் அனைத்துக்கும் காரணம் உடனடியாக வைத்தியசாலைக்குச் செல்லாது தாமதமாக நான்காவது அல்லது ஐந்தாவது நாளின் பின்னர் >> 24

சிறுப்பிட்டி இளைஞர்கள் படுகொலை

## ஐந்து இராணுவத்தினருக்கு எதிராகக் குற்றப்பத்திரிகை

பொலிஸாரால் நேற்று நீதிமன்றில் முன்வைப்பு

யாழ்ப்பாணம், ஏப். 7
யாழ்ப்பாணம், சிறுப்பிட்டியில் இளைஞர்கள் இருவர் காணாமல் ஆக்கப்பட்டுக் கொலை செய்யப்பட்ட வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்ட 5 இராணுவத்தினருக்கும் எதிராக குற்றப்பத்திரிகையை யாழ்ப்பாணம் நீதிவான் மன்றில் பொலிஸார் நேற்று முன்வைத்தனர்.
இந்த வழக்கு நீதிவான் சி.சதீஸ்தரன் முன்னிலையில் நேற்று விசாரணைக்கு வந்தது. >> 04



# ஒலி, ஒளி தொழில்நுட்பம் ஊடாக வழக்குகளில் சாட்சியமளிக்க வசதி

## சட்டத் திருத்தத்துக்கு அமைச்சரவை அனுமதி

கொழும்பு, ஏப். 7

குற்றச் செயல்களினால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சியாளர்கள், நீதிமன்றத்தில் முன்னிலையாகாமல் வெளிநாட்டில் இருந்து ஒலி, ஒளி தொழில்நுட்பத்தின் ஊடாகச் சாட்சியமளிப்பதற்குச் சட்டத் திருத்தமொன்றைக் கொண்டு வருவதற்கு அமைச்சரவை அங்கீகாரமளித்துள்ளது.

நீதி அமைச்சர் விஜேதாச ராஜபக்சவால் முன்வைக்கப்பட்ட அமைச்சரவைப் பத்திரத்துக்கு அமையவே அமைச்சரவை இந்த அங்கீகாரத்தை வழங்கியுள்ளது என்று அமைச்சரவை இணைப் பேச்சாளரான, ஊடகத்துறை அமைச்சர் கயந்த கருணாதிலக தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

குற்றச்செயல்களால் பாதிக்கப்பட்டோர் மற்றும் சாட்சியாளர்களுக்கு உதவியளித்தல் மற்றும் பாதுகாப்பளித்தல் தொடர்பிலான 2015ஆம் ஆண்டின் 4ஆம் இலக்கச் சட்டத்திலேயே இது சம்பந்தமான திருத்தம் கொண்டு வரப்படுகிறது.

குற்றச்செயல்களினால் பாதிக்கப்பட்டோர் மற்றும் சாட்சியாளர்கள் நீதிமன்றத்தில் முன்னிலையாகாமல் நாட்டுக்கு வெளியில் இருந்து ஒலி, ஒளி தொழில்நுட்பத்தின் ஊடாக சாட்சியமளிப்பதற்கு இயலச் செய்யும் ஏற்பாடுகளுடன் கூடியதாக மேற்படி சட்டத்தைத் திருத்துவதற்கான சட்ட வரைவை வர்த்தமானியில் வெளியிடுவதற்கும் நாடாளுமன்ற அனுமதிக்காகச் சமர்ப்பிப்பதற்கும் அமைச்சரவை அனுமதியளித்துள்ளது.

இந்தச் சட்டத்திருத்தத்தின் பிரகாரம், இலங்கைக்கு வெளியில் தூர இடமொன்றில் இருக்கும் யாரேனும் பாதிக்கப்பட்ட ஒருவரோ அல்லது சாட்சியாளரோ அவரிருக்கும் நாட்டிலுள்ள இலங்கைத் தூதரகத்தில் இருந்து ஒலி, ஒளி தொழில்நுட்பத்தின் ஊடாக சாட்சியமோ அல்லது வாக்குமூலமோ அளிப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படும் - என்றார்.

(கு-4)

# வடக்கு ஆசிரியர்களுக்கு 2ஆம் கட்டப் பயிற்சிகள்

யாழ்ப்பாணம், ஏப். 7

வடக்கு மாகாணப் பாடசாலைகளில் கடந்த 2016ஆம் ஆண்டில் புதிதாக நியமனம் பெற்ற பட்டதாரி ஆசிரியர்களுக்கான திசைகோட் படுத்துதல் பயிற்சிகளின் இரண்டாம் கட்டப் பயிற்சிகள் எதிர்வரும் 17ஆம் திகதி முதல் 23ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது என்று மாகாணக் கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமார் தெரிவித்தார்.

இந்தப் பயிற்சி யாழ்ப்பாணம் கோப்பாய் தேசிய கல்வியியற் கல்லூரியில் நடத்தத் திட்மிடப்பட்டுள்ளது. 390 ஆசிரியர்களுக்குக் கடந்த வருடம் முதற்கட்டப் பயிற்சிகள் நடைபெற்றன. முதற்கட்ட பயிற்சியில் கலந்து கொண்ட அனைவரும் இந்தப் பயிற்சியில் கலந்து கொள்ளவேண்டும் என அவர் மேலும் கூறினார். (கு-10)

# கட்சி நலன் சார்ந்த போராட்டங்களுக்கு எங்களை அழைத்து சுயலாபம் தேடாதீர்

## தமிழ் மக்கள் பேரவைக்கு காணாமற்போனோரின் உறவுகள் சாட்டை

கிளிநொச்சி, ஏப். 7

"கூட்டமைப்பு ஒன்றும் செய்யவில்லை என்று கூறுவதை விட்டு முதலில் நீங்கள் வந்து எங்களோடு சேர்ந்திருந்து போராடுங்கள். அவர்கள் தாமாக வருவார்கள். அரசியல் ரீதியாகப் பிரிந்து நடத்தும் கட்சி நலன் சார்ந்த போராட்டங்களுக்கு எம்மை அழைத்துச் சுயலாபம் தேடவேண்டாம். எல்லோரும் சேர்ந்து வந்து போராடுங்கள். தீர்வு கிடைக்கவேண்டும்என்பதே நோக்கம்."

இவ்வாறு, தமிழ் மக்கள் பேரவையின் கூட்டத்துக்கு அழைக்கப்பட்டிருந்தவர்களில் வவுனியா மாவட்ட காணாமல் ஆக்கப்பட்டவரின் உறவினர்கள் சார்பில் பூபாலசிங்கம் என்பவர் ஆவேசமாகக் கோரினார்.

தமிழ் மக்கள் பேரவையினரின் ஏற்பாட்டில் வடக்கு - கிழக்கின் 8 மாவட்டத்தைச் சேர்ந்த காணாமல் ஆக்கப்பட்ட உறவினர்களுடனான சந்திப்பொன்று கிளிநொச்சி மாவட்டக் கூட்டுறவுச் சபை மண்டபத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. போராட்டத்தை முன்னெடுப்பதும் கூட்டத்தின் நோக்கமாக இருந்தது என்று கூறப்பட்டது.

இதன்போதேது வுனியா மாவட்டப் பிரதிநிதி இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கூட்டமைப்பு ஒன்றும் செய்யவில்லை என்று கூறுவதைவிட்டு முதலில் நீங்கள் வந்து எங்களோடு சேர்ந்திருந்து போராடுங்கள். அவர்கள் தாமாக வருவார்கள். காணாமல் ஆக்கப்பட்டோருக்காகக் கடந்த 40 நாள்களுக்கும் மேலாகப் போராட்டம் நடத்தி வருகின்றோம். எமக்கான ஓர் ஆக்கபூர்வமான செயல்பாட்டில் எவருமே இறங்கவில்லை. இதில் கூட்டமைப்பு மட்டும் செயற்படவில்லை எனக் கூறி ஒருவரும் தப்பிக்க முடியாது.

உங்கள் அரசியலுக்காக வந்துபோவதையும் உங்களின் போராட்டங்களுக்கு எங்களை அழைப்பதையும் நிறுத்திவிட்டு நாம் நடத்தும் போராட்டங்களில் நீங்கள் வந்து இணைந்து கொள்ளுங்கள். அரசியல் ரீதியாகப் பிரிந்து நடத்தும் கட்சி நலன் சார்ந்த போராட்டங்களுக்கு எம்மை அழைத்து நீங்கள் சுயலாபம் தேட வேண்டாம்.

அவ்வாறு அரசியல் ரீதியில் நடத்துவதானால் முதலில் சகல கட்சிகளும் பேசி ஒரு தீர்வுக்கு வாருங்கள். அனைத்துத் தமிழ்க் கட்சிகளும் ஒன்றிணைந்து போராட்டத்துக்கு அழைப்பு விடுங்கள். நாம் பங்கு கொள்கின்றோம்.

அரசியலில் முதலில் கூட்டமைப்பு என்று வந்த நீங்கள், இன்று தமிழ் மக்கள் பேரவை என்று வந்து நிக்கின்றீர்கள். இன்னும் சிறிது காலத்தில் உங்களில் இருந்து வேறு ஒரு பேரவை வரத்தான் போகின்றது. அது எங்கள் பிரச்சினை இல்லை. எமது இந்த அவலத்துக்குத் தீர்வு காணும் வழிவகையைப் பாருங்கள். அதனை விடுத்து இதில் இருந்து எந்தக் கட்சி ஆதாயம் தேடலாம் எனக் கருதி எம்மை அழைத்து அடுத்தவரைக் கூறை கூறாமல் உங்களால் என்ன முடியும்? என்ன செய்யப் போகின்றீர்கள் என்பதனைக் கூறுங்கள்.

பிள்ளைகளை இழந்து தவிக்கும் வேதனை பிள்ளைகளைப் பெற்றவர்களுக்குத்தான் தெரியும். எமது பிரச்சினை சம்பந்தன் ஐயாவாலோ அல்லது விக்னேஸ்வரனாலோ, சுமந்திரனாலோ தீர்க்க கூடிய ஓர் விடயமல்ல. இதற்கு இன்றைய நிலையில் தீர்வு வழங்குவதானால் மைத்திரிபால சிறிசேனாவால் மட்டுமே முடியும். ஆனால் அவரும் வழங்குவாரா? என்பதே இன்று உள்ள பெரிய பிரச்சினை.

எம்மால் சகல மாவட்டத்திலும் மேற்கொள்ளும் போராட்டங்களில் முழுமையாகத் தொடர்ந்தும் போராடும் வகையில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் , மாகாண சபை உறுப்பினர்கள் , அரசியல் கட்சிகளின் தலைவர்கள் உறுப்பினர்கள் மற்றும் இவ்வாறான பேரவையினர் அனைவரும்எம்மோடு வந்து இணையுங்கள் - என்றார்.

சந்திப்பில் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் , ஈ.பி.ஆர்.எல்.எவ் சுரேஸ் பிரேமச்சந்திரன் உள்ளிட்டவர்களுடன் காணாமற்போனோரின் உறவுகள் 40 பேர் கலந்துகொண்டனர். (கு-4-101)

# எதிர்க்கட்சியில் உள்ள பலர் அடுத்த முறை ஆளும் தரப்பில்

## சபையில் கூறினார் வடக்கு முதல்வர்

யாழ்ப்பாணம், ஏப். 7

"வடக்கு மாகாண சபையின் எதிர்க்கட்சியில் உள்ள உறுப்பினர்களில் பெரும்பாலானோர் அடுத்த முறை ஆளும்கட்சியில் தான் இருப்பார்கள்" என்று வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

பேரவைச் செயலகத்தில் அமைக்கப்பட்டுவரும் முதலாம் மாடியில் வடக்கு மாகாண சபைக்கு வருகை தரும் வெளிநாட்டுப் பிரதிநிதிகளைச் சந்திப்பதற்குப் பிரத்தியேகமாக ஒரு இடத்தை ஒதுக்குவதற்கு முதலமைச்சர் மற்றும் உறுப்பினர்கள் ஒத்துழைக்க வேண்டும் என அவைத் தலைவர் கோரிக்கை விடுத்தார்.

அண்மையில் வெளிநாட்டுப் பிரதிநிதிகளைச் சந்திக்கும்போது எனது அலுவலகத்தில் மிகுந்த சிரமத்துடனேயே சந்திப்பை மேற்கொள்ள நேரிட்டது. இங்கு வரும் வெளிநாட்டுப் பிரதிநிதிகளைச் சந்திக்க மாகாண சபை உறுப்பினர்கள் மற்றும் பிரதிநிதிகள் அடங்கலாக 80 பேர் வரை அமரக்கூடிய கேட்போர் கூடம் அமைக்க வேண்டும் - என்றார் அவைத் தலைவர்.

வடக்கு மாகாண எதிர்க்கட்சித் தலைவர், எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அனைவரும் சந்தித்துக் கதைப்பதற்காக ஏனைய சில மாகாண சபைகளில் இடம் ஒதுக்கப்பட்டுள்ளது. அதேபோல் இங்கும் அமைத்து தர வேண்டும் - என்றார்.

இதன்போது குறுக்கிட்ட உறுப்பினர் து.ரவிகரன், அங்கு எதிர்க்கட்சியில் அதிக உறுப்பினர்கள் இருப்பார்கள் என்று கூற, எதிர்காலத்தில் இங்கும் எதிர்க்கட்சியில் அதிகம் பேர் இருக்கக் கூடும் என்றார் எதிர்க்கட்சித் தலைவர்.

இதற்குப் பதிலளித்த முதலமைச்சர், வடக்கு மாகாண சபையின் எதிர்க்கட்சியில் உள்ளவர்கள் அடுத்த முறை ஆளும் கட்சியிலேயே இருப்பார்கள் - என்றார்.

இதன்போது குறுக்கிட்ட எதிர்க்கட்சி உறுப்பினர் தவநாதன், "எதிர்க் கட்சியில் இப்போதே சிலரை வாங்கிவிட்டீர்கள். ஏனையோரையும் வாங்க முயற்சியா? இது ஆரோக்கியமான செயல் அல்ல" எனத் தெரிவித்தார்.

(கு-8-101)

# வடக்கு சுகாதாரத் தொழிலாளர் பிரச்சினைக்குத் தீர்வுவேண்டும்

## மாகாண சபை உறுப்பினர்களிடம் வலியுறுத்தல்

யாழ்ப்பாணம் ஏப் 7

வடக்கு மாகாண சுகாதாரத் தொழிலாளர்கள் தமது பிரச்சினைக்கு உரிய தீர்வைப் பெற்றுத் தருமாறு வடக்கு மாகாண சபை உறுப்பினர்களிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கத்தைச் சந்திப்பதற்காக அவர்கள் மாகாண சபைக்கு வருகை தந்தனர். அமைச்சர் அவர்களைச் சந்திக்கச் செல்லவில்லை.

அமைச்சர் அவர்களைச் சந்திக்க மறுக்கிறார். நாங்கள் போய் சந்தித்துப் பேசுவோம் எனத் தெரிவித்து திருமதி அனந்தி சசிதரன் உறுப்பினரான சிவாஜிலிங்கத்தையும் அழைத்துச் சென்று அவர்களுடன் கலந்துரையாடினார்.

இந்தக் கலந்துரையாடலின்போது பாதிக்கப்பட்ட சுகாதார தொழிலாளர்கள் தமக்கு உரிய தீர்வை வழங்குமாறு கோரினர்.

10 வருடங்கள் வரை தாம் பணியாற்றி வருவதாகவும், இன்று வரை கொடுப்பனவுகள் வழங்கப்படவில்லை என்றும், நிரந்தரத் தீர்வொன்றைப் பெற்றுத் தருமாறும் அவர்கள் கோரினர்.

இதற்குப் பதிலளித்த உறுப்பினர்கள், உங்களில் எத்தனை பேர் இருக்கின்றீர்கள் என்ற பட்டியலைத் தாருங்கள். நாங்கள் அமைச்சருக்கு அழுத்தங்களைக் கொடுப்போம். அத்துடன் இது மாகாண அமைச்சுடன் மட்டும் தொடர்புடையது அல்ல. இது கொழும்பு அரசுடன் சார்ந்த விடயம். உங்களுக்கு நிரந்தர தீர்வை வழங்க இயலுமான அனைத்து நடவடிக்கைகளையும் செய்வோம் - என்றனர். (கு-8)

# சிவாஜிலிங்கம், லிங்கநாதன் அமர்வுகளை நடத்த அனுமதி

யாழ்ப்பாணம், ஏப். 7

வடக்கு மாகாண சபையில் அவைத்தலைவர், பிரதி அவைத் தலைவர் இல்லாத சந்தர்ப்பங்களில் அமர்வுகள், கூட்டங்களை உறுப்பினர்களான எம்.கே.சிவாஜிலிங்கம், ஜி.ரி.லிங்கநாதன் ஆகியோரில் ஒருவர் முன்கொண்டு செல்வார்கள் எனப் அவைத் தலைவர் சீ.வி.கே.சிவஞானம் தெரிவித்தார்.


வடக்கு மாகாண சபையின் 90ஆவது அமர்வு நேற்றுப் பேரவைச் செயலகத்தில் அவைத் தலைவர் தலைமையில் இடம்பெற்றபோதே இந்த அறிவித்தல் விடுக்கப்பட்டது.

அவைத் தலைவர் மேலும் தெரிவித்ததாவது:

வடக்கு மாகாண சபையில் அவைத்தலைவர், பிரதி அவைத் தலைவர் இல்லாத சந்தர்ப்பங்களில் இடம்பெறும் அமர்வுகள், கூட்டங்களை உறுப்பினர்களான எம்.கே.சிவாஜிலிங்கம், ஜி.ரி.லிங்கநாதன் ஆகியோரில் ஒருவர் முன்கொண்டு செல்வார்கள். இந்த அறிவித்தல் மாகாண சபைச் சட்டத்தில் அவைத் தலைவருக்கு வழங்கப்பட்ட 701இன் கீழ் அறிவிப்புச் செய்யப்படுகின்றது.

இந்தச் சபையில் இதுவரை 350 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. அத்தனை தீர்மானங்களும் உரிய இடங்களுக்கும் நடவடிக்கைக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. இதனை அறியாமல் எடுக்கப்படும் தீர்மானங்களுக்குஎன்னநடந்ததுஎனக்கேள்வி மட்டும் எழுப்பப்படுகின்றது.

இங்கு உறுப்பினர்களால் தெரி



விக்கப்படும் மாகாண அமைச்சுக்கள் தொடர்பான கருத்துக்களும் உரிய அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றபோதும் அமைச்சுக்கள் அது தொடர்பில் பதிலளிப்பதில்லை. அவ்வாறு அனுப்பும் கருத்துக்களுக்கான பதிலைப் 14 நாள்களில் அனுப்பி வைக்கவேண்டும்.

இன்று இந்தச் சபையில் விவாதத்துக்கு எடுக்கப்படும் நியதிச் சட்டங்கள் உட்பட மொத்தம் 6 நியதிச் சட்டங்களே என்னிடம் உள்ளன. அவற்றிலும் 5 நியதிச் சட்டங்கள் தொடர்பான முதலாம் வாசிப்புக்கள் நிறைவு செய்யப்பட்ட நிலையிலேயே உள்ளன. இதனை அறியாது குவிந்து கிடக்கும் நியதிச் சட்டங்களை நான் சபையின் அனுமதிக்கு விடவில்லை என்ற தவறான கருத்தும் பரப்பப்படுகின்றது. நியதிச் சட்டங்கள் வருவது மட்டுமல்ல, அவை சீராக்கி வரவேண்டும். அதனை சீர் செய்து அனுப்பாவிட்டால் ஆளுநர் திருப்பி அனுப்பும் பட்சத்தில் அது 38 உறுப்பினர்களுக்கும் அவமானம் - என்றார். (கு-101)

# இறுதிக்கிரியை நேரத்தில் மூதாட்டியின் சடலத்தை மீட்டுச் சென்ற பொலிஸ்

தென்மராட்சி.ஏப்.7

இறுதிக் கிரியைகள் நடைபெற்றுக் கொண்டிருந்தவேளையில் அங்கு சென்ற பொலிஸார் மூதாட்டியின் சடலத்தை மீட்டுச் சாவகச்சேரி வைத்தியசாலை சவச்சாலையில் ஒப்படைத்துள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் வரணி இயற்றாலையில் இடம்பெற்றது. சம்பவம் தொடர்பில் பொலிஸார் தகவல் தருகையில்;

இந்தப் பகுதியைச் சேர்ந்த வேலுப்பிள்ளை நாகி என்னும் 87 வயது மூதாட்டி வீட்டுக்கு அருகில் உள்ள குளத்தில் நேற்றுமுன்தினம் காலையில் குளிக்கச் சென்றிருந்தார். சிறிது நேரத்தின் பின்னர் அங்கு குளிக்கச் சென்ற பெண்ணொருவர் மூதாட்டி ஈர ஆடைகளுடன் குளக்கரையில் சாவடைந்த நிலையில் காணப்பட்டதால் அவரது பிள்ளைகளுக்கு அறிவித்துள்ளார்.

அங்கு வந்த பிள்ளைகள் தாய் குளத்தில் மூழ்கிச் சாவடைந்தமை தொடர்பாகப் எமக்குத் தகவல் கொடுக்காமல் சடலத்தை வீட்டுக்குக் கொண்டு சென்று இறுதிக் கிரியைகளை நடத்துவதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டிருந்தனர்.

இந்த விடயம் தொடர்பாக 119 இலக்கத் தொலைபேசிக்கு இனந்தெரியாதோர் கொடுத்த தகவலையடுத்து மாலையில் அங்கு விரைந்த நாம் சடலத்தை மீட்டுச் சாவகச்சேரி வைத்தியசாலை சவச்சாலையில் ஒப்படைத்தோம் என்றனர்.

இவ்விடயம் தொடர்பாக பொலிஸார் சாவகச்சேரி நீதிமன்றில் அறிக்கை சமர்ப்பித்துள்ளனர். அறிக்கையைப் பார்வையிட்ட நீதிவான் பிரதேச திடீர்ச் சாவு விசாரணை அதிகாரி சி.சி. இளங்கீரன் மூலம் விசாரணை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்குமாறு உத்தரவிட்டார்.

விசாரணைகளை நடத்திய திடீர் சாவு விசாரணை அதிகாரி, சாவு தொடர்பாக சாவகச்சேரி வைத்தியசாலை சட்ட வைத்திய அதிகாரி மூலம் உடற்கூற்றுப் பரிசோதனை நடத்தி அறிக்கை சமர்பிக்குமாறும் உடற்கூற்றுப் பரிசோதனையின் பினனர் சடலத்தை உறவினரிடம் ஒப்படைக்குமாறும் உத்தரவிட்டார். (த-9)



# இம்மியளவும் நாங்கள் பின்வாங்கமாட்டோம்

## *சொந்தக் காணிகளில் குடியேறும்வரை போராடுவோம் என கேப்பாபிலவு மக்கள் உறுதி*

முல்லைத்தீவு, ஏப். 7

எங்கள் காணிகளில் நீங்கள் அமைத்த சகல கட்டடங்களையும் அகற்றிக்கொண்டு விரைவாகச் சென்றுவிடுங்கள். நாங்கள் வாழ்ந்தபூர்வீகக்காணிகளில்மீள்குடியேறும் வரை இம்மியளவும் பின்வாங்கப் போவதில்லை என 37ஆவது நாளாகவும் தொடர் அமைதிவழிப் போராட்டத்தை முன்னெடுத்து வரும் கேப்பாபிலவு மக்கள் தெரிவித்தனர்.

அவர்கள் தெரிவித்ததாவது:

கேப்பாபிலவில் உள்ள காணிகளை இராணுவம் சுவீகரித்து முகாம் அமைத்துள்ளது. அதனை அகற்றி எங்கள் வாழ்விடங்களை விடுவிக்கக் கோரி கடந்த ஐந்து வருடங்களுக்கு மேல் நாங்கள் போராடி வருகின்றோம். போராட்டத்தின் பயனாக கேப்பாபிலவு கிராம சேவையாளர் பிரிவில் உள்ள சூரிபுரம், சீனியாமோட்டை, பிரம்படி, பிலக்குடியிருப்பு போன்ற கிராமங்கள் விடுவிக்கப்பட்டுள்ளன. ஆனால் இதுவரை எங்கள் உயிர் நாடியாக விளங்கும் கேப்பாபிலவு விடுவிக்கப்பட வில்லை. பொறுமையாக இருந்த எம்மைப் போராட்ட களத்துக்கு அழைத்து வந்தது இவர்களே.

மார்ச் மாதம் முதலாம் திகதியில் இருந்து இன்று 37 நாள்களாக அமைதிவழியில் போராடிவருகின்றோம். காணிகள் விடுவிக்கப்படும் என மீள்குடியேற்ற அமைச்சர் அறிவித்த பின்னரும் எமக்கு உத்தியோக பூர்வமாக அது தெரிவிக்கப்படவில்லை. எமது நிலத்தில் மீள்குடியேறும் வரை பின்வாங்கப்போவதில்லை - என்றனர். (து-7)

# சைட்டத்துக்கு எதிராக இன்று நடை பயணம்

## *கொழும்பில் நடத்த ஏற்பாடு*

யாழ்ப்பாணம், ஏப். 4

நாம் ஒன்றுபடுவோம் சைட்டத்தை தோற்கடிப்போம் எனும் தொனிப் பொருளில் மாபெரும் நடை பயணம் இன்று வெள்ளிக்கிழமை மு.ப. 11 மணிக்கு நடைபெறவுள்ளதாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்தது.

கொழும்பு தேசிய வைத்தியசாலை அருகில்பேரணிநடைபெற்றுமாலை 2 மணியளவில் இது தொடர்பான கூட்டம் நடைபெறும்.

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் வடக்கு மாகாண இணைப்பாளர் வைத்தியர் த.காண்டீபன் தெரிவித்ததாவது:

இன்று வெள்ளிக்கிழமை நாடு தழுவிய 24 மணி நேர வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடவுளோம். எனினும் தெல்லிப்பழை புற்று நோய் வைத்தியசாலை மற்றும் ஏனைய வைத்தியசாலைகள் அனைத்திலும் அவசர நோயாளர் சேவைகள் இடம்பெறும்.

இலங்கை மருத்துவ சேவைக்குத் தரமற்ற மருத்துவர்களை அரசியல் செல்வாக்குக்காகவும் பணத்துக்காகவும் உருவாக்கி நோயாளர்களின் உயிரைப் பணயம் வைக்கும் அரசியல் வியா பாரிகளுக்கு எதிரான போராட்டம்.

ஆகையினால் எம்முடன் இந்த முறை நூற்றுக்கு மேற்பட்ட தொழிற் சங்கங்கள் கைகோர்த்துள்ளனர் - என்றார்.

இதேவேளை, இன்று நடைபெறும் இந்தப் போராட்டம் காரணமாக வடக்கிலுள்ள யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை உள்ளிட்ட அனைத்து வைத்தியசாலைகளிலும் வெளிநோயாளர் பிரிவுகள் இயங்கமாட்டாது என்றும், இதனை நோயாளர்கள் கவனத்தில் கொள்ளுமாறு வைத்தியசாலைகளின் நிர்வாகங்களால் கூறப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-10-7)



நுவரெலியா அக்கரப்பத்தனை தோட்டத்திலுள்ள நீர்த் தாங்கியில் நேற்றுக் காலை உயிருடன் சிறுத்தைக் குட்டியொன்று மீட்கப்பட்டுள்ளது. அண்மைக் காலமாக தோட்டப் பகுதிகளில் சிறுத்தைகள் நடமாடி வருவதாகத் தெரிவிக்கப்பட்டுவந்த நிலையில் சிறுத்தைக் குட்டி மீட்கப்பட்டமை மக்களிடையே அச்சத்தைத் தோற்றுவித்துள்ளது. (த-ய-43)

# வன்னிக்குப் போனால் உடம்பு குலுங்குமாம்

## *யாழ்ப்பாண ஆசிரியர்கள் கூறுகின்றனர் என்கிறார் மாகாண சபை உறுப்பினர் பசுபதிப்பிள்ளை*

யாழ்ப்பாணம், ஏப். 7

யாழ்ப்பாண ஆசிரியர்களுக்கு வன்னி மாவட்டங்களுக்கு இடமாற்றம் வழங்கினால் போகமாட்டார்கள். அவர்களின் உடம்பு குலுங்குமாம். இப்படி அவர்கள் புறக்கணித் தால் அந்த மாவட்டங்களின் கல்வி நிலையைக் காப்பாற்றுவது யார்?

இவ்வாறு வடக்கு மாகாண சபையில் கேள்வி எழுப்பினார், கிளிநொச்சி மாவட்ட ஆளும் கட்சி உறுப்பினர் சு.பசுபதிப்பிள்ளை.

மாகாணசபைஅமர்வில்நேற்றுநடைபெற்ற விவாதத்தில் கலந்து கொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஆசிரியர்களுக்கு நியமனம் வழங்கும் செயலரே, அவர்களின் இடமாற்றத்துக்கும் கையெழுத்திடுகின்றார். இப்படியே சென்றால் எமது மாகாணத்தின் கல்வி நிலை எங்கே செல்லும். எந்தெந்த பாடசாலையில், எவ்வாறான பாடங்களுக்குரிய வெற்றிடங்கள் இருக்கின்றன என்பதைக் கல்வி அமைச்சின் செயலரும், அதிகாரிகளும் தெரிந்திருக்கவேண்டும். ஆனால் அவ்வாறு அவர்கள் தெரிந்து வைத்திருப்பதாகத் தெரியவில்லை.

யாழ்ப்பாணத்தில் மிக நீண்டகாலம் பணியாற்றிய ஆசிரியர்களை வன்னிப் பிராந்தியத்துக்கு இடமாற்றம் செய்கின்றபோது, அவர்கள் அங்கு பணிக்குச் செல்வதில்லை. இங்கிருந்து சென்று வர அவர்களது உடம்பு குலுங்குமாம். இப்படி அவர்கள் புறக்கணித்தால் அந்த மாவட்ட மாணவர்களை யார் காப்பாற்றுவது?

நான் மாகாண சபை அமர்வுக்கு வரும்போது, எங்களுடைய கல்வி அமைச்சரின் வாகனத்தில்தான் வந்தேன். போகும்போது அவர் ஏற்றிச் செல்வாரோ தெரியவில்லை - என்றார்.

வடக்கு மாகாண சபையின் முல்லைத்தீவு மாவட்ட உறுப்பினர் து.ரவிகரன், முல்லைத்தீவு மாவட்டத்தை வறுமையான மாவட்டமாக பெயரளவில் சொல்லிக் கொண்டு, அந்த மாவட்டத்தின் கல்வி வளர்ச்சிக்கு யாரும் உதவவில்லை. முல்லைத்தீவு மாவட்டத்துக்கு நியமனம் செய்யப்பட்ட ஆசிரியர்கள் இருவர், அங்கிருந்து இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ளார்கள். அது தொடர்பில் என்னிடமுள்ள ஆதாரத்தை முதலமைச்சரிடமும், அவைத் தலைவரிடமும் தருகின்றேன். எமக்குத் தீர்வைப் பெற்றுத் தாருங்கள். ஏன் வன்னிப் பிராந்தியத்தை ஒதுக்கின்றீர்கள்? அங்குள்ளவர்கள் கல்வியில் முன்னேறக் கூடாதா? இதற்குத்தான் மாவட்ட ரீதியாக நியமனங்களை வழங்குங்கள் என்று சபையில்பிரேரணை நிறைவேற்றினேன் - என்றார்.

ஆளும் கட்சியின் யாழ்ப்பாண மாவட்ட உறுப்பினர் பா.கஜதீபன், முன்னைய ஆட்சிக் காலத்தில் சில அரசியல்வாதிகள் தங்களுக்கு ஏற்றவாறு நியமனங்களை வழங்கினார்கள். தற்போது அதனைவிட மோசமான நிலமை காணப்படுகின்றது. ஆசிரியர் நியமனம் வழங்கப்பட்டு 14 நாள்களுக்குள் அவர்கள் பணியைப் பொறுப்பேற்க வேண்டும். இந்த நிபந்தனையை மீறியவர்களின் நியமனங் களை நீக்கம் செய்துவிட்டு, காத்திருப்போர் பட்டியலில் உள்ளவர்களுக்கு நியமனத்தை வழங்குவது தொடர்பில் பரிசீலியுங்கள் என்று கேட்டுக் கொண்டார். (த-5-8)

பதுக்கி வைக்கப்பட்ட

# 17,150 கிலோ கிராம் அரிசி அரசுடமை

கொழும்பு, ஏப். 7

விலையேற்றத்தை எதிர்பார்த்து கொழும்பு வர்த்தக நிலையத்தில் பதுக்கி வைக்கப்பட்டிருந்தபோது நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபையினரால் மீட்கப்பட்ட 17 ஆயிரத்து 150 கிலோ அரிசியை நீதிமன்று அரசுடமையாக்கியது.

வர்த்தகர் மாளிகாகந்தை மேலதிக நீதிவானிடம் முற்படுத் தப்பட்டபோது அரிசி அரசுடமையாக்கப்பட்டதோடு, 12 ஆயிரம் ரூபா தண்டமும் விதிக்கப்பட்டது.

கொழும்பு 12, பழைய சோனகத் தெருவிலுள்ள கடையொன்றிலிருந்தே இந்த அரிசி மீட்கப்பட்டது.

மீட்கப்பட்ட அரிசியை அரசுடமையாக்கிய நீதிவான், அதை ஏலத்தில் விற்பனை செய்து கிடைக்கும் தொகையை நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபையின் நிதியத்தில் வைப்பிடுமாறு உத்தரவிட்டார். (த-4)

# மின்சார சபை ஊழியர்கள் பணிப்புறக்கணிப்பு போர்

கொழும்பு, ஏப். 7

இலங்கை மின்சார சபை ஊழியர்கள் சிலர் சம்பள முரண்பாடு உள்ளிட்ட பல கோரிக்கைகளை முன்வைத்து நேற்று முன் தினம் நள்ளிரவு முதல் பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தில் குதித்துள்ளனர்.

இதனால் மின் பாவனையாளர்களுக்குப் பெரிய பாதிப்பு எதுவும் இல்லையென மின்சாரசபை நிறைவேற்று அதிகாரியொருவர் தெரிவித்தார்.

நேற்று முன் தினம் நள்ளிரவு முதல்இலங்கைமின்சாரசபையின் தொழிநுட்பத்துறை சார்ந்தவர்கள் தொழிற்சங்கப் பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனார். அவர்களில் அரைவாசிப் பேர் நேற்று வேலைக்குச் சமுகமளித்துள்ளனர். நேற்று பணிப்புறக் கணிப்பில் குதித்தவர்களுக்குப் பதிலாகத் தற்காலிக ஊழியர்கள் அந்தப் பணியில் அமர்த்தப்பட்டுள்ளனர். இதனால் அவசர மின் துண்டிப்பு ஏற்படும்போது அந்தப் பணியாளர்கள் பயன்படுத்தப்படவுள்ளனர். மின்சாரம் தொடர்பான கடமைகள் வழமை போலவே நடைபெற்று வருகின்றது என்றார். (த-10)

# திருட்டு முயற்சி குற்றச்சாட்டில் 2 சிறுவர்கள் கைது

யாழ்ப்பாணம், ஏப். 7
யாழ்ப்பாண நகரில் துவிச்சக்கர வண்டியைத் திருட முயன்றனர் என்ற குற்றச்சாட்டில் சிறுவர்கள் இருவர் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

"யாழ்ப்பாணம் அராலி வீதி, மொம்மை வெளியைச் சேர்ந்த 10, 11 வயதுடைய இரு சிறுவர்களே யாழ். நகரில் வைத்து கைது செய்யப்பட்டனர். யாழ்ப்பாண நகரின் ஸ்ரான்லி வீதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த துவிச்சக்கர வண்டியை குறித்த இரு சிறுவர்களும் எடுத்து செல்ல முயன்ற வேளை அங்கிருந்தவர்களால் பிடிக்கப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர். கைது செய்யப்பட்ட இருவரும் தரம் 5 , தரம் 6 இல் கல்விகற்கும் மாணவர்கள்" என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டது. (ரி-1)

# மகிந்த தரப்பினர் எதிர்க்கட்சி அல்ல

## அனுரகுமார தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 7
ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியிலுள்ள மகிந்த அணி உறுப்பினர்களை எதிர்க்கட்சியாக ஏற்றுக்கொள்ளமுடியாது. அந்த முன்னணியிலுள்ள ஒட்டுமொத்த >> 23

# சிறுமி கொலை வழக்கின் எதிரி செய்தியாளர்களுக்கு மிரட்டல்



யாழ்ப்பாணம், ஏப். 7
நெடுந்தீவு சிறுமி கொலை வழக்கின் எதிரி நீதிமன்ற வாயிலில் வைத்து செய்தியாளர்களை நோக்கி உணவுப் பொதியை வீசியதுடன், கொலை அச்சுறுத்தலும் விடுத்தார்.

நெடுந்தீவில் 2012ஆம் ஆண்டு மார்ச் மாதம் 3ஆம் திகதி 13 வயதுச் சிறுமி ஒருவர் கொடூரமாக வன்புணர்வுக்கு உட்படுத்திக் கொல்லப்பட்டார்.

கொலையைச் செய்தவர் என்ற சந்தேகத்தில் ஈபிடிபியில் இருந்தவர் என்று தெரிவிக்கப்படும் கந்தசாமி ஜெகதீஸ்வரன் (வயது 31) கைது செய்யப்பட்டிருந்தார்.

இந்தக் கொலைக் குற்றச்சாட்டு வழக்கு விசாரணை யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் நீதிபதி மா. இளஞ்செழியன் முன்னிலையில் நேற்று இடம்பெற்றது. வழக்கின் தீர்ப்பை நீதிபதி இன்று வழங்குவார் என்று அறிவிக்கப்பட்டது.

வழக்கு விசாரணைகள் நேற்று மாலை நிறைவடைந்து எதிரியை சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் அழைத்து வந்து சிறைச்சாலை வாகனத்தில் ஏற்றினார்கள். அதனை செய்தியாளர்கள் ஒளிப்படம் எடுத்தனர்.

அதன் போது எதிரி தனது கையில் இருந்த உணவு பொதியினால் செய்தியாளர்களை நோக்கி வீசினார். "இந்த வழக்கை உடைச்சு வெளியே வந்தால் உங்களை வெட்டுவேன்" எனவும் எதிரி அச்சுறுத்தினார்.

அதன்போத சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் எதிரியை சிறைச்சாலை வாகனத்தினுள் ஏற்றினார்கள். ஏற்றிய பின்னரும் வாகனத்தில் இருந்தவாறு சுடுவேன் என கைகளினால் செய்கை மூலம் செய்தியாளர்களை எதிரி அச்சுறுத்தினார். (வ-37)

# ஜேர்மனியில் இலங்கையர் மீது கடும் தாக்குதல்

கொழும்பு, ஏப். 7
ஜேர்மனியில் புகலிடம் கோரிய இலங்கையர் ஒருவர் மூன்று பேர் கொண்ட குழுவினால் தாக்கப்பட்டுப் படுகாய மடைந்திருப்ப தாக ஜேர்மனி ஊடகங்கள் செய்தி வெளி யிட்டுள்ளன.
22 வயதுடைய இளைஞரே தனது இருப்பிடத்துக்குச் செல்லும்போது தாக்குதலுக்கு உள்ளாகியிருக்கிறார். பேருந்து >> 24

# இரு நியதிச் சட்டங்கள் நேற்று நிறைவேற்றம்

யாழ்ப்பாணம் ஏப் 7
வடக்கு மாகாண சபையில் நேற்று இரண்டு நியதிச் சட்டங்கள் நிறைவேற்றப்பட்டன.

நீதிமன்றக் குற்றப் பணங்களையும் தண்டப் பணங்களையும் கைமாற்றுதல் நியதிச் சட்டம் மற்றும் வடக்கு மாகாண சுற்றுலாப் பயணத்துறை அதிகார சபை நியதிச் சட்டம் ஆகியனவே சபையில் முதலமைச்சர் விக்னேஸ்வரனால் முன்மொழியப்பட்டு வடக்கு மாகாண எதிர்க்கட்சித் தலைவர் வழிமொழியப்பட்டு நிறைவேற்றப்பட்டன. இரண்டு நியதிச் சட்டங்களும் தனித்தனியாகச் சபையில் முன்மொழியப்பட்டன. பின்னர் அவை விவாதத்துக்கு எடுக்கப்பட்டுச் சபையின் அங்கீகாரத்துக்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன. இதில் நீதிமன்றக் குற்றப் பணங்களையும் தண்டப் பணங்களையும் கைமாறும் நியதிச் சட்டம் ஆளுநரின் ஒப்புதலுக்காக அனுப்பி வைக்கப்படும் என அவைத் தலைவர் சபையில் தெரிவித்ததுடன், சுற்றுலாப் பயணத்துறை அதிகார சபை நியதிச் சட்டம் நாடாளுமன்றச் செயலாளருக்கு அனுப்பி வைக்கப்படும் எனவும் கூறினார். (த-8)

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்...

*ஐந்து...*
விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள 5 இராணுவத்தினரும் மன்றில் முற்படுத்தப்பட்டனர். சந்தேகநபர்கள் ஐவருக்கு எதிராகவும் சட்டமா அதிபரின் ஆலோசனை கிடைக்கப் பெற்றுள்ளதாக அச்சுவேலிப் பொலிஸார் மன்றில் அறிவித்தனர். அத்துடன், 5 சந்தேகநபர்களுக்கும்எதிராககுற்றப்பத்திரிகையையும் பொலிஸார் மன்றில் முன்வைத்தனர்.
வழக்கை விசாரணை செய்த நீதிவான், 5 இராணுவத்தினருக்கும் எதிரான குற்றச்சாட்டுக்களின் சுருக்க முறையற்ற விசாரணையை ஜூலை மாதம் 14ஆம் திகதி ஆரம்பிக்குமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.
சந்தேகநபர்களை எதிர்வரும் 20ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மன்று உத்தரவிட்டது.
பின்னணி
1997ஆம் ஆண்டு புத்தூர் சிறுப்பிட்டி பகுதியில் சரஸ்வதி சவுந்தரராஜன் மற்றும் முத்துப்பிள்ளை ஜெயசீலன் ஆகியோர் காணாமல் ஆக்கப்பட்டனர். பின்னர் அவர்களை கொலை செய்த குற்றச்சாட்டின் பேரில் சிறுப்பிட்டி இராணுவ முகாமிலிருந்த 16 இராணுவத்தினர் அச்சுவேலி பொலிஸாரால் கைது செய்யப்பட்டு யாழ்ப்பாண நீதிவான் மன்றால் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தனர். இவர்கள் 16 பேருக்கும் எதிராக சட்டமா அதிபரின் ஆலோசனைகள் கிடைக்கப்பெற்றதை தொடர்ந்து யாழ்ப்பாண நீதிவான் மன்றால் அழைப்புக் கட்டளை அனுப்பப்பட்டு, அவர்களில் 14 இராணுவத்தினர் நீதிமன்றில் முன்னிலையாகியிருந்தனர். இருவர் உயிரிழந்துவிட்டனர் என்று மன்றில் கூறப்பட்டு இறப்புச் சான்றிதழ்களும் சமர்ப்பிக்கப்பட்டன.
14 இராணுவத்தினரும் யாழ்ப்பாண நீதிவான் மன்றால் விளக்கமறியலில் வைக்கப்பட்டனர். எனினும் அவர்கள் சார்பில் யாழ்ப்பாண மேல் நீதிமன்றில் பிணை விண்ணப்பம் செய்யப்பட்டது. 14 இாணுவத்தினரில் 5 பேருக்கு பிணை வழங்கப்பட்டது. ஏனையோர் தொடர்ந்தும் விளக்கமறியல் வைக்கப்பட்டிருந்தனர்.
குற்றஞ்சாட்டப்பட்டவர்களில் 9 இராணுவத்தினரை வழக்கு நடவடிக்கைகளிலிருந்து விடுவிக்குமாறு சட்டமா அதிபர் திணைக்களம் அறிவித்தது. இந்த நிலையில் 5 இராணுவத்தினர் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர். அவர்களுக்கு எதிராக நேற்று குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது. (வ -103)

*அரசமைப்புத் ...*
உறுப்பினர்கள் அரசமைப்புச் சீர்திருத்தத்துக்கு மட்டுமே அந்தக் கட்சி ஆதரவு புதிய அரசமைப்பை உருவாக்குவதற்கல்ல என்று வெளியான செய்திகள் முழுப் பொய் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் நேற்று ஊடகங்களுக்குத் தெரிவித்த ஒரு நாளில் சுதந்திரக் கட்சியின் நிலைப்பாடு இப்போதைக்கு அரசமைப்புத் திருத்தத்துக்கே ஆதரவானது என்று அந்தக் கட்சியின் பேச்சாளர் தெரிவித்திருக்கிறார்.
செவ்வாய்க் கிழமை நடைபெற்ற கூட்டத்தைத் தொடர்ந்து புதிய அரசமைப்பு உருவாக்க முயற்சியில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியால் மீண்டும் குழப்பம் என்று உதயன் செய்தி வெளியிட்டிருந்தது. ஆனால் அந்தச் செய்தி முற்றிலும் தவறானது என்றும் புதிய அரசமைப்புக்குத் தமது கட்சி எதிர்ப்பு இல்லை பொது வாக்கெடுப்புத் தேவைப்பட்டால் அப்போது அது பற்றித் தீர்மானிக்கலாம் என்பதே தமது கட்சியின் நிலைப்பாடு என்று அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா புதன்கிழமை கூட்டத்தில் தெளிவுபடுத்தியிருந்தார் என்றும் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் தெரிவித்திருந்தார்.
இந்த நிலையிலேயே இராஜாங்க அமைச்சர் டிலான் பெரேரா நேற்று கட்சியின் நிலைப்பாட்டை செய்தியாளர்களிடம் நேரடியாகத் தெளிவுபடுத்தினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
அரசமைப்பு உபக் குழுக்களின் அறிக்கைகள், வழிநடத்தல் குழுவில் சமர்ப்பிக்கப்பட்டு விவாதங்கள் நடத்தப்பட்டன. இவற்றுடன் வழிடத்தல் குழுவின் பரிந்துரைகளும் உள்ளடக்கிய புதிய அரசமைப்புக்கான வரைவு விரைவில் நாடாளுமன்றில் சமர்பிக்கப்படவுள்ளது. இதற்கான நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.
நாடாளுமன்றம் அரசியல் நிர்ணய சபையாக மாற்றப்பட்டுள்ளது. வழி நடத்தல் குழுவின், புதிய அரசமைப்புக்கான வரைவு நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் இடம்பெறும் கலந்துரையாடல்களின் அடிப்படையிலேயே புதிய அரசமைப்பொன்று கொண்டு வரப்படுமா அல்லது அரசமைப்பு மறுசீரமைப்புச் செய்வதா என்பது தொடர்பில் தீர்மானிக் கப்படும்.
பொது வாக்கெடுப்பொன்றுக்கு தற்போதைய சூழலில் செல்ல முடியாது என்பதால் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் செய்ய கூடிய விடங்களை முன்னெடுப்பதற்கு சிறிலங்கா சுதந்திரக் கட்சி ஆதரவுத் தெரிவித்துள்ளது. ஐக்கிய தேசியக் கட்சிக்கு இதனை நாங்கள் தெளிவுப்படுத்தியுள்ளோம். அதிகாரப் பகிர்வு விடயத்தில் ஐக்கிய தேசியக் கட்சியும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் ஒருமித்த நிலைப்பாட்டுக்கு வரக் கூடிய சூழல் உதயமாகி விட்டது.
**தொழிலாளர் தினம்**
சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மே தினக் கூட்டம் கண்டியில் நடைபெறவுள்ளது. நாடு முழுவதிலும் இருந்து பல்லாயிரக் கணக்கான மக்கள் தொழிலாளர் தினக் கூட்டத்தில் கலந்து கொள்ளவுள்ளனர். அனைத்துத் தொழிற் சங்கங்களையும், எமக்கு ஆதரவான கட்சிகளையும் இணைத்துக்கொண்டு சிறந்த தொழிலாளர் தினத்தை நடத்திக் காட்டுவோம். பொது எதரணியையும் எம்முடன் இணையுமாறு அழைப்பு விடுத்துள்ளோம். பொது எதிரணியில் உள்ள ஒரு சில இனவாதிகளின் கயிற்றை பிடித்துக்கொண்டு முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச பயணிக்கின்றார். இதன் காரணமாக நாட்டு மக்கள் அவர் மீது வைத்துள்ள நம்பிக்கை மேலும் குறைவடையுமே தவிர ஆதரவு பெருக்கமடையாது. எதிரணியில் உள்ள சுதந்திரக் கட்சியினர் ஒருமித்த சுதந்திரக் கட்சியாகப் பயணிக்க ஒன்றிணைய வேண்டும். அன்போது தொழிலாளர் தினக் கூட்டத்தில் கூடும் கூட்டத்தை கண்டும் ஐக்கிய தேசியக் கட்சியின் முகவரி காணாமல் போய்விடும் - என்றார். (2-5)

*கால...*
தீர்மானித்துள்ளது. வடக்கில் நடைபெறும் தொடர் போராட்டங்கள் சம்பந்தமாக, அரச தலைவர் மைத்திரிபால மற்றும் தலைமை அமைச்சர் ரணில் ஆகியோரையும் அவசரமாகச் சந்திப்பதற்கும் கூட்டமைப்பின் நேற்றைய நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுக் கூட்டம், எதிர்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் தலைமையில் நேற்று நடைபெற்றது. இதில் பேசப்பட்ட விடயங்கள் தொடர்பில் கட்சியின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்ததாவது:
"மூன்று விடயங்கள் ஆராயப்பட்டன. அரசமைப்பு விவகாரத்தில் என்ன நடைபெறுகின்றது என்பது தொடர்பில் உறுப்பினர்களுக்கு விளக்கமளிக்கப்பட்டது. ஐ.நா. தீர்மானத்தை நடைமுறைப்படுத்த 2 வருடங்கள் இலங்கைக்கு அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. இந்தக் காலப் பகுதியில் தீர்மானத்தை எவ்வாறு நடைமுறைப்படுத்துவது என்பது தொடர்பில் கால அட்டவணையை கூட்டமைப்பு தயாரிக்கவுள்ளது. இதனை இலங்கை அரசுக்கும், பன்னாட்டுச் சமூகத்துக்கும் வழங்க தீர்மானித்துள்ளோம்.
வடக்கில் காணி விடுவிப்புக்கான தொடர் போராட்டங்கள் நடைபெறுகின்றன. எமது உறுப்பினர்களை, காணி விடுவிப்பு தொடர்பான விவரங்களை மூன்று நாள்களில் திரட்டச் சொல்லியுள்ளோம். அது கிடைக்கப் பெற்றதும் அரசுக்கு கடிதம் அனுப்பவுள்ளோம். அத்துடன் அரச தலைவரையும், தலைமை அமைச்சரையும் நேரில் சந்தித்துப் பேசவும் முடிவு செய்துள்ளோம் என்றார். (வ-5)

*10 அத்தியவசியப்...*
975 ரூபாவுக்கு பெற்றுக்கொள்ளலாம் என்று நிதி அமைச்சு நேற்று அறிவித்தது.

"ஒரு கிலோ பருப்பு, 500 கிராம் உருளைக் கிழங்கு, ஒரு கிலோ கிராம் பெரிய வெங்காயம், 2 கிலோகிராம் அரிசி,, 500 கிராம் கருவாடு, ஒரு கிலோ கிராம் சீனி, 425 கிராம் ரின் மீன், 200 கிராம் துண்டு மிளகாய், 500 கிராம் பாசிப் பயறு மற்றும் 400 கிராம் பால்மா அடங்கிய பொதியே 975 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படவுள்ளது. இந்த விலைக் குறைப்பானது ஏப்ரல் மாதம் 10 ஆம் திகதி முதல் 20 ஆம் திகதி வரை நடைமுறையில் இருக்கும்" என்று நிதி அமைச்சு தெரிவித்தது. (வ-5)

*கடலில் மூழ்கி...*
என்பவரே இவ்வாறு உயிரிழந்தார்.
"அவர் நேற்று வியாழக் கிழமை காலை 5.30 மணிக்கு வள்ளத்தில் மீன்பிடிக்கச் சென்றுள்ளார்.
காலை 10 மணியளவில் வீடு திரும்பாததையடுத்து, மனைவி மற்றும் உறவினர்கள் அவரைத் தேடிச் சென்றனர். நீரிழ் மூழ்கிய நிலையில் இருப்பதை அவர்கள் அவதானித்துள்ளனர். மயக்கமடைந்த அவரை உடனடியாக காரைநகர் வைத்தியசாலையில் சேர்த்துள்ளனர். அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு அவரை மாற்றியுள்ளனர். யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை மருத்துவர்கள், அவர் உயிரிழந்து விட்டார் என்று தெரிவித்தனர்" என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (வ-5,106)

# கேள்விகளால் விக்கியை துளைத்தெடுத்தார் தவராசா

யாழ்ப்பாணம், ஏப் 7

வடக்கு எதிர்க்கட்சித் தலைவரால் முதலமைச்சரிடம் கேட்கப்பட்ட வினாக்களுள் அநேகமானவற்றுக்கு, தனக்குத் தகவல்கள் தெரியப்படுத்தப்படவில்லை என்றே முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் பதிலளித்தார்.

வடக்கு மாகாண சபையின் நேற்றைய அமர்வில் எதிர்க்கட்சித் தலைவர் பல வினாக்களை முதலமைச்சரிடம் கேட்டிருந்தார்.

ஒட்டிசுட்டான் பிரதேச செயலர் பிரிவில் இந்திய அரசின் உதவியுடன் பயிற்சிப் பாடசாலை அமைப்பது தொடர்பாக முயற்சிகள் ஏதும் இடம் பெற்றுள்ளனவா என எதிர்க்கட்சித் தலைவர் கேட்டார். இதற்கு முதலமைச்சர், எனக்கு இது தொடர்பில் எந்த அறிவித்தல்களும் தெரியப்படுத்தப்படவில்லை எனப் பதிலளித்தார்.

" கிடைக்கும் சந்தர்ப்பங்களை நாம் வேண்டாம் என்று தட்டிக்கொண்டே போகின்றோம். இந்திய அரசால் பயிற்சிப் பாடசாலை அமைக்க முயற்சிகள் எடுக்கப்பட்டன. அது உங்களுக்கு தெரியாமல் இருக்கலாம். உங்கள் அதிகாரிகளிடம் கேளுங்கள். இதற்கு என்னிடம் நம்பந்தகுந்த ஆதாரங்கள் உள்ளன. எமது நாட்டை விடுத்து பிற நாடு ஒன்றுடன் சம்பந்தப்பட்ட விடயம் என்பதால் நான் இங்கு இதைப்பற்றிக் கதைக்கவில்லை. என்றார் எதிர்க்கட்சித் தலைவர்.

மேலும் சில வினாக்களைச் சபையில் தவராசா முதலமைச்சரிடம் முன்வைத்தார்.

வடக்கு மாகாணத்தின் பொருளாதார மற்றும் அபிவிருத்தி தொடர்பான விடயங்களைத் தங்கள் சார்பில் கொழும்பு அரசின் அமைச்சுக்களுடன் ஒருங்கிணைப்பதற்கு யாரையாவது பன்னாட்டு வர்த்தக மற்றும் திறன்முறை அபிவிருத்தி அமைச்சுக்குச் சிபாரிசு செய்துள்ளீர்களா? என்று தவராசா கேள்வி எழுப்பினார்.

அவ்வாறு நான் யாரையும் சிபாரிசு செய்யவில்லை. என்றார் முதல்வர்.

இல்லை நீங்கள் தலைமை அமைச்சர் ரணிலுக்கு எழுதிய கடிதம் என்னிடம் இருக்கின்றது. என்றார் தவராசா

இதற்கு முதலமைச்சர் எழுதியது உண்மை. ஆனால் மலிக் சமரவீரவைச் சிபாரிசு செய்யக் கேட்பதாக எழுதி அனுப்பினேன். நாங்களாக எதையும் செய்யவில்லை. நியமனம் எதுவும் வழங்கவில்லை.- என்றார்.

தவராசா: ஏப்ரல் மாதத்தில் நோர்வே அரசின் அனுசரணையுடன் புலம்பெயர் தமிழ் முதலீட்டாளர்களுடன் வடக்குகிழக்கு மாகாணங்களில் கலந்துரையாடல் நடைபெறவிருப்பதை முதலமைச்சர் அறிவாரா? - என்று

முதலமைச்சர்: இல்லை. எனக்குத் தெரியாது. அது தொடர்பாக அறியத் தரவில்லை என்றார் முதல்வர்.

கடந்த காலங்களில் நீர் மாசடைந்தமை ஒரு பிரச்சினையாக இருந்தாலும் வெளிநாடுகளில் நீர் மாதிரிகள் பரிசோதனை செய்யப்பட்டதில் ஒயிலின் அளவு அபாய நிலையிலும் குறைவாகவே உள்ளது எனப் பிரிட்டன் தூதுவரிடம் கூறிய கருத்து தொடர்பான கேள்விக்கு அடுத்த அமர்வில் பதிலளிப்பதாக முதலமைச்சர் தெரிவித்தார். (த-8)

# வில்பத்து வர்த்தமானியை அரசு மீளப்பெறவேண்டும்

## வடக்கு மாகாண சபையில் தீர்மானம்

யாழ்ப்பாணம் ஏப் 7

மாவில்லு வனப்பாதுகாப்பு பிரதேசமாக அறிவிக்கும் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவின் வர்த்தமானி அறிவித்தலை 'மீளப்பெற வேண்டும் என்று வடக்கு மாகாண சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. வடக்கு மாகாண சபை உறுப்பினர் அஸ்மினால் இந்தப் பிரேரணை முன்மொழியப்பட்டது.

வடக்கு மாகாண எல்லைக்கு உட்பட்ட முசலிப் பிரதேசத்தின் மறிச்சுக்கட்டி , கரடிக்குளி, அருவியாற்றின் வவுனியா மன்னார் எல்லைப்புற மாவில்லு வனப்பாதுகாப்புப் பிரதேசமாக அறிவிக்கும் வர்த்தமானி அறிவித்தலும், மறிச்சுக்கட்டிப்பிரதேசத்தை வில்பத்து விலங்குகள் சரணாலயத்தின் புற எல்லைப் பகுதியாக அறிவிக்கும் வர்த்தமானி அறிவித்தலும் 13 ஆம் திருத்தச்சட்டத்தின் மூலம் மாகாணங்களுக்கு வழங்கப்பட்டிருக்கும் காணி அதிகாரங்களைக் கருத்தில் எடுக்காமலும் போருக்குப்பிந்திய சூழ்நிலையில் மக்களின் மீள்குடியேற்றச் செயற்பாடுகளைக் கருத்தில் எடுக்காமலும் மேற்கொள்ளப்பட்ட வர்த்தமானி அறிவித்தலாக உள்ளது.

இதனை உடனடியாக இரத்துச் செய்து மக்கள் நலனுக்கு உறுதியான நடவடிக்கையை எடுக்கவேண்டும் என்று அரசதலைவரை இந்தச்சபை கோருகின்றது எனப் பிரேணையை முன்மொழிந்தார் அஸ்மின்.

வடக்கு முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவிக்கையில்,

வர்த்தமானியில் உள்ள விடயங்களை படித்து அறியவேண்டும். இதனை அடுத்த அமர்வுக்கு ஒத்திவைக்க வேண்டும் என்றார்.

கே.சிவாஜிலிங்கம், இதனை பிற்போட முடியாது. மக்களின் காணி, மீள்குடியேற்றப் பிரச்சினை சார்ந்தது. இந்த அமர்விலேயே எடுத்து நிறைவேற்ற வேண்டும். முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச முஸ்லிம் மக்களுடன் மேற்கொண்ட முரண்பாடுகள் காரணமாக பதவியை இழந்து இருக்கின்றார். அதேபோல அரச தலைவர் மைதிரிக்கும் காலம் நெருங்கிவிட்டது -என்றார்.

ஏனைய உறுப்பினர்களின் ஆதரவுடன் குறித்த பிரேர நிறைவேற்றப்பட்டது. (த-8)

**இந்திய சாத்திரியார் வருகை**

சிங்கப்பூர், மலேசியா மற்றும் பல
நாடுகளில் புகழ் பெற்றவரும்
ஓம் சக்தி அருள் வாக்கு

**S.N.குமாரசாமி** அவர்கள்

ஜாதகம் கைரேகை எண்கணிதம். திருமணத்தடை, குழந்தை பாக்கியம், வெளிநாடு, செல்லத்தடை, தொழில் விருத்தி இல்லையா? புதிய தொழில் தொடங்கவேண்டுமா? குடும்பத்தில் பிரச்சனையா, கல்வித்தடையா? எந்த பிரச்சனைக்கும் நேரில் சந்திக்கவும்...

முன்பதிவுக்கு: 071 520 2899
காலை: 9.00 மணி முதல்
6.00 மணிவரை
இடம்: வசந்தி லொஜ்
A9, வீதி, வவுனியா.

# மாகாண மட்டத்தில் 1,051 வெற்றிடங்கள்

## சபையில் கூறினார் சி.வி.கே.

யாழ்ப்பாணம் ஏப் 7

வேலைதேடும் பட்டதாரிகளின் பிரச்சினைகளுக்குத் தீர்வை வழங்கும் வகையில் மாகாண அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களில் ஆயிரத்து 51 வெற்றிடங்கள் காணப்படுவதாக அவைத்தலைவர் சி.வி.கே. சிவஞானம் சபையில் தெரிவித்தார்.

வடக்கு மாகாண் சபையின் நேற்றைய அமர்வில் அவர் மேலும் கூறியதாவது:

வேலையற்ற பட்டதாரிகளின் பிரச்சினைக்குத் தீர்வு வழங்கும் வகையில் வடக்கு மாகாண சபையின் அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களில் அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு 180 வெற்றிடமும், சுகாதார திணைக்களத்தில் 22 வெற்றிடமும், முதலமைச்சர் அமைச்சில் 15 வெற்றிடங்களும், உள்ளகக் கணக்காய்வு பணிகளுக்கு 13 வெற்றிடங்களும், ஆசிரியர் நியமனத்தில் 821 வெற்றிடங்களும் உள்ளன.

இந்த வெற்றிடங்களுக்குப் பொருத்தமானதகுதியுடைய பட்டதாரிகளைப் பணியில் இணைப்பதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றார். (த-8)

# வடக்கு அமைச்சரவையே அபிவிருத்திக்கு இடையூறு

## ஆளும்கட்சி உறுப்பினர் காட்டம்

யாழ்ப்பாணம் ஏப் 7

மாகாண சபை உறுப்பினர்களுக்காக ஒதுக்கப்பட்ட நிதியின் ஊடாகச் செய்யவுள்ள அபிவிருத்தித் திட்டங்களுக்கு வடக்கு மாகாண அமைச்சரவையே அனுமதி மறுத்துள்ளது. 4 மில்லியன் ரூபாவில் திட்டமே தரவேண்டும் எனவும் கோரப்பட்டுள்ளது. நான்கு, ஐந்து திட்டங்கள் வழங்கப்பட்டால் அவற்றை ஏற்றுக் கொள்ளமாட்டோம் என்று அறிவித்துள்ளார்கள். இதனை ஏற்றுக் கொள்ளமுடியாது என்று ஆளும் கட்சி உறுப்பினர் ஜி.ரி.லிங்கநாதன் சபையில் காட்டத்துடன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள்அனைவருக்கும் காரணிகளை அடிப்படையாகக் கொண்ட கொடையில் இருந்து வழங்கப்படும் நிதிக்கு மேலாக மாகாண குறித்தொதுக்கப்பட்ட நன்கொடை ஒதுக்கீட்டில் இருந்து 4 மில்லியன் ரூபா வழங்கப்படும் எனக் கடந்த பெப்ரவரி மாதம் 25 ஆம் திகதி நடைபெற்ற கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

உறுப்பினர்களுக்கு மேலதிகமாக ஒதுக்கப்பட்டுள்ள 4 மில்லியனும் மாகாணக் குறித்தொதுக்கப்பட்ட நன்கொடையிலிருந்து வழங்கப்படுவதால் அவை தொடர்ந்து இனங்காணக் கூடியதாக இருத்தல் வேண்டும். இரண்டு மில்லியன் ரூபாவுக்கு 4 அபிவிருத்தித் திட்டங்களுக்கு மேற்படாத திட்டங்களை உறுப்பினர்கள் முன்மொழியலாம். மிகுதி இரண்டு மில்லியன் ரூபாவும் உள்ளூராட்சி வீதி அபிவிருத்திக்கு ஒதுக்கப்படும்.

உறுப்பினர்கள் தாம் விரும்பும் உள்ளூராட்சிச் சபை வீதிகளைத் தெரிவு செய்து முன்மொழியலாம் என்ற தீர்மானங்கள் எடுக்கப்பட்டிருந்தன.

தீர்மானம் எடுத்த பின்னர் இப்போது நான்கு மில்லியன் ரூபாவில் ஒரே திட்டம்தான் செய்யலாம் என வடக்கு அமைச்சரவை கூறுகின்றதுஎன்றார்.

இதற்குப் பதிலளித்த முதலமைச்சர், குறித்த கூட்டத்தில் நான் இருக்கவில்லை. ஆகையால் இந்த முடிவு தொடர்பில் ஆலோசிக்க வேண்டும்என்றார்.

அமைச்சரவை இந்தச் சபையை விடக் கூடிய அதிகாரம் கொண்டதல்ல என அவைத் தலைவர் சிவஞானம் கூற, நீங்கள் எடுத்த தீர்மானத்தை அமைச்சரவை ஏற்கவேண்டும் எனக் கூறுவது தவறு என்றார் முதலமைச்சர். அன்றைய கூட்டத்தில் அமைச்சர்கள் யாரும் இருந்தார்களா? எனவும் அவர் கேள்வியெழுப்பினார்.

அவைத் தலைவர், இந்த அவையை விட அமைச்சரவை ஒன்றும் பெரிதல்லஎன்றார்.

சூடான விவாதம் இடம் பெற்றுக்கொண்டிருந்த போது எழுந்த சுகாதார அமைச்சர் சத்தியலிங்கம், இந்த விடயத்தை இதில் வைத்துக் கதைத்து நேரத்தை வீணடிக்காது ஒரு நேரத்தை ஒதுக்கிச் சபைக்கு வெளியே கதையுங்கள்என்றார். (த-8)

உ
சிவமயம்

**சிவபூமி முதியோர் இல்லம்**

**தொல்புரம், சுழிபுரம்**

SIVA POOMI

**பத்தாவது ஆண்டு பூர்த்தி விழா**

காலம்: 08.04.2017 சனிக்கிழமை பி.ப. 3.30 மணி

இடம் : பாலச்சந்திரன் மண்டபம்
சிவபூமி முதியோர் இல்லம்

தலைவர்: செஞ்சொற்செல்வர்
கலாநிதி ஆறு. திருமுருகன்
(தலைவர், சிவபூமி அறக்கட்டளை)

பிரதம விருந்தினர்: திரு.திருமதி கந்தையா நீலகண்டன் தம்பதிகள்
(தலைவர், அகில இலங்கை இந்துமாமன்றம்)

சிறப்பு விருந்தினர்கள்: திரு.நா.வேதநாயகன் தம்பதிகள்
(அரச அதிபர், யாழ். மாவட்டம்)
திரு.வை. ஈழலிங்கம் தம்பதிகள்
(இளைப்பாறிய கணக்காளர்)

ஆவண ஒளிநாடா வெளியீடு "தரிசனம்"

சிறப்பு மலர் வெளியீடு: "சிவபூமி நிழல்"

கலை நிகழ்ச்சிகள் நடைபெறும்

இறையருளாலும், பெரியவர்களின் ஆசியாலும், அன்பர்களின் ஆதரவாலும் எமது இல்லம் பத்தாவது ஆண்டில் கால்பதித்து சிறப்பாக இயங்கி வருகிறது. எமது இல்லத்தில் தற்போது 79 முதியோர்கள் பராமரிக்கப்பட்டு வருகிறார்கள். எமது இல்லம் ஆரம்பிக்கப்பட்டு பத்து ஆண்டுகள் பூர்த்தியாகின்றது. பத்தாவது ஆண்டு நிறைவு விழாவை சிறப்பாகக் கொண்டாடி மகிழ தங்களை அன்புடன் அழைக்கின்றோம்

சிவபூமி முதியோர் இல்லம்,
தொல்புரம்,
சுழிபுரம்.
021 225 0085

நிர்வாக சபை,
சிவபூமி அறக்கட்டளை
021 222 7938

THE HALO TRUST

**கருவிகள் திருத்துநர்களுக்கான (Tools repair man) பதவி வெற்றிடம்**

ஹெலோ ரஸ்ட் ஆனது பிரித்தானியாவைத் தளமாகக் கொண்டு உலகளாவிய ரீதியில் 16 நாடுகளில் இயங்கிக் கொண்டிருக்கின்றது. இலங்கையில் 2002 ஆம் ஆண்டு தொடக்கம் மிதிவெடிகள் மற்றும் வெடிக்கத்தக்க பொருள்களை அகற்றிக்கொண்டிருக்கின்றது.

கிளிநொச்சியைத் தளமாகக் கொண்டு இயங்கிவரும் எமது வாகனத்திருத்தகத்தில் மிதிவெடி அகற்றும் உபகரணங்களைத்திருத்துவதற்காக அனுபவமுள்ளவர்களிடம்விண்ணப்பங்கள் எதிர்பார்க்கப்படுகின்றது.

**அத்தியாவசிய தகுதிகள்:**

- குறைந்தது மூன்றுவருடங்கள் இத்தொழிலில் அனுபவம் கொண்டிருத்தல் வேண்டும்.
- கடினவேலை செய்யக்கூடிய ஆர்வமுடையவராகவும் நல்ல தேகாரோக்கிய முடையவராகவும் இருக்க வேண்டும்.
- கிளிநொச்சியைச் சார்ந்தவர்கள் விரும்பத்தக்கது.

ஆர்வமுள்ளவர்கள் உங்களுடைய சுயவிவரக்கோவை மற்றும் தொடர்பு கொள்ளவேண்டிய விபரங்களை கீழ் உள்ள முகவரிக்கு சமர்ப்பிக்கவும்.

**ஹெலோ ரஸ்ட், 450,திருநகர் மேற்கு, கிளிநொச்சி.**

அனைத்து விண்ணப்பங்களும் (12/04/2017) புதன்கிழமைக்கு முன்ன தாக சமர்ப்பிக்கப்படவேண்டும். தேர்ந்தெடுக்கப் பட்ட குறுகிய விண்ணப்பதாரிகளுக்கு மட்டும் நேர்முகத் தேர்வுக்கான அழைப்புவிடுக்கப்படும் என்பதை நினைவில் கொள்ளவும்.

## கண்ணீர் அஞ்சலி



கிளிநொச்சி வலயக்கல்வி அலுவலகத்தில் முகாமைத்துவ உதவியாளராகக் கடமையாற்றும் திருமதி கீதாமணி உமாசங்கர் அவர்களின் அன்புத் தாயார்

**சிவமணிகந்தசாமி**

அவர்கள் 03.04.2017 திங்கட்கிழமை இறைபதம் அடைந்துள்ளார். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்பதுடன் அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கும் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**ஊழியர் நலன்புரிச்சங்கம்,**
**வலயக்கல்வி அலுவலகம், கிளிநொச்சி.**

## மரண அறிவித்தல்கள்

### செபஸ்ரி இருதயநாதர்



பிறப்பு 07.05.1924 இறப்பு 05.04.2017

மண்டைதீவு, 3ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம், 380, பாங்சால்வீதியை வதிவிடமாகவும் கொண்ட செபஸ்ரி இருதயநாதர் 05.04.2017 இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செபஸ்ரி - மரியம்மா தம்பதிகளின் அன்பு மகனும், இராசமலரின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான ஆசீர்வாதம்பிள்ளை - மரியாச்சி தம்பதிகளின் அன்பு மருமகனும், பீற்றர்தாஸ், அஞ்சலோபீற்றர், அனற் ஜீவா (ஆஸ்திரேலியா)வின்சன் போல் (ஆஸ்திரேலியா), இருதயமலர் (நோர்வே), பீற்றர்போல், அருட்தந்தை பெற்றூஸ் தயா பரன் ஆகியோரின்அன்புத்தந்தையும், ஜொய்சி, றூபவதி, பிரான்சிஸ், கனியுஸ்ரா, காலஞ்சென்ற வனிதா, ஞானசீலன் ஆகியோரின் மாமனாரும், சுவீற்றி, பிரசாத், மயூறி, கியூறி, சாம், பிறின்சிசோனியா, சாரா, சரண்யா, மரிஷர்ப்ஸ்ரியன், மெலனி, ஜெரிக்கா, ஷோன் ஆகியோரின் பேரனும், அஸ்வின், ஆன்றீயா, அஸ்வீனா, றித்திக்கா ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடலானது 11.04.2017 செவ்வாய்க்கிழமை காலை 7 மணியளவில் மண்டைதீவிலுள்ள அவரது இல்லத்துக்கு எடுத்துச்செல்லப்பட்டு முற்பகல் 9.30 மணியளவில் மண்டைதீவு புனித பேதுருவானவர் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு நல்லடக்கம் செய்யப்படும்.

**தகவல்:**
**அருட்பணி J.P.தயாபரன்**

077 609 5749, 077 749 5917



### சுப்பிரமணியம் இராசையா

யாழ்.மண்டைதீவு 7 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், இல.442, பருத்தித்துறை வீதி, நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் இராசையா 05.04.2017 புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - அன்னபூரணம் தம்பதிகளின் அன்புமகனும், காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் - அன்னமுத்து 'தம்பதிகளின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற வசந்தலட்சுமியின் பாசமிகு கணவரும், காலஞ்சென்றவர்களான கைலாசபிள்ளை, தில்லைநாதன், விநாயகரத்தினம், கனகம்மா ஆகியோரின் அன்புச் சகோதரரும், தேன்மொழி (கனடா), கிருபாகரன் (சுவிஸ்), சுதாகரன், பிரபாகரன் (ஜேர்மனி), ஐங்கரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், மனோகரன் (கனடா), தர்ஷா (சுவிஸ்), கோகிலவதனி (ஜேர்மனி), சுபாஷினி ஆகியோரின் அன்பு மாமனாரும், கிரிஷாந், ஷரிஸ், டினுஷ், தபினா, டினுஜா, டர்சிதா ஆகியோரின் பாசமிகு பேரனும், காலஞ்சென்ற குமரகுரு, அன்னலட்சுமி, ஐயாத்துரை மற்றும் இராசலட்சுமி ஆகியோரின் மைத்துனரும், காலஞ்சென்ற மகேந்திரலிங்கம் மற்றும் சற்குணலிங்கம், விஜயரூபன், காந்தரூபன், நாகலோஜினி, லிங்கரூபன் ஆகியோரின் சிறிய தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.04.2017) வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக யாழ்ப்பாணம், கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**

077 904 5745

அமரர் ஆசிரியர்

## சி.பொன்னம்பலம் (ஆதவன்)

### நூற்றாண்டு நினைவு [1917 - 2017]



### நூற்றாண்டு நினைவு மலர் வெளியீட்டு விழா

காலம் :- 09.04.2017 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு
இடம் :- கலாசார மண்டபம் அளவெட்டி (அருணோதயக் கல்லூரி முன்பாக)
தலைவர் :- திரு.இ.சர்வேஸ்வரா
(உதவிப் பதிவாளர், மருத்துவபீடம், யாழ். பல்கலைக்கழகம்)

**நிகழ்வுகள்**

1. நினைவுரை – அளவெட்டியில் "ஆதவன்"
திரு.வை.பாலசுப்பிரமணியம் (தலைவர் - அளவெட்டி மகாஜன சபை)
2. நூற்றாண்டு மலர் ஒரு கண்ணோட்டம் – திரு.ம.பா.மகாலிங்கசிவம்
(சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் (தமிழ்) வலிகாமம் வலயம்)
6. நினைவு மலர் வெளியீட்டுரையும் முதற்பிரதி வழங்கலும்
திருமதி சிவமலர் அனந்தசயனன்
(ஓய்வுநிலை அதிபர், தெல்லிப்பழை மகாஜனக்கல்லூரி)
முதற்பிரதி பெறுபவர் - திருமதி பவானி கோபாலசர்மா
(பழைய மாணவி, ஸ்கந்தவரோதயக் கல்லூரி)

**"அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்"**

**"ஆதவன்' குடும்பத்தினர்.**

Tribute to Mrs. **ThanalakshmySaravanapavananthan**
(Retired Professor of Pharmacology, Faculty of Medicine, University of Jaffna)



It is with deep regret that we received the information that Mrs. Saravanapavananthan passed away. She and her husband served the Medical Faculty with devotion from the inception of the Medical Faculty to 1991 until her son went missing. She would have continued to serve the Faculty if not for her great loss.

Before joining the Faculty she worked as an Anesthetist in different parts of the country including the Jaffna Teaching Hospital.

We grieve with our entire Alumni over the passing of the legend who has contributed numerous ways to the Faculty of Medicine and the Community.

**The Alumni**
Faculty of Medicine, University of Jaffna.

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

**அமரர் கந்தையா சிவபாலன்**

பிறப்பு 09.01.1948

இறப்பு 08.03.2017



கடந்த 08.03.2017 புதன்கிழமை இறைபதம் அடைந்த எங்கள் குடும்பத் தலைவர் கந்தையா சிவபாலன் அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வு அன்னாரின் இல்லத்தில் நடைபெற இருப்பதால் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் இந்தநிகழ்விலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**கிளுவானை, களபூமி,**
**காரைநகர்.**

குடும்பத்தினர்.


### வேலையாள்கள் தேவை

யாழில் இயங்கும் பிரபல வர்த்தக நிலையத்துக்கு சிட்டை எழுதுநர், உதவியாளர்கள் உடன்தேவை.

021 492 3724

### உடனடி வேலைவாய்ப்பு

- தோட்ட பராமரிப்பாளர்
- Room Boy

வேலை செய்ய விருப்பம் உடையவர்கள் நேரில் வரவும்.

தொடர்புக்கு: பிள்ளையார் இன்
இல. 31, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.

021 222 2829, 077 221 5167

### பணிப்பெண் தேவை

யாழ்ப்பாண வீட்டில் தங்கியிருந்து வீட்டு வேலை யாவும் செய்யக்கூடிய சுகதேகியான 45 வயதுக்கு மேற்பட்ட பணிப்பெண் தேவை.
சம்பளம் பேசித்தீர்மானிக்கப்படும்.

076 310 3885

### வீடு வாடகைக்கு

யாழ். வைத்தீஸ்வராச் சந்திக்கு அருகாமையில் வீடு வாடகைக்கு உண்டு.

076 984 1379, 077 922 9032

### வவுனியாவில் வேலைவாய்ப்பு

சந்தைப்படுத்தல் முகாமையாளர் உதவியாளர் மற்றும் கணினி டிசைனர்கள் தேவை. சம்பளம் 20000/= மேல் தங்குமிடம் இலவசம்.

077 758 5969

### கைபேசி திருத்தல் - கற்கை நெறி
**Mobile Phone Repairing Course**

காலம்: 30 மணித்தியாலங்கள்
(வார நாள், வார இறுதி நாள் பிரிவுகள்)
நேரம்: காலை 9.00 மணிமுதல் மாலை வரை



SUN BRITISH COLLEGE

விபரங்களுக்கு - 0779713221

| 45A, சென் பெனடிக் ஒழுங்கை, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம் | 26, 1st மாடி, புகையிரத நிலைய வீதி, வவுனியா |
| --- | --- |

MAJESTIC CINEPLEX
A CEYLON THEATRES CINEMA Jaffna
கார்கில்ஸ் ஸ்குவெயர்
(யாழ் போதனா வைத்தியசாலை எதிரில்)
இப்பொழுது திரையில்










விசாரணை 021- 2227712
MajesticCineplexSL
www.ceylontheatres.lk

# தேசிய டெங்கு கட்டுப்பாட்டு வாரத்தில் தென்மராட்சியில் 29 பேர் மீது வழக்கு

சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் கடந்த வாரம் முன்னெடுக்கப்பட்ட தேசிய டெங்கு கட்டுப்பாட்டு வாரத்தில் ஆறு நாட்களில் 6 ஆயிரத்து 249 இடங்களில் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. 39 இடங்களில் டெங்கு நுளம்பு உற்பத்தியாகக் கூடிய நிலையில் குடியிருப்புகளில் நீர் நிலைகள் காணப்பட்டன. அவற்றின் உரிமையாளர்களான 29 பேருக்கு எதிராக சாவகச்சேரி நீதிவான் மன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளன"

இவ்வாறு சுகாதாரத் திணைக்களத்தினர் தெரிவித்தனர்.

"தேசிய டெங்குக் கட்டுப்பாட்டு வாரத்தில் சுகாதாரப் பகுதியினருடன் தென்மராட்சி பிரதேச செயலக அலுவலர்கள், படையினர், சாவகச்சேரி மற்றும் கொடிகாமம் பொலிஸ் நிலையங்களின் சுற்றாடல் பாதுகாப்புப் பொலிஸார், சாவகச்சேரி நகர சபையினர், சாவகச்சேரி பிரதேச சபையினர் மற்றும் கிராமிய டெங்குக் கட்டுப்பாட்டுக் குழுவினர் இணைந்து பரிசோதனை நடவடிக்கைகளை முன்னெடுத்தனர். டெங்கு நுளம்பு உற்பத்தியாகக் கூடிய பொருள்கள் காணப்பட்ட 2 ஆயிரத்து 366 இடங்களில் 533 பேருக்கு சிவப்பு அறிவித்தல் வழங்கப்பட்டன.

இந்த வருடத்தில் தென்மராட்சிப் பிரதேசத்தில் டெங்கு நோய்த் தொற்றுத் தாக்கம் அதிகமாகக் காணப்பட்டதால் சாவகச்சேரி பிரதேச செயலகத்தின் எற்பாட்டில் நான்கு தடவைகள் டெங்கு கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. 50க்கும் மேற்பட்டோருக்கு எதிராக வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன. நீதிமன்றால் குடியிருப்பாளர்களுக்கு தண்டம் விதிக்கப்பட்டது" என்று சுகாதாரத் துறையினர் தெரிவித்தனர். (வ-9)

# பளை பேருந்து நிலையத்தில் நவீன முறையில் கழிப்பறை

பளை, ஏப். 7

பளை பேருந்து நிலையத்தில் சிறப்புத் தேவையுடையோர் பயன்படுத்தக் கூடிய வகையில் நவீன முறையிலான கழிப்பறை நிர்மாணிக்கப்படவுள்ளது.

வடக்கு மாகாண போக்குவரத்து அமைச்சால் இந்தக் கழிப்பறை அமைக்கப்படவுள்ளது என்று பச்சிலைப்பள்ளிப் பிரதேச சபையினர் தெரிவித்தனர்.

பளை நகரப் பகதியில் உள்ள இரட்டைக்கேணி அம்பாள் ஆலயத்துக்கு வரும் அடியார்களின் நலன் கருதி 2 லட்சம் ரூபா செலவில் கழிப்பறை அமைக்கப்படவுள்ளது. இதற்கான நிதியை வடக்கு மாகாண சபை உறுப்பினர் ப.அரியரத்தினம் ஒதுக்கீடு செய்துள்ளார் எனவும் பிரதேச சபையினர் தெரிவித்தனர். (வ-9)

# வலி. வடக்கிலிருந்து மரக்குற்றிகளை கடத்திய குற்றச்சாட்டில் இருவர் கைது

*பொலிஸார் தெரிவிப்பு*

"வலி.வடக்குப் பிரதேசத்திலிருந்து வேப்பமரக் குற்றிகளைக் கடத்தினார்கள் என்ற குற்றச்சாட்டில் 2 பேர் கைது செய்யப்பட்டனர். அவர்களால் கொண்டு செல்லப்பட்ட மரக்குற்றிகளும் அவற்றை ஏற்றிச் சென்ற 2 லாண்ட் மாஸ்டர்களும் தடுத்துவைக்கப்பட்டுள்ளன"

இவ்வாறு தெல்லிப்பழைப் பொலிஸார் தெரிவித்தனர்.

"வலி . வடக்கில் விடுவிக்கப்பட்ட பகுதிகளில் மக்கள் மீளக்குடியமராத வெற்றுக் காணிகளில் உள்ள பயன்தரு மரங்கள் அண்மை நாட்களாக தொடர்ந்து திருடப்படுவதாக முறைப்பாடுகள் கிடைத்தன. அவை தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டன. கடந்த செவ்வாய்க் கிழமை மேற்கொண்ட திடீர் சோதனை நடவடிக்கையின்போது 2 லாண்ட் மாஸ்டர்களில் வேப்ப மரக்குற்றிகள் ஏற்றிச் செல்லப்பட்டன. அவை திருட்டுத்தனமாகத் தறித்து எடுத்த வேப்ப மரக்குற்றிகள் என விசாரணையில் தெரிவிக்கப்பட்டது. அவற்றைத் திருடிச் சென்றனர் என்ற குற்றச்சாட்டில் இருவர் கைது செய்யப்பட்டனர். அவர்களால் கொண்டு செல்லப்பட்ட மரக்குற்றிகளும் அவற்றை ஏற்றிச் சென்ற 2 லாண்ட் மாஸ்டர்களும் கைப்பற்றப்பட்டன.

சந்தேகநபர்கள் இருவரும் மல்லாகம் நீதிவான் மன்றில் முற்படுத்தப் பட்டனர். அவர்கள் லாண்ட் மாஸ்ரர் உரிமையாளர்கள் என்று மன்றில் தெரிவித்தனர். பிணையில் விடுவிக்கப் பட்டனர். லாண்ட் மாஸ்ரர்களும் மரக் குற்றிகளும் தொடர்ந்து தடுத்து வைக்கப்பட்டுள்ளன" என்று தெல்லிப்பளைப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (வ-101)

# என்.வி.கியூ நிலை 5 பரீட்சைக்கு விண்ணப்பங்கோரல்

யாழ்ப்பாணம்,ஏப்.7

தொழிநுட்பவியல் கல்லூரியின் தேசிய தொழில் தகைமை மட்டம் (என்.வி.கியூ நிலை 5) 2ஆம் அரையாண்டுப் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

"மீள் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்கள் விண்ணப்பப் படிவங்களை தொழிநுட்பவியல் கல்லூரியின் பரீட்சைப் பகுதியில் பெற்று எதிர்வரும் 17ஆம் திகதிக்கு முன்னர் அலுவலக நேரத்தில் பரீட்சைப் பகுதியில் அல்லது தமது துறைத் தலைவரிடம் சமர்ப்பிக்க வேண்டும்" என்று யாழ்ப்பாண தொழில்நுட்பவியல் கல்லூரி பணிப்பாளர் எஸ். முகுந்தன் கேட்டுள்ளார். (வ)



## சிவன் ஜோதிடம்

இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ள

**பண்டித் ஜெயதேவ் சுவாமிகள்**

**076 585 9977 , 077 835 7307**

துல்லியமாக கணித்து சொல்லப்படும் விடயங்கள்

மெய்யன்பர்களே !

இந்தியாவின் புகழ் பெற்ற மாந்திரீக ஜோதிடர் இவர் தீர்த்து வைக்காத பிரச்சினைகளே இல்லை. கணவன் மனைவி சண்டை பிரிவு, காதல் திருமண தடை இதுவரை திருமணமே ஆகாதவர்கள் பிள்ளைகள், பெற்றோர் சொல் கேளாமல் திரிவது, வேலை தொழில் உத்தியோகம் இப்படி பல பிரச்சினைகளை தீர்த்து வைப்பார். பணம் பெறாமையால் தொழில் பாதிப்பு பலன் சொல்வதோடு பிரச்சினைகளை தீர்த்து வைப்பார். புத்திர பாக்கியம் இல்லாதவர்களுக்கு புத்திரபாக்கியம் பலன்களை சொல்வார். மேலும் உங்கள் வீட்டில் செல்வம் கொழிக்க உதவும் லட்சுமி பூசை செய்து தருவார்.


தமிழ் மொழிகளில் ஜோதிடம் சொல்லப்படும்.

100% உத்தரவாதம்

**இல.394, 1/1 மணிக்கூட்டு வீதி,**
**(பெருமாள் கோயில் வீதி, லிங்கம் கிறீம் ஹவுஸ் அருகில்)**
**யாழ்ப்பாணம்.**

நேரம்: காலை 8.00 மணி முதல் மாலை 7.00 மணிவரை

# 25 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
10.05.1926

மறைவு
15.03.1992

அமரர் **காசிப்பிள்ளை சபாரத்தினம்**

திதி: 07.04.2017

பாசத்தின் உறைவிடமாய் பண்பின் சிகரமாய்
பாசத்தால் அரவணைத்து வழிகாட்டிய எங்கள் அப்பாவே!
உங்கள் நினைவுகளில் மிதக்கின்றோம் அப்பாவே!


*உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்*

**அன்பு மனைவி, மக்கள்,**
**மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

சுன்னாகம் தெற்கு, சுன்னாகம்.

## மரண அறிவித்தல்

### செல்லத்துரை சீவரெத்தினம்



கோண்டாவிலைப் பிறப்பிடமாகவும் கந்தர்மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை சீவரெத்தினம் (04.04.2017) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - அன்ன லட்சுமி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - மனோன்மணி தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற பாலசிங்கத்தின் சகோதரரும், நாகேஸ்வரியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற சித்திரா மற்றும் விஜயகுமார் (பிரான்ஸ்), சிவகுமார் ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவாஜினி (பிரான்ஸ்), வாசுகி ஆகியோரின் மாமனாரும், ருக் ஷியா, சதுஸ்மியா, கிரீஷன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.04.2017) வெள்ளிக்கிழமை பி.ப ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**2 ஆம் ஒழுங்கை, பிறவுன் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

தகவல்:
**குடும்பத்தினர்.**

**077 139 9863**

# நன்றி நவிலல்



## திரு.திருமதி சண்முகம் சிவஞானம்

கடந்த 02.04 2017 ஆம் திகதி காரைநகர் கிழவன்காடு கலாமன்றத்தினால் கலாமன்ற மனோன்மணி கலையரங்கில் நடத்தப்பட்ட எமது மணிவிழாவுக்கான முழு அனுசரணையையும் வழங்கி மிகவும் சிறப்பாக இவ் விழாவினை நடத்தி என்னையும் எனது பாரியாரையும் கௌரவப்படுத்திய காரைநகர் கிழவன்காடு கலாமன்றத்தினருக்கும் குறித்த நேரத்துக்கு பூசை வழிபாடுகளை மேற்கொள்வதற்கு வசதி செய்த காரைநகர் மருதடி விநாயகர் ஆலயம் மற்றும் கிழவன்காடு கந்தசாமி ஆலய நிர்வாகத்தினர் மற்றும் அந்தண சிவாச்சாரியார்களுக்கும் ஆலயத்திலிருந்து கலாமன்றம் வரை மங்கலவாத்தியம் இசைத்த கலைஞர்களுக்கும் அதற்கு அனுசரணையினை வழங்கிய அன்பர்களுக்கும் பூரண கும்பங்கள் வைத்து மாலை அணிவித்து ஆரார்த்தி எடுத்து கௌரவித்த அனைத்து நல்லுள்ளங்களுக்கும் நிகழ்வின் ஆரம்பம் முதல் இறுதிவரை நிகழ்வில் பங்குபற்றியதோடு யாழ். மாவட்டம் மற்றும் வெளிமாவட்டங்களிலிருந்து வருகை தந்ததோடு பெறுமதி வாய்ந்த மாலைகள், பொன்னாடைகள்,ஞாபகார்த்த கேடயங்கள், வாழ்த்து மடல்கள் வழங்கி சிறப்பித்த அந்தண சிவாச்சாரியார்கள், ஆதீனகர்த்தர்கள், கலாமன்றம், அன்னதான சபையினர், கல்விக் கூடங்கள், சனசமூக நிலையங்கள், வர்த்தக நண்பர்கள், கலைஞர்கள், கலா ரசிகர்கள், பொதுமக்கள், அன்பர்கள், ஆதரவாளர்கள், உறவினர்கள், நண்பர்கள் என திரண்டு வந்து எமக்கான மணிவிழாவினைச் சிறப்பித்த அனைவருக்கும் ஆசியுரை மற்றும் வாழ்த்துரைகள் வழங்கிய பெருமைக்குரியவர்களுக்கும் கவியரங்கினை வழங்கி சிறப்பித்த ஈழத்தின் பிரபல கவிஞர்களுக்கும் நிகழ்வின் இறுதியில் என்னையும் எனது குடும்பத்தினரையும் இல்லம் வரை அழைத்து வந்து சிறப்பித்தவர்களுக்கும் நிகழ்வுகளை ஒளிப்பதிவுசெய்த சிந்துஜா நிறுவனத்துக்கும் நிகழ்வுகளை சிறப்புற வெளியிட்ட ஊடகங்கள் அனைவருக்கும் எனது நன்றியினை மகிழ்ச்சியுடன் தெரிவிப்பதில் எனது குடும்பம் சார்பில் பெரு மகிழ்ச்சியடைகின்றேன்.

**திரு.திருமதி சண்முகம் சிவஞானம் குடும்பத்தினர்**
**பிரதான வீதி, காரைநகர்.**

## சுன்னாகம் ஐயனாரின் தேர்த்திருவிழா

யாழ்ப்பாணம்,ஏப்.7

சுன்னாகம், தாளையம்பதி ஸ்ரீ ஹரிஹரபுத்திர ஐயனார் ஆலயத்தின் வருடாந்தத் திருவிழாவின் தேர்த்திருவிழா நாளை சனிக்கிழமை காலை 10 மணிக்கும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு தீர்த்தோற்சவமும் நடைபெறும் என்று ஆதீனகர்த்தாக்கள் அறிவித்தனர். (வ)

## உலக மகளிர் தின நிகழ்வு

தென்மராட்சி, ஏப். 7

மட்டுவில் தெற்கு மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தினர் உலக மகளிர் தினத்தையொட்டி நடாத்தும் மகளிர் தின நிகழ்வுகளும் பரிசில் வழங்கலும் நாளை சனிக்கிழமை பி.ப.3 மணிக்கு மட்டுவில் தெற்கு வளர்மதி கலையரங்கில் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டது.

சங்கத் தலைவர் செல்வி நீரஜா செல்வராஜா தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு தலைமை விருந்தினராக வடக்கு மாகாண சபை உறுப்பினர் திருமதி அனந்தி சசிதரன் கலந்து கொள்வார்.

விழாவின் சிறப்பு விருந்தினர்களாக சட்டத்தரணி செல்வி நிருபா பாலேந்திரன், மாகாண முதலமைச்சர் செயலக அலுவலர் க.கேசவரூபன் ஆகியோரும் மதிப்புறு விருந்தினர்களாக தென்மராட்சி பிரதேச கிராம அபிவிருத்தி அலுவலர் ப.சதீஸ்வரன், தேசிய சேமிப்பு வங்கியின் கொடிகாமம் கிளை முகாமையாளர் அன்ரன் யோகநாயகம், கிராம அலுவலர் யோசப் அலோசியஸ், மட்டுவில் வடக்கு அ.த.க.பாடசாலை அதிபர் ச.கிருஷ்ணன், வளர்மதி சனசமூக நிலையத் தலைவர் செ.யோகேஸ்வரன் ஆகியோரும் கலந்து கொள்வர்.

நிகழ்வில் மகளிர் கௌரவிப்பு உலக மகளிர் தினத்தையொட்டி நடாத்தப்பட்ட போட்டிகளில் வெற்றியீட்டியோருக்கான பரிசில்கள் வழங்கல் மற்றும் கலை நிகழ்வுகள் போன்றவை இடம்பெறும் என்று தெரிவிக்கப்பட்டது. (வ -9)

## வடக்கு, கிழக்கு மாகாணங்களின்
# கல்விப்பொறிமுறைகளில் பெரும்தவறுகள் உள்ளன
## தமிழர் ஆசிரியர் சங்கம் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஏப். 7

"தமிழ்பேசும் மக்கள் செறிந்து வாழும் வடக்கு, கிழக்கு மாகாணங்கள் 2016ஆம் ஆண்டு நடைபெற்ற ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சையிலும் கடைசி இடங்களில் உள்ளன. இந்தப் பின்னடைவானது, எமது மாகாணங்களின் கல்விப் பொறிமுறைகளில் பெரும் தவறுகள் இருப்பதாகவே நாம் கருதுகின்றோம்"

இவ்வாறு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் தெரிவித்திருக்கிறது.

இது தொடர்பில் சங்கம் அனுப்பிய செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

2012ஆம் ஆண்டு தொடக்கம் கல்வியில் வடக்கு மாகாணம் ஒன்பதாம் இடத்திலும், கிழக்கு மாகாணம் எட்டாவது இடத்திலும் உள்ளன. இந்த நிலமை பெரும் தலைகுனிவை ஏற்படுத்தியுள்ளது. இதற்கு நாம் அனைவரும் பொறுப்புக்கூறியே ஆக வேண்டும். பிள்ளைகளினும், பெற்றோரிலும் யாரும் குறைசொல்ல முடியாது.

போர் நடைபெற்ற காலங்களில் எந்தவித வசதி வாய்ப்புகளும் இல்லாத நிலையில் வடக்கு, கிழக்கு மாகாணங்கள் கல்வியில் பின்னடைவுகளைச் சந்திக்கவில்லை. ஆனால் இன்று ஓரளவு வளங்கள் பகிர்தளிக்கப்பட்டு அச்சமில்லாத சூழ்நிலையில் கல்வியில் நாம் பின்னடைவைச் சந்திப்பது எமது மாகாணங்களின் கல்விப் பொறிமுறைகளில் பெரும் தவறுகள் இருப்பதாகவே நாம் கருதுகின்றோம்.

உலக நாடுகளின் பல்வேறுவிதமான ஆலோசனைகள், நிதிமூலங்கள் அனைத்தையும் பெற்றுக்கொண்டு முன்னேற்றமான நிலையை நோக்கி நாம் நகரவில்லை என்பது மிகுந்த வேதனையைத் தருகின்றது. இதனூடாக பல விடங்களை நாம் பல தடவைகள் சுட்டிக்காட்டியுள்ளோம். அவை எவற்றையும் எவரும் நடைமுறைப்படுத்துவதாக இல்லை.

பாடசாலைகளின் தரங்களுக்கு ஏற்ப அதிபர்களை நியமனம் செய்யுங்கள் என பல தடவைகள் நாம் வேண்டுகோள் விடுத்துள்ளோம். அத்தைகைய வேண்டுகோள்கள் அதிகாரிகளால் வேண்டுமென்றே உதாசீனம் செய்யப்பட்டுள்ளன. கிழக்கு மாகாணத்தில் ஒரே பாடசாலையில் பதினைந்து, இருபது ஆண்டுகள் தொடர்ச்சியாக பொருத்தமில்லாத அதிபர்கள் கடமையில் உள்ளனர். இதனை ஆளுநர் வரை கொண்டுசென்றும் எந்த நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை.

ஒட்டு மொத்தத்தில் கல்வியில் அரசியல் தலையீடு எப்போது அற்றுப் போகின்றதோ அன்று வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு விடிவு ஏற்படும். எமது இத்தகைய கருத்துக்கூட விமர்சனத்துக்கு உட்படுத்தப்படும் அல்லது பழிவாங்கலுக்கு உள்ளாகும். தவிர அத்தகைய எண்ணங்களைக் கைவிட்டு ஆக்கபூர்வமான பொறிமுறைகளை உருவாக்காதவரை இதே நிலை தொடரும். - என்றுள்ளது. (வ-4)

## ஏகாதசி தீர்த்தமும் பங்குனி உத்தரமும்

நாகேஸ்வரம், அளவெட்டி மேற்கு ஸ்ரீ நாகவரத நாராயணர் ஆலயத்தில் இன்று வெள்ளிக்கிழமை ஏகாதசி தீர்த்தம் மற்றும் 9ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பங்குனி உத்தரம் ஆகிய சிறப்பு வழிபாடுகள் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டது.

மேற்படிதினங்களில் காலை 7 மணிக்கு சிறப்பு முழுக்கு ஆராதனைகளுடன் வழிபாடுகள் ஆரம்பமாகும். காலை 9 மணிக்கு சமய சொற்பொழிவு மற்றும் ஆராதனைகள் என்பன நடைபெறும். மு.ப. 10 மணிக்கு வசந்த மண்டப வழிபாட்டைத் தொடர்ந்து ஸ்ரீ மத் நாராயண சுவாமி அலங்கரத் தண்டிகையில் பூமாதேவி ஸ்ரீதேவி சமேதராக திருவீதி எழுந்தருள்வார். மதியம் 12 மணிக்கு அன்னதானம் வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (வ-160)

குருவே துணை



வாழ்க வையகம் வாழ்க வளமுடன்

யாழ்.மனவளக்கலை மன்ற அறக்கட்டளை வழங்கும் மனவளக்கலை
யோகா ஆளுமை திறனூக்கப்பயிற்சிகள்
பாடசாலை விடுமுறைக் காலத்தை பயனுள்ளதாக்க ஆசிரியர்கள்.
மாணவர்களுக்கான விஷேட பயிற்சிகள்

- எளியமுறை உடற்பயிற்சிகள்
- எளியமுறை தியானப்பயிற்சிகள்
- எளியமுறை காயகல்பப் பயிற்சிகள்
- அகத்தாய்வு பயிற்சிகள்

இடம்- யாழ்ப்பாணம், அறிவுத்திருக்கோயில்
காலம்- 10.04.2017 (திங்கள்) மாலை 05.00 மணி
(அறிமுக உரையும் பயிற்சி ஆரம்பமும்)
மகளிர்க்கு மட்டுமான சிறப்பு யோகா பயிற்சிகள் எதிர்வரும் 11.04.2017 (செவ்வாய்) காலை 8.30-10.30 மணி தொடக்கம் நடைபெறவுள்ளது.

பிரம்ம ஞானப் பயிற்சிகள்
08.04.2017-10.04.2017
(சனி.ஞாயிறு.திங்கள்) தினங்களில் நடைபெறவுள்ளது.

தலைமை
மனவளக்கலை பேராசிரியர்
அருள்நிதி S.முருகானந்தவேல்
(தலைவர் யாழ். மனவளக்கலை மன்ற அறக்கட்டளை)

வழங்குவோர்
தமிழகத்திலிருந்து வருகை தந்திருக்கும் மனவளக்கலை பேராசிரியர் அருள்நிதி S.இந்திரா அவர்கள் மனவளக்கலை பேராசிரியர் அருள்நிதி V.பாஸ்கரன் அவர்கள்

குறிப்பு: அறிவுத்திருக்கோயில் திறப்பு விழா மங்கலத்தில் சொல்வேந்தர் சுகிசிவம் அவர்களின் உரையடங்கிய இறுவட்டினை அன்பர்கள் பெற்றுக்கொள்ளமுடியும்.

பயிற்சி பெற விரும்புபவர்கள் தொடர்புகொள்ளவேண்டிய தொலைபேசி இலக்கம் 021 222 2772, 071 440 3268

வாழ்க வளமுடன்
அறிவுத்திருக்கோயில், மனவளக்கலை மன்ற அறக்கட்டளை,
இல.81, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

SK T சிறிகுமரன் ரெக்ஸ்
சித்திரைப் புத்தாண்டின்
மாபெரும் மலிவு விற்பனை



இந்தியாவிலிருந்து
நேரடியாக
இறக்குமதி செய்யப்பட்ட
புத்தம் புதிய தெரிவுகள்
மிகக் குறைந்த
விலையில்

சில்க்கொட்டன்சாறி -1190/= → 750/=
காதிசில்க் சாறி - 1950 /= → 1350/=
திரட்லேக்கொட்டன்சாறி - 2690 /= → 1500/=
அனைத்து ஆடைகளும் மலிவு விலையில்

இச் சலுகை 7 நாள்கள் மட்டுமே

சிறிகுமரன் ரெக்ஸ்
770, K.K.S. வீதி, தட்டாதெருச்சந்தி,
யாழ்ப்பாணம்.
தொடர்பு: 021 221 6845

### பிராந்திய சுகாதாரசேவைகள் பணிப்பாளர், கிளிநொச்சி.
### விலைமனு கேள்விக்கான அழைப்பு
### மருத்துவ உபகரணங்களின் பெறுகைகள்

01) பிராந்திய பெறுகைக் குழு தகுதியான தகைமைவாய்ந்தவர்களிடம் கீழ்வரும் பொருள்களுக்கான முத்திரையிடப்பட்ட பெறுகையினை பின்வருமாறு கோருகின்றது.

கொள்வனவு செய்யப்படவுள்ள பொருள்களின் விவரம் பின்வருமாறு

| Lot. No. | IFB No | Item | Quantity | Bid Security Rs. | Bid Security Validity Period |
|---|---|---|---|---|---|
| (A) | NP/04/45/02/ MEP/HSDP/ 2017/01 | Defibrillators with pacing facilities | 01 | 15,000.00 | Up to 14/08/2017 |
| | | ECG Recorder | 01 | | |
| | | Infusion pump | 02 | | |
| | | Pulse oxymeter | 02 | | |
| | | Sucker | 02 | | |
| | | Sterilizer-Large | 01 | | |
| | | Nebulizers | 02 | | |
| (B) | NP/04/45/02/ MEP/HSDP/ 2017/02 | Bp apparatus LCD Type | 07 | 6,000.00 | Up to 14/08/2017 |
| | | Cervical collar | 04 | | |
| | | Laryngoscope | 01 | | |
| | | Peak flow meter | 01 | | |
| | | Spinal Board | 02 | | |
| | | Pinnard fetal stethoscope | 05 | | |
| | | HB Testing Machine | 05 | | |
| (C) | NP/04/45/02/ MEP/HSDP/ 2017/03 | Adult weighing scale-beam type | 05 | 6,000.00 | Up to 14/08/2017 |
| | | Baby weighing scale –Beam type | 05 | | |
| | | Height measuring equipment | 05 | | |
| | | Measuring Tape | 05 | | |
| | | Length measuring Board | 05 | | |
| (D) | NP/04/45/02/ MEP/HSDP/ 2017/04 | Dressing trolley | 01 | 9000.00 | Up to 14/08/2017 |
| | | Emergency trolley | 01 | | |
| | | ETU Bed | 02 | | |
| | | Examination bed | 01 | | |
| | | Wheel chair | 01 | | |
| | | Medicine trolley | 01 | | |
| | | Over bed trolley | 01 | | |

02) விலைக் கேள்வியானது தேசிய போட்டிக் கேள்வியின் மூலம் நடத்தப்படும்.

03) தகுதிவாய்ந்த மற்றும் இதில் நாட்டமுள்ள விலைக் கேள்விதாரர்கள் மேலதிக தகவல்களை அலுவலக வேலை நேரங்களில் (09.00மணி தொடக்கம் 15.00 மணிவரை) பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை கிளிநொச்சியில் இருந்து பெற்றுக்கொள்ள முடியும் (தொலைபேசி இல : 021 - 2285932, தொலை நகல் 0212285931, email - rdhskoc@gmail.com & financerdhskoc@gmail.com)

04) நாட்டமுள்ள பதிவுசெய்யப்பட்ட விலைக் கேள்விதாரர்கள் இப் பணிமனையில் கிடைக்கும் விண்ணப் படிவங்களை ஒவ்வொரு பெறுகைக்கும் மீளளிக்க முடியாத கேள்விப்பத்திர பணம் ரூபா 1000/=ஐ காசாக செலுத்தி அலுவலக நாள்களில் 07/04/2017அதாவது இன்று தொடக்கம் 27/04/2017 வரையான காலப் பகுதியில் 09.00மணி தொடக்கம் 15.00 மணிவரையான (12.30 தொடக்கம் 13.30 மணி தவிர்ந்த) நேரங்களில் பெற்றுக் கொள்ளமுடியும்.

05) விலைக் கேள்விகள் 28/04/2017ஆம் திகதி முற்பகல் 10.30 மணிக்கு முன்பாக பதிவுத் தபாலிலோ அல்லது நேரடியாகவோ அலுவலக கணக்காளர் அறையில் பேணப்படும் பெறுகைகள் பெட்டியில் சமர்ப்பித்தல் வேண்டும் பெறுகைகள் யாவும் 28.04.2017ஆம் திகதி முற்பகல் 10.30 மணிக்கு திறக்கப்படும்

தலைவர்,
பிராந்திய பெறுகைகள் குழு.
பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை,
கிளிநொச்சி.

# உதவி என்னும் போர்வையில் பண மோசடி

## முன்னாள் போராளிகள் வேதனை

கிளிநொச்சி, ஏப்.7
கிளிநொச்சி மாவட்டத்தில் முன்னாள் போராளிகளை இலக்கு வைத்து கோடிக் கணக்கில் பண மோசடி நடக்கின்றது. சுயதொழில் செய்வதற்குப் பொருள்கள் தரப்படும் என்று கூறி பலரிடம் 40 ஆயிரம் ரூபாவிற்கு மேல் வாங்கி ஏமாற்றுகின்றனர்.

இவ்வாறு பாதிக்கப்பட்ட முன்னாள் போராளிகள்வேதனையுடன்தெரிவித்தனர்.

"சுயதொழில் செய்வதற்கு கோழிக் குஞ்சுகள், கோழிக்கூடு, தீவனம் போன்றவற்றைக் குறைந்த விலையில் வழங்குகின்றோம் என்று கூறி ஆனந்தநகர், செல்வாநகர், விநாயகபுரம், யூனியன்குளம், மாயவனூர், வட்டக்கச்சி, சிவிச்சென்ரர் போன்ற இடங்களில் வசிக்கும் முன்னாள் போராளிகளிடம் பணம் அறவிடப்பட்டது. தனியார் நிறுவனத்தைச் சேர்ந்தஒருவரே இவ்வாறுபணத்தை வாங்கினார். இதுவரை அந்தப் பொருள்களை வழங்காது ஏமாற்றி வருகின்றார்." என்று பாதிக்கப்பட்ட முன்னாள் போராளிகள் கூறினார்.

"முன்னாள் போராளிகளுக்கு இவ்வாறான உதவிகள்செய்கின்றேன்என்று கூறினார். நம்பிப்பணத்தைக்கொடுத்தேன். மாடு, கோழி தருகின்றேன் என்று கூறியே பணம் வாங்கினார். இப்போது அது தொடர்பாகச் சரியான பதில்எதுவும்வழங்குவதில்லை. அவரிடம் கேட்டால் இராணுவத்துடன் தனக்கு தொடர்பு இருக்கின்றது என்றும், அவர்களிடம்கூறினால் உங்கள் நிலை மாறிவிடும் என்றும் மிரட்டுகின்றார்." என்று முன்னாள் போராளியானயூட்மணிவண்ணன்கூறினார்.


"சுயதொழில் செய்யக் கோழிகள் தருவோம் என்று கூறிப் பணம் வாங்கினார். இப்போது கேட்டால் தனக்கு எதுவும்தெரியாதுஎன்றுகூறுகின்றார். தொலைபேசிக்கு அழைப்பெடுத்தால் பதில் இல்லை. நாங்கள் யாரிடம் கதைப்பது என்று தெரியாதுள்ளது." என்றுகூறினார்மற்றொருமுன்னாள் போராளியான சகுந்தலாதேவி.

"என்னிடமும் இவ்வாறு கூறிப் பணம் வாங்கினார். நான் பொலிஸிடம் முறையிடப்போகின்றேன்என்றுகூறினால் தனக்கு புலனாய்வாளர்களின் ஆதரவு இருக்கின்றது என்று கூறி மிரட்டுகின்றார்" என்றார் முன்னாள் போராளியானகோகுலதாஸ்.

இது தொடர்பாக அரச தலைவர், தலைமை அமைச்சர், வடக்கு மாகாண முதலமைச்சர், நாடாளுமன்ற உறுப்பினர்கள், கிளிநொச்சி மாவட்ட செயலர், நீதிபதிகள் எனப் பலருக்குக் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது. பாதிக்கப்பட்டனர் என்று கூறப்படும் முன்னாள் போராளிகளின் விவரங்கள், அவர்களிடம் பெறப்பட்ட பணத் தொகை என்பன அதில் குறிப்பிடப்பட்டுள்ளன என்றும்தெரிவிக்கப்பட்டது.

"முன்னாள் போராளிகளுக்கு உதவ வேண்டும்என்றநோக்குடனே அவர்களுக்கு சுயதொழில் உதவிகளை வழங்கினேன். குறைந்தளவு பணத்தில் கூடிய பெறுமதியானவற்றையே வழங்கினேன். கோழி வளர்ப்பு என்றால் படிமுறைகள், விளக்கங்கள் போன்றவற்றையும் வழங்குவேன். நான் கொடுப்பவற்றுக்குப் பற்றுச்சீட்டுக்கொடுப்பேன். அவற்றைவைத்துக் கொண்டு தமக்கு எதுவுமே தரவில்லை என்று கூறுகின்றனர். திட்டமிட்டு இவ்வாறு பொய்க் குற்றச்சாட்டு சுமத்தப்படுகின்றது."என்றுகூறினார் முன்னாள் போராளிகளால் குற்றஞ்சாட்டப்படும்நபர்.

(ற-21,12)



# 600 மாணவர்களை இணைத்து பெரும் சித்திரப் போட்டி நேற்று

வவுனியா, ஏப்.7
வவுனியாவில் நேற்று 600 மாணவர்களை ஒன்றிணைத்து சித்திரப் போட்டி நடத்தப்பட்டது. வன்னிப்பிராந்திய பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் தலைமையில் இந்தப் போட்டி நடத்தப்பட்டது.

``இனங்களுக்கு இடையே ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்தின் ஊடாக நாட்டின் அபிவிருத்தி'' என்ற தொனிப்பொருளில்இந்தப் போட்டி நடத்தப்பட்டது. தரம் 7, 8, 9, 10 மாணவர்களைஒன்றிணைத்து சித்திரப் போட்டிஏற்பாடுசெய்யப்பட்டது. வவுனியா பிரதான பொலிஸ் நிலையக் கட்டடத்தில் போட்டிகள் நடைபெற்றன.

நிகழ்வில் வடக்கு மாகாணசபைஉறுப்பினர் செ.மயூரன், வவுனியா மாவட்ட செயலர் எம்.பி.றோகனபுஸ்பகுமார, சிரேஷ்டபொலிஸ் அத்தியட்சகர் சிசி ரகுமார, உதவிப்பொலிஸ் அத்தியட்சகர்மல்வகே, வவுனியா தலைமைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சோமரத்ன விஜயமுனி, வவுனியா வடக்கு வலயக் கல்விப் பணிப்பாளர் வீ.இராதாகிருஷ்ணன், உதவிக்கல்விப்பணிப்பாளர் வீரசிங்கம், பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள்எனப் பலரும்கலந்துகொண்டனர். (ற-21)



# ஒற்றுமையாக இருந்தால் பலவற்றைச் சாதிக்கலாம்

## வன்னிப் பொலிஸ் மா அதிபர் தெரிவிப்பு

வவுனியா, ஏப்.7
தமிழ், சிங்கள, முஸ்லிம் சிறார்கள் அனைவரும் இங்கு இணைந்துள்ளனர். நாம் ஒற்றுமையாக இருக்கும்வரை எவரும் எம்மை ஒன்றுமே செய்ய முடியாது என்று கூறினார் வன்னிப் பிராந்தியபொலிஸ்மாஅதிபர் தேசபந்துதென்னக்கோன்.

வவுனியாபிரதானபொலிஸ் நிலையக் கட்டடத் தொகுதியில் நேற்று மாணவர்களுக்கானசித்திரப்போட்டிநடத்தப்பட்டது. அதை ஆரம்பித்து உரையாற்றும்போதேஅவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது
எனது தமிழ் உரையில் குறைப்பாடுகள்இருக்கலாம். அதுஇயற்கையானது. எனது தாய் மொழி தமிழ் இல்லை. இப்போது நான் முயற்சி செய்துஉரையாற்றுவதுசிறுவர்கள், உங்கள்முன்னிலையில் நான் அதிகாரி என்ற வகையில்தமிழ்கற்கமுயற்சிக்கின்றேன் – என்பதை விளக்குவதற்காகவே. நாம் எமக்குத் தெரியாது என்று கூறுவதை விடுத்து தினமும் முயற்சித்தால் விரைவில் மொழியைக்கற்கமுடியும்.

போர் முடிந்து 8 ஆண்டுகள் ஆகின்றன. அந்தக் காலப் பகுதிகளுக்குள்பொலிஸ்உத்தியோகத்தர்கள் என்ற ரீதியில் பொதுமக்களுடன் இணைந்து செயலாற்றிய சந்தர்ப்பங்கள் குறைவு. அதனாலேயேசமுதாயபொலிஸ் முறைமை மூலம் இந்த நிகழ்வைநடத்தஏற்பாடுசெய்துள்ளேன்.

சிறார்கள் வரையும் சித்திரங்கள் சித்திர ஆசிரியர்களால் தெரிவு செய்யப்பட்டு வெற்றியாளர்கள் தீர்மானிக்கப்படுவர். எதிர்வரும் மே மாத ஆரம்பதில் ஈரப்பெரிய குளத்தில் திறக்கப்படவுள்ள சிறுவர் பூங்கா திறப்பு விழாவின்போது மாணவர்கள் வரைந்த சித்திரங்கள் காட்சிக்கு வைக்கப்படும். வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்கள் பொலிஸ் மா அதிபர் மூலம் வழங்க ஏற்பாடு செய்யப்படும்" –என்றார்.

(ற-21)

# டெங்குக் கட்டுப்பாட்டு செயற்றிட்டங்கள் மாந்தை கிழக்கில்

முல்லைத்தீவு, ஏப்.7
டெங்கு விழிப்புணர்வு வாரத்தை முன்னிட்டுமாந்தைகிழக்குப்பிரதேச சபையால் டெங்கு நுளம்பு உற்பத்தியாகக்கூடியஏதுநிலையுடன்இருந்த இடங்கள் அழிக்கப்பட்டன. கழிவுப் பொருள்களும் மக்களிடமிருந்து சேகரிக்கப்பட்டன.

சிரமம் பாராது உயிர்களைக் காப்போம்என்றதொனிப்பொருளில் கடந்த 29 ஆம் திகதி முதல் 4ஆம் திகதிவரை முன்னெடுக்கப்பட்ட டெங்கு விழிப்புணர்வு வாரத்தில் மாந்தை கிழக்கு பிரதேச சபை எல்லைக்குட்பட்டபகுதிகளில்கழிவுப் பொருள்கள் அகற்றப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது. (ற-7)



# நஞ்சுப்போத்தல்மூதாட்டியின் போராட்டம் நேற்றுடன் முடிவு



வவுனியா, ஏப்.7
தனது காணியை தனி நபர்கள் அபகரித்து வைத்துள்ளனர் என்று கூறி கடந்த செவ்வாய்க் கிழமை வவுனியாவில்நஞ்சுப்போத்தலுடன் போராட்டம் நடத்திய மூதாட்டி நேற்று முன்தினம் புதன்கிழமையும்தனது போராட்டத்தைத் தொடர்ந்தார். இந்தவிடயம் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படும் என்றுமாவட்டசெயலர் கூறியதை அடுத்து அவர் தனது போராட்டத்தை முடித்துக் கொண்டார்.

"போரால் இடம்பெயர்ந்துஇந்தியாசென்று கடந்த 23 ஆம் திகதி நான் நாடு திரும்பினேன். எனது வீட்டில் உள்ளவர்கள் எனது காணியையும், வீட்டையும்விடுவிக்கமறுக்கின்றனர். காணிக்கான ஆவணங்கள் என்னிடம் உள்ளன. இது தொடர்பாக வவுனியா மாவட்ட செயலகம், பிரதேச செயலகம், பொலிஸ் நிலையம் எனப் பல இடங்களுக்குச் சென்றும் பலன் இல்லை. அதனாலேயே போராட்டம் நடத்துகின்றேன்." என்று அந்த மூதாட்டிகூறினார்.

போராட்டத்தில்ஈடுபட்ட மூதாட்டியையும், அவரது உறவினர்களையும் மாவட்ட செயலாளர் அழைத்துப் பேசினார். மாவட்ட மேலதிக செயலாளர் திரேஸ்குமார், வவுனியாபிரதேச செயலர் கா.உதயராசா ஆகியோருடன் கலந்தாலோசித்தார். மாவட்ட செயலக உத்தியோகத்தர் ஒருவரைக் காணிக்கு அனுப்பி அதன் நிலைமை தொடர்பாகஅறியத்தருமாறு மாவட்ட செயலாளர் பணித்தார். இந்தப் பிரச்சினைக்கு ஒருவாரத்துக்குள் தீர்வு வழங்கப்படும்என்றுதெரிவிக்கப்பட்டதை அடுத்து மூதாட்டிபோராட்டத்தை நிறுத்தினார். (ற-21)

## கடற்படையின் காணி அபகரிப்பால்

# நாடு திரும்பும் தமிழர்கள் வீடுகள் இன்றி வீதியில்

### முள்ளிக்குளம் கிராம மக்கள் கவலை
### போராட்டம் தொடரும் எனவும் தெரிவிப்பு



மன்னார், ஏப்.7

இந்தியாவில் இருந்து திரும்பி வந்த எமது உறவினர்கள் சொந்தக் காணிகளில் குடியமர்வதற்கு கடற்படை தடை விதித்துள்ளது. அவர்கள் காணி, வீடு இல்லாது அலைகின்றனர்.

இவ்வாறு மன்னார், முள்ளிக்குளத்தில் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் மக்கள் கவலை தெரிவித்தனர்.

தமது பூர்வீகக் காணிகளில் நிலை கொண்டுள்ள கடற்படை வெளியேற வேண்டும் என்று வற்புறுத்தி மன்னார், முசலி பிரதேசசெயலர்பிரிவுக்குட்பட்ட முள்ளிக்குளம் கிராம மக்கள் தொடர் போராட்டம் நடத்துகின்றனர். நேற்று 15 ஆவது நாளாக அவர்களது போராட்டம் தொடர்ந்தது.

மக்களின் போராட்டத்துக்குப் பல்வேறு தரப்பினரும் ஆதரவு தெரிவித்து வருகின்றனர். அருட் தந்தையர்கள், அருட் சகோதரிகள், அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், வடக்கு மாகாண சபையைச் சேர்ந்தவர்கள் எனப் பலரும் போராட்ட களத்துக்குச் சென்று மக்களைச் சந்தித்து தமது ஆதரவை தெரிவிக்கின்றனர்.

"கடற்படையால் அபகரிப்பட்டுள்ள எங்களுடைய காணிகள் விடுவிக்கப்படும் வரை நாங்கள் இந்த இடத்தில் இருந்து போராடுவோம். முப்படையினரும் மக்களது காணிகளை விட்டு வெளியேறி விட்டனர் என்று பொய்யான பரப்புரைகள் வெளி நாடுகளில் செய்யப்படுகின்றன. அதை நம்பி இங்கிருந்து அகதிகளாக இந்தியாவுக்கு சென்ற எமது உறவுகள் திரும்பி வருகின்றார்கள். எதிர்காலத்திலாவது சொந்த இடத்தில் நிம்மதியாக வாழலாம் என்ற நோக்கோடு தான் அவர்கள் இங்கு வருகின்றார்கள். ஆனால் இங்கு அவ்வாறு இல்லை. மக்களுடைய பெரும் பகுதி நிலங்கள் படையினரால் அபகரிக்கப்பட்டுள்ளன. கடந்த ஆண்டின் இறுதியில் இந்தியாவில் இருந்து இங்கு வந்த முள்ளிக்குளத்தை சேர்ந்த குடும்பங்கள் சொந்த காணிகள் இன்றி அலைந்து திரிகின்றனர். அவர்களுடைய காணிகளில்கடற்படையினர் முகாமிட்டுள்ளனர். எனவே கடற்படை எமது காணிகளை விட்டு செல்லும் வரை எமது போராட்டம் தொடரும்." என்று போராட்டத்தில் ஈடுபடும் மக்கள் தெரிவித்தனர். (ற -21)

## தேசிக்காய் விலையில் வீழ்ச்சி

முல்லைத்தீவு, ஏப். 7

தேசிக்காய் ஒரு கிலோ 20 ரூபாவுக்கே வியாபாரிகள் கொள்முதல் செய்வதால் தேசிக்காய் உற்பத்தி செய்யும் விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் இந்த வருடம் தேசிக்காய் நல்ல விளைச்சலை எட்டியுள்ளது. எனினும் அதன் விலையில் படுவீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

"தற்போது தேசிக்காய்ப் பருவகாலம் என்பதால் சந்தைக்கு போதிய அளவு உற்பத்திகள் வருகின்றன. அவற்றை நாம் ஒரு கிலோ 20 ரூபாவுக்கு கொள் முதல் செய்கின்றோம். விவசாயிகள் எத்தனை கிலோ கொண்டு வந்தாலும் அவற்றை கொள்முதல் செய்து வெளியிடங்களுக்கு அனுப்புகின்றோம். வெளி மாவட்டங்களிலும் தற்போது தேசிக்காயின் விலையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. நாமும் கூடிய விலை கொடுத்து விவசாயிகளிடம் இருந்து கொள்முதல் செய்ய முடியவில்லை."என சந்தை வியாபாரி ஒருவர் தெரிவித்தார். (ற - 7,500)

## 2 ஆயிரம் ஏக்கர் நிலத்தில் சிறுபோகம்

கிளிநொச்சி, ஏப்.7

கிளிநொச்சி மாவட்டத்தில் நான்கு குளங்களின் கீழ் 2 ஆயிரத்து 625 ஏக்கர் நிலப்பரப்பில் சிறுபோக செய்கை இடம்பெறவுள்ளது என்று கிளிநொச்சி மாவட்ட நீர்ப்பாசன பொறியியலாளர் செந்தூரன் தெரிவித்தார் .

அவர் தெரிவித்ததாவது: கிளிநொச்சி மாவட்டத்தில் பெரும்போக செய்கை காலநிலை மாற்றத்தால் பெருமளவு பாதிக்கப்பட்டது. பெரிய குளங்களை நம்பி சிறுபோக செய்கை அடுத்த மாதம் முதல் வாரத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளது. வன்னேரிக் குளத்தின் கீழ் 120 ஏக்கரிலும், குடமுருட்டி குளத்தின் கீழ் 320 ஏக்கரிலும், அக்கராயன் குளத்தின் கீழ் ஆயிரத்து 200 ஏக்கரிலும், புதுமுறிப்பு குளத்தின் கீழ் 985 ஏக்கரிலும் சிறுபோகச் செய்கை மேற்கொள்ளப்படவுள்ளது. நீரைச் சிக்கனமாக பயன்படுத்தி இந்த சிறுபோகச் செய்கையில் ஈடுபட வேண்டும்." என்றார். (ற - 6)

# காணிப் பிரச்சினைக்கு விரைந்து தீர்வு காண்க

### நீராவிப்பிட்டியில் போராட்டம் நடத்தும் தமிழ் பேசும் முஸ்லிம் மக்கள் கோரிக்கை



முல்லைத்தீவு, ஏப். 7

முல்லைத்தீவு மாவட்டத்தில் தமிழ் பேசும் முஸ்லிம் மக்களுக்கு காணிகள் வழங்கப்படவேண்டும். எமது நியாயபூர்வ கோரிக்கையை ஏற்றுக்கொண்டுள்ள அனைத்து தரப்பினரும் அதில் கூடிய கவனம் செலுத்தாது கால இழுத்தடிப்பை செய்வதன் உள்நோக்கம் என்ன? இந்தப் பிரச்சினைக்கு விரைந்து தீர்வு வழங்க வேண்டும்.

இவ்வாறு முள்ளியவளை நீராவிப்பிட்டியில் தொடர் போராட்டம் நடத்திவரும் தமிழ் பேசும் முஸ்லிம் மக்கள் தெரிவித்தனர்.

"நாட்டில் நிலவிய பல்வேறு அசாதாரண சூழ்நிலையால் முல்லைத்தீவில் இருந்து இடம்பெயர்ந்து சென்ற தமிழ் பேசும் முஸ்லிம் மக்கள் 2010ஆம் ஆண்டு மீள்குடியமர்ந்த போது ஏற்பட்ட காணிப் பிரச்சினைக்கு இதுவரை தீர்வு வழங்கப்படவில்லை.

இலகுவாகத் தீர்க்கப்படவேண்டிய இந்த பிரச்சினையைத் தீர்க்காது கால இழுத்தடிப்புச் செய்வது எமக்கிடையிலான உறவில் விரிசலை ஏற்படுத்துவதற்காகவா? அதிகாரிகள் மட்டத்தில் இலகுவாகத் தீர்க்க வேண்டிய இந்தப் பிரச்சினையில் இதுவரை அதிகாரிகள் ஊக்கத்துடன் முன்வந்து செயற்பட்டனர் என்று எமக்குத் தெரியவில்லை.

வடமாகாண முதலமைச்சர் கூட எங்கள் விடயத்தில் பாரா முகமாகத்தான் இருக்கின்றார்.

இந்த நாட்டில் வடக்கு கிழக்கில் உள்ள தமிழ் பேசும் மக்கள் ஒற்றுமையாக வாழ வேண்டும் என்பதில் யாருக்கும் மாற்றுக் கருத்துக்கள் இருக்கப் போவதில்லை. நீண்ட காலமாக தீர்க்கப்படாது இழுத்தடிப்புச் செய்யப்பட்டுவரும் காணிப் பிரச்சினைகளுக்கு சம்பந்தப்பட்ட அனைவரும் முன்வந்து விரைவாக தீர்வு வழங்க வேண்டும்." என்று போராட்டத்தில் ஈடுபட்டுவரும் மக்கள் தெரிவித்தனர். (ற - 21)

## வலயக் கல்வி பணிப்பாளர் வெற்றிடத்துக்கு விண்ணப்பிக்கலாம்

கிளிநொச்சி, ஏப்.7

வடக்கு மாகாண கல்வி அமைச்சின் கீழ் உள்ள கிளிநொச்சி கல்வி வலயத்தில் வெற்றிடமாகக் காணப்படும் வலயக் கல்விப் பணிப்பாளர் பதவிக்கு இலங்கை கல்வி நிர்வாக சேவை தரம் 1 ஐச் சேர்ந்தவர்களிடமிருந்து மாகாண பொதுச் சேவைகள் ஆணைக்குழுவால் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பிக்க விரும்புவோர் எதிர்வரும் 28 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பங்களை அனுப்ப வேண்டும் என்று மாகாண பொதுச் சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளர் திருமதி ரூ.வரதலிங்கம் அறிவித்துள்ளார்.


கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றிய க.முருகவேல் அண்மையில் சேவையிலிருந்து ஓய்வு பெற்றதையடுத்து தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு. கிருஷ்ணகுமார் பதில் வலயக் கல்விப் பணிப்பாளராக கிளிநொச்சி கல்வி வலயத்தில் மேலதிக கடமைகளை மேற்கொள்கின்றார். (ற -9)

## தீர்ப்பிடும் அருகதை உனக்கு உள்ளதா?

"பிறர் குற்றவாளிகள் எனத் தீர்ப்பளிக்காதீர்கள்; அப்போதுதான் நீங்களும் தீர்ப்புக்குள்ளாக மாட்டீர்கள், நீங்கள் அளிக்கும் தீர்ப்பையே நீங்களும் பெறுவீர்கள். நீங்கள் எந்த அளவையால் அளக்கிறீர்களோ அதே அளவையால் உங்களுக்கும் அளக்கப்படும். (மத் 7:12) தீர்ப்பு அளிப்பதில் நாம் அனைவருமே வல்லவராக இருக்கின்றோம். நாங்கள் எப்போதுமே நீதிபதியாக இருப்பதையே விரும்புகிறோம். ஆனால் எமக்குள்ளே இருக்கும் குற்றங்களைச் சிந்திப்பதில்லை. இயேசு நான் எவருக்கும் தீர்ப்பு அளிப்பதில்லை. ஆனால் நான் தீர்ப்பு வழங்கினால் அந்தத் தீர்ப்பு செல்லும். ஏனெனில் நான் தனியாகத் தீர்ப்பு வழங்கவில்லை. என்னை அனுப்பிய தந்தையும் என்னோடு இருக்கிறார். (யோவான் 8:15–16)

நான், எனது, எனக்கு மட்டும் என்ற குறுகிய வட்டத்துக்குள் வாழும் எங்களுக்கு எமக்கு அடுத்திருப்பவர்களின் துன்பங்கள் எப்போதும் தெரிவதில்லை. எமது சிந்தனை சொல், செயல்களால் எத்தனை சகோதர சகோதரிகளின் நற்பெயரைக் கெடுத்து அவர்களின் வாழ்வை அழித்திருக்கின்றோம். நாங்கள் கொடுத்த தீர்ப்பானது துன்பத்தைக் குறைப்பதற்குப் பதிலாக அவர்களுடைய உள்ளத்தை உடைக்கின்ற அளவுக்கு அல்லவா மாற்றியது. இவற்றுக்கெல்லாம் காரணம் எம்மில் குடி கொண்டிருக்கும் ஊனியல்பின் செயற்பாடுகள் அல்லவா! ஏனெனில் ஊனியல்பின் செயற்பாடுகள் மேலோங்கி நிற்கும்போது ஆவியானவரின் செயற்பாடுகளுக்கு இடமேது. இயேசுவுக்கு அன்று ஏற்பட்ட நிலையும் இதுதான். விடுதலை வாழ்வை வழங்க தந்தையின் திருவுளத்தை நிறைவேற்ற வந்த மாபரனுக்கு அவரிடம் நன்மைகள் பல பெற்று "தாவீதின் மகனுக்கு ஓசன்னா" என்று வாழ்த்திப் பாடிய அதே மக்கள் வழங்கிய தீர்ப்பு "இவனை சிலுவையில் அறையும். இவன் வேண்டாம். பரபாசை விடுதலை செய்யும்". நடந்தது என்ன பொய்ச்சாட்சிகளின் வாக்குமூலத்தால் உண்மை புதைக்கப்பட்டது. அநீதி வெற்றி கொண்டது. பெரிய குற்றத்தைச் செய்த பர்பாசுக்கு விடுதலை. இன்றும் எம்மதத்தில் அநீதியாக விதிக்கப்பட்ட தீர்ப்பால் எத்தனை இளம் உள்ளங்கள் செய்யாத குற்றத்துக்காக பெற்றோரைப் பிரிந்து, சகோதரர்களைப் பிரிந்து, உறவுகளை இழந்து தனிமையிலே சிறையில், வதை முகாம்களில் வாடுகின்றார்கள். தீர்ப்பளிக்கின்ற உரிமை உங்களுக்கும் எனக்கும் இருக்கின்றதா என்பதை ஒருகணம் சிந்தித்துப் பார்ப்போம்! தீர்ப்பளிக்கும் முன் எம்மை நாம் ஒரு தடவை ஆத்ம சோதனை செய்து கொள்வோம்.

"உன்னை நீ அன்பு செய்வதுபோல உனக்கு அடுத்திருப்பவனையும் அன்பு செய்" என்ற கட்டளையை எப்படி எம் வாழ்வில் கடைப்பிடிக்கப் போகின்றோம். "கண்ணால் காணும் மனிதனை அன்பு செய்யாமல் புலன்களுக்கு அப்பால் இருக்கும் கடவுளை எப்படி அன்பு செய்யமுடியும்." "சின்னஞ்சிறிய சகோதரர்களுக்கு எவற்றையெல்லாம் நாம் செய்யவில்லையோ அவையெல்லாம் இயேசுவுக்கே செய்யவில்லை" என்பதை உணருவோம்.



தவக்காலத்தில் நோன்பு இருப்பது, திருச்சிலுவைப் பாதை சிந்திப்பது, திருயாத்திரைகளை மேற்கொள்வது, திருப்பலிக்கு ஒழுங்காகச் செல்வது, வேதாகமம் படிப்பது இவை அனைத்தையும் செய்கின்றோம். ஆனால் இவையெல்லாம் உயிர்ப்பு ஞாயிறுடன் முடிவடைகின்றன. பின்னர் நாம் பழையபடி எப்படியும் வாழலாம் என்ற எண்ணத்துடன் வாழ்கின்றோம்.

தவக்காலம் அருளின் காலம், மனமாற்றத்தின் காலம், இறை இரக்கத்தின் அன்பைச் சுவைக்கின்ற காலம், ஒப்புரவின் காலம். இந்தக் காலத்தில் நாம் உண்மையாகவே செய்ய வேண்டியது என்ன? எங்களுடைய கடந்த கால வாழ்க்கையை ஒருமுறை மீளாய்வுசெய்து பார்க்க வேண்டும். கிறிஸ்தவன் என்ற பெயரால் அழைக்கப்படுகின்ற நான் அதற்கேற்ற படி வாழ்கின்றேனா?

மரியதாஸ் றதி, கொழும்புத்துறை

# சீனாவின் தலையீட்டால் இந்தியா பெரும் கவலை

## இந்திய நாடாளுமன்ற உறுப்பினர் கொழும்பில் தெரிவிப்பு



கொழும்பு, ஏப். 7
இலங்கையில் சீனாவின் தலையீடுகள் குறித்து இந்தியா பெரும் கவலை கொள்கிறது. சில விடயங்களில் பாகுபாடு காட்டப்படுகின்றது. அந்தப் பாகுபாடு இந்தியாவுக்குக் கெடுதலாக உள்ளது.

இவ்வாறு இந்திய முன்னாள் மத்திய அமைச்சரும் காங்கிரஸ் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினருமான சசி தாரூர் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்றுமுன்னம் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவின் சுயசரிதை வெளியீட்டு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

15 ஆம் நூற்றாண்டில் சீன அட்மிரல் செங் இலங்கைக்கு வந்தது தனியே வணிக நோக்கத்துக்காக அல்ல. சீனப் பேரரசின் கீழ் உலக ஒழுங்கைக் கொண்டு வரும் நேரடி இராணுவத் தலையீட்டுக்காகவே அவர் அந்தப் பயணத்தை மேற்கொண்டார்.

இலங்கையில், சீன நிறுவனங்களைப் போல சமமான முறையில் இந்திய நிறுவனங்கள் நடத்தப்படுவதில்லை. இந்திய நிறுவ னங்கள் சுற்றுச்சூழல் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பாகப் பல்வேறு தடைகளைச் சந்திக்க வேண்டியுள்ளது. ஆனால் இந்திய நிறுவனங்களைப் போலசீனநிறுவனங்களுக்கு அத்தகைய தடைகள் இருப்பதில்லை.

சீனா தனது பட்டுப்பாதையை மீளக் கட்டுவதற்கு கோருகிறது. இந்தியா, இந்தியப் பெருங்கடலில் தனது பங்கை மீள வலியுறுத்துகிறது. இரண்டு நாடுகளுமே இலங்கையைத் தமக்கு முக்கியமான நாடு என்றும், மூலோபாயக் கூட்டாளியாகத் தமது பக்கம் நிற்க வேண்டும் என்றும் விரும்புகின்றன.

தமிழ்நாட்டு மக்களுடன் உள்ள நெருங்கிய உறவுகளுக்கு அப்பால், இந்தியாவும் இலங்கையும் பலமான பொருளாதார, வர்த்தக உறவுகளைக் கொண்டுள்ள நாடுகள். சீனாவுடனான உறவுகள் எப்போதுமே இருமுனைகளைக் கொண்ட வாள் போன்றே உள்ளது.

இந்தியப்பெருங்கடலில்சீனாவின் ஆர்வம், பலநூற்றாண்டுகளாக கட்டியெழுப்பப்பட்ட எமது சொந்த வரலாற்று இணைப்புகள் மற்றும் கலாசார உறவுகளை கீழறுத்துவிடும் என்ற கவலைகள் உள்ளன.

சீன அட்மிரல் செங் காலியில் அமைத்துள்ள சீன, பேர்சியன், தமிழ் மொழிகளிலான கல்வெட்டில், "வணிகம் மற்றும் வர்த்தகம் மூலம் தாம் உருவாக்கும் அமைதியான உலகத்துக்கு இந்துக் கடவுள்கள் உதவி அளிக்க வேண்டும்" என்று குறிப்பிட்டுள்ளார்.

ஆனால் அட்மிரல் செங் இந்தோனேசியா, மலேசியா, இலங்கை, இந்தியா ஆகிய நாடுகளுக்கு, இராணுவத்தைப் பயன்படுத்துவது தொடர்பாகவே பயணங்களை மேற்கொண்டிருந்தார். அவர் நட்பு ஆட்சியாளர்களையும் மூலோபாய வணிக கேந்திரங்களையும் கட்டுப்படுத்தினார். இலங்கையிலும், இந்தோனேசியாவிலும் பரம்பரை அரசியலில் தலையீடு செய்தார். கண்டியிலும் ஏனைய இடங்களிலும் உள்ளூர் ஆட்சியாளர்களைக் கடத்தினார், படுகொலை செய்தார். கலாசார மற்றும் அரசியல் இறைமையின் சின்னமான புத்தர் பயன்படுத்திய பொருளையும் கைப்பற்றினார்.

இவை வணிக மற்றும் வர்த்தகத்தை உருவாக்கும் முயற்சிகள் அல்ல. சீனப் பேரரசின் கீழ் உலக ஒழுங்கைக் கொண்டுவருவதற்காக அவர்களின் அரசியல் விவகா ரங்களில் செய்யப்பட்ட நேரடித் தலையீடாகும்.

பாகிஸ்தான், இலங்கை, மியான்மார் போன்ற இந்தப் பிராந்தியத்தில் உள்ள நாடுகளில் சீனாவின் முதலீடுகளும் பலமும் அதிகரித்து வருகிறது. சில குறிப்பிட்ட நாடுகள், மாற்றுப் பாதுகாப்பு வழங்குனராக இந்தியாவைப் பார்க்கின்றன.

இந்தியா மென்சக்தியாகவே அறியப்பட்ட போதிலும், பிராந்தியத்தில் இராணுவ வலிமை பெற்ற நாடாகவும் உள்ளது. சீனாவுடன் போட்டியிடும் போது, இந்தியா தனது வணிகம் மற்றும் வர்த்தகத்தில் உள்ள பலவீனங்களை ஈடு செய்வது முக்கியமானது என்றார். (ஜ-4)

## பாலியல் துர்நடத்தை புரிந்த ஆசிரியருக்கு 20 வருடங்கள் சிறை

கொழும்பு, ஏப். 7
16 வயது மாணவியைப் பாலியல் துர்நடத்தைக்கு உட்படுத்திய சம்பவம் தொடர்பாக குற்றவாளியாக இனங்காணப்பட்ட 65 வயதுடைய ஆசிரியருக்கு 20 வருடங்கள் கடூழியச் சிறைத்தண்டனை விதித்து மாத்தறை நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளதாகச் செய்திகள் வெளிவந்துள்ளன.

2008ஆம் ஆண்டு மார்ச் மாதம் கணித பாடத்துக்குத் தனியார் வகுப்புக்குச் சென்றிருந்த குறித்த மாணவியை, அக்குரஸ்ஸ பகுதியைச் சேர்ந்த ஆசிரியர் பாலியல் துர்நடத்தைக்கு உட்படுத்தினார் எனக் குற்றஞ்சாட்டப்பட்டது.

இது தொடர்பான வழக்கு விசாரணை கடந்த 8 வருடங்களாக நடைபெற்றது. கடந்த செவ்வாய்க்கிழமை தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

இதன்போது குற்றவாளியாக அறிவிக்கப்பட்ட குறித்த ஆசிரியருக்கு 20 வருடங்கள் கடூழிய சிறைத்தண்டனை விதித்து நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது என்று தெரியவருகிறது. (ஜ10)

## சைட்டம் தொடர்பான இறுதித் தீர்மானம் மருத்துவச்சபையிடம்



கொழும்பு, ஏப். 7
மாலபே சைட்டம் மருத்துவக் கல்லூரியின் தரம் தொடர்பிலான இறுதித் தீர்மானத்தை இலங்கை மருத்துவச் சபைதான் வழங்க வேண்டும் என்று சுகாதார அமைச்சரும், அமைச்சரவைப் பேச்சாளருமான ராஜித சேனாரத்ன தெரிவித்தா்.

அவர் மேலும் தெரவித்ததாவது.

எதிர்வரும் 10 ஆம் திகதி சைட்டம் குறித்த தீர்மானமொன்றை வழங்குவதாக இலங்கை மருத்துவ சபை என்னிடம் அறிவித்தது. அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் சைட்டம் தொடர்பிலான தீர்மானமொன்றை கேட்க வேண்டியது, என்னிடமல்ல, இலங்கை மருத்துவச் சபையிடமே.என்றா்ா. (ஜ10)

## ஊடக அரசியல்வாதிகளிடம் எச்சரிக்கையாக இருங்கள்

### நாடாளுமன்ற உறுப்பினர் ஸ்ரீநேசன் வேண்டுகோள்

செங்கலடி, ஏப்.7
தேசியப் பட்டியல் கிடைக்காத ஆதங்கத்தால் தேசிய அரசை அசைக்கத் துடிக்கும் ஊடக அரசியல்வாதி போன்ற இரட்டைமுக அரசியல்வாதிகளிடம் மக்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். இவ்வாறு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஞானமுத்து ஸ்ரீநேசன் தெரிவித்தார்.

சமகால அரசியல் சூழ்நிலை தொடர்பாக கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவா்று தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி, ஐக்கிய தேசியக் கட்சி ஆகிய இரு கட்சிகளும் சிங்கள பௌத்த அடிப்படைவாதத்தை நேரடியாகவும், மறைமுகமாகவும் அரங்கேற்றி வந்துள்ளன.

பலர் இதனைப் புரிந்து கொண்டாலும் எச்சரிக்கையாச் செயற்படவில்லை. சிலர் முரண்பாடுகளை வளர்த்து பேரினவாத்துக்குத் தீனிபோட்டு தரகுப் பணத்தை அல்லது சலுகைகளைப் பெறத்துடிக்கின்றனர்.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு, முஸ்லிம் கட்சிகள், மலையகத் தமிழ்க் கட்சிகள் போன்றவற்றை உடைத்து பேரினவாத எஜமானர்களுக்கு இரையாக்க விரும்புகின்றனர். கடந்த காலத்தில் சர்வாதிகார எஜமானின் சகல செயற்பாடுகளுக்கும் ஊடக அரசியல்வாதிகள் உதவியாக இருந்து வந்தனர்.

ஊடக அரசியல்வாதியின் எஜமான் பல தடவைகள் அரச தலைவராக வேண்டும் எனப் பேராசைப்பட்டார். இனம் எக்கேடு கெட்டாலும் பரவாயில்லை தாம் வாழ்ந்தால் போதும் என்பதே இப்படியானவர்களின் நோக்கமாகும். தேசியப்பட்டியல் கிடையாமல் போய் விட்டது என்பதற்காக, தேசிய அரசையே பழிவாங்கத்துடிப்பது பகுத்தறிவுக்குள் அடங்காது என்று தான் கருதுகின்றோம் .என்றார். (ஐய47)

## 20 ஆயிரம் பசுக்கள் மே மாதம் இறக்குமதி செய்யப்படும்

கொழும்பு, ஏப். 7
தேசிய பால் உற்பத்தியை விருத்தி செய்வதற்காக, பசுக்களை இறக்குமதி செய்யும் வேலைத்திட்டத்தின் கீழ் 20 ஆயிரம் பசுக்கள் எதிர்வரும் மே மாதம் 17 ஆம் திகதி இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வேலைத்திட்டத்தைச் செயற்படுத்துவது தொடர்பில் கிராமியப் பொருளாதாரம் தொடர்பான அமைச்சர் பி. ஹெரிசனிலால் முன்வைக்கப்பட்ட யோசனைகளுக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இவ்வாறு இறக்குமதி செய்யப்படுகின்ற உயர் தரப் பசுக்கள், வர்த்தக அடிப்படையில் பால் பண்ணைகளை முன்னெடுப்பவர்களுக்குச் சலுகை விலையில் வழங்கப்படும்.

அதற்குத் தேவையான நிதியை இலங்கை மத்திய வங்கியால் முன்னெடுக்கப்படுகின்ற சலுகைக் கடன் செயன்முறையினூடாக பெற்றுக் கொடுப்பதற்கும், அவர்களுக்குத் தேவையான பயிற்சிகளை வழங்குவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.

தற்போது முதற்கட்டமாக நன்மையடையும் பாற் பண்ணையாளர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளதுடன், குறித்த பண்ணைகளின் அடிப்படை வசதிகள் அபிவிருத்தி செய்யப்பட்டு வருகின்றன எனவும் தெரிவிக்கப்பட்டது. (ஜ10)

## மைத்திரி அரசு உருப்படியாக எதனையும் செய்யவில்லை

### இப்படிச் செல்கிறார் பசில்

கொழும்பு, ஏப். 7
இன்றுநாட்டில்மதங்களுக்கிடையிலான நல்லிணக்கத்தின் அவசியம் உணரப்படுகின்ற போதும், மைத்திரி அரசு எதனையும் உருப்படியாகச் செய்யவில்லை.

இவ்வாறு முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ச தெரிவித்தார்.

அண்மையில் பாணந்துறை முன்னாள் தவிசாளர் இபாஸ் நபுஹான் தலைமையில் பாணந்துறையில் இடம்பெற்ற முஸ்லிம்களுடனான சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

எங்களது எதிரிகள், எங்களை வீழ்த்தப் பிரதான ஆயுதமாக இனவாதத்தைக் கையில் எடுத்திருந்தனர். இன்று சிறுபான்மையின மக்கள் தங்களது ஒளியாகக் கருதிய இந்த ஆட்சியை எதிர்க்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். எமது ஆட்சிக் காலத்தில் வடக்கிலும், கிழக்கிலும் பலவாறான அபிவிருத்தி திட்டங்களை மேற்கொண்டோம். எமது வடக்கு அபிவிருத்திக்கு சில கட்சிகள் ஒத்துழைப்பு வழங்காத நிலையிலும் நாம் அங்கு அபிவிருத்திகளைச் செய்தோம்.

தற்போதைய ஆட்சிக்கு அனைத்துக் கட்சிகளும் ஒத்துழைப்பு வழங்குகின்றன. இவ்வாறான ஒத்துழைப்புக்கள் எமது ஆட்சிக் காலத்தில் எங்களுக்குக் கிடைத்திருந்தால் எங்களது செயற்பாடுகளின் நிலை வேறாக அமைந்திருக்கும். இந்த ஆட்சியானது இந்த நிலையைத் தங்களுக்கு சாதகமாகப் பயன்படுத்தி மத நல்லிணக்கத்தைக் கொண்டு வர வேண்டும். இன்றைய நிலையில் பன்னாட்டு அழுத்தங்களில் இருந்து விடுபட இது எமக்கு அவசியமானதும் கூட.

எமது ஆட்சிக் காலத்தில் நாம் ஒரு போதும் இனவாத ரீதியான முன்னெடுப்புக்களை மேற்கொண்டதில்லை. அளுத்கம கலவரம் இடம்பெற்ற பின்னர் நாம் அந்த மக்களுக்கு நட்ட ஈட்டைப் பெற்றுக்கொடுத்தோம். சேதமடைந்தவற்றை உடனடியாக மறுசீரமைத்துக் கொடுத்தோம்.

அவர்களுக்கு நீதியைப் பெற்றுக்கொடுக்க முன்னர் ஆட்சி மாற்றம் இடம்பெற்று விட்டது. ஆனால், இன்று அளுத்கமையை காட்டி முஸ்லிங்களின் வாக்குகளைப் பெற்றவர்கள் அவர்களுக்குப் பொருள் சேத நட்ட ஈட்டைக் கூட பெற்றுக்கொடுக்கவில்லை. அளுத்கமை கலவரம் தொடர்பிலான விசாரணைகளைக் கிடப்பில் போட்டுவிட்டனர். இதனை விசாரித்தால் உண்மைகள் வெளிப்பட்டுவிடும் என்ற அச்சம் தான் கிடப்பில் போட்டதன் பின்னணி யாகும்.

எமது ஆட்சிக் காலத்தில் சம்புக்கரணவக்கவின் அடியாள்களாக இருந்த ஓரிரு தேரர்கள் மட்டுமே, முஸ்லிங்களுக்கு எதிராகச் செயற்பட்டார்கள். முஸ்லிம் வர்த்தக நிலையங்களைப் புறக்கணிக்குமாறு குரல்கொடுத்தார்கள்.

ஆனால், இன்று ஊர் ஊராக முஸ்லிங்களுக்கு எதிராக சுவரொட்டி ஒட்டுகின்றார்கள். ஊருக்கொரு அடியாள்கள் உருவாகி விட்டார்கள். இவற்றைத் தடுத்து நிறுத்த முஸ்லிம் அமைச்சர்கள் திராணி அற்று இருப்பதுடன் இந்த ஆட்சியுடன் ஒட்டி உறவாடிக் கொண்டிருக்கின்றனர்.

எமது ஆட்சிக் காலத்தில் இவ்வாறான ஏதேனும் சம்பவங்கள் இடம்பெற்ற போது அவற்றை எமக்கு எதிராகத் திருப்பி விட்டார்கள். முஸ்லிம் அரசியல் வாதிகள் மட்டுமல்ல, இந்த அரசுக்கு வாக்களித்த முஸ்லிம்களும் இவற்றையெல்லாம் பார்த்துக்கொண்டு மௌனித்துள்ளனர் என்றார். (ஜ10)

## சைட்டத்திலிருந்து பெறப்பட்ட உடற்பாகங்கள் கொழும்பு நீதிமன்றில் அறிக்கை சமர்ப்பிப்பு

கொழும்பு, ஏப். 7
மாலபேயிலுள்ள சைட்டம் நிறுவனத்திலிருந்து குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் பெறப்பட்ட உடற்பாகங்கள் தொடர்பிலான மரபணுப் பரிசோதனைகளின் அறிக்கை, கொழும்பு நீதிவான் நீதிமன்றத்தில், நேற்று முன்தினம் சமர்ப்பிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரபல றக்பி விளையாட்டு வீரர் வசீம் தாஜுதீனின் உடற்பாகங்கள் என்ற சந்தேகத்திலேயே இவை பெறப்பட்டு பரிசோதனைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தன. அந்த அறிக்கையையே குற்றப்புலனாய்வுப் பிரிவினர் மன்றில் சமர்ப்பித்தனர்.

இந்த வழக்கு, கொழும்பு நீதிவான் நீதிமன்ற மேலதிக நீதிவான் பிரசாத் சில்வா முன்னிலையில் நேற்று முன்தினம் எடுத்துக் கொள்ளப்பட்ட போது, கொலை தொடர்பான மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன என்று, பிரதி சொலிசிட்டர் ஜெனரல் டிலான் ரத்னாயக்க, மன்றில் தெரிவித்தார். குற்றப் புலனாய்வுப் பிரிவினரின் மேலதிக விசாரணை அறிக்கையும் மன்றில் சமர்ப்பிக்கப்பட்டது. இந்த வழக்கு, கொழும்பு நீதிவான் நீதிமன்ற மேலதிக நீதிவான் ஜெயராம் ட்ரொஸ்கி முன்னிலையில் வழக்கமாக எடுத்துக் கொள்ளப்படும் நிலையில், அவர் சமுகமளிக்காத காரணத்தால் மேலதிக நீதிவான் பிரசாத் சில்வா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

மரபணு அறிக்கை சீல் வைக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டது, அதிலுள்ள விடயங்கள் தொடர்பில் மன்றில் அறிவிக்கப்படவில்லை.

தாஜுதீனின் படுகொலை தொடர்பில் கைதாகி விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள முன்னாள் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அநுர சேனநாயக்கவின் விளக்கமறியலை, எதிர்வரும் ஏப்ரல் 18ஆம் திகதி வரை நீடித்து உத்தரவிட்ட நீதிவான், வழக்கை அன்றைய தினத்துக்கு ஒத்திவைத்தார்.

வசீம் தாஜுதீன், 2012ஆம் ஆண்டு மே மாதம் 17ஆம் திகதியன்று நாரஹேன்பிட்டிய சாலிகா விளையாட்டு மைதானத்துக்கு அருகில் காரொன்றுக்குள் இறந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஜ-10)

அம்பாந்தோட்டைத் துறைமுக விவகாரம்

# இன்னமும் இறுதி உடன்பாடில்லை

### தலைமை அமைச்சர் நாடாளுமன்றில் தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 7
அம்பாந்தோட்டைத் துறைமுகம் தொடர்பாக இலங்கை அரசுக்கும், சீன நிறுவனத்துக்கும் இடையில் இன்னமும் இறுதி உடன்பாடு ஏற்படுத்தப்படவில்லை என்று தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.



நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் தலைமை அமைச்சர் கேள்விபதில் நேரத்தின்போது இந்தப் பதிலை வழங்கினார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் மகிந்த ஆதரவு அணி நாடாளுமன்ற உறுப்பினரான டலஸ் அழகப்பெரும, அம்பாந்தோட்டைத் துறைமுகத் தைச் சீன நிறுவனத்துக்கு வழங்குவதற்கு அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளது என்று ஊடகங்களில் செய்தி வெளியாகியுள்ளது. இதை உறுதிப்படுத்தும் வகையில் அமைச்சரவைப் பேச்சாளரும் கருத்து வெளியிட்டுள்ளார். அந்த வரைவைச் சபையில் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்று கேள்வி எழுப்பினார். இதற்குப் பதிலளிக்கையிலேயே தலைமை அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது,

குறித்த துறைமுகத்தை அமைப்பதற்காக 2012 ஆம் ஆண்டு முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச எக்ஸிம் வங்கியிடம் கடன் வாங்கினார். அந்தக் கடனைச் செலுத்த வேண்டியுள்ளது. ஒரு தவணைக்குரிய கட்டணத்தைச் செலுத்தா விட்டால் முழுத் தொகையையும் ஒரே தடவையில் செலுத்த வேண்டிய நிலை ஏற்படும். ஆட்சி மாற்றம் ஏற்பட்ட பின்னர் அரச தலைவர் சீனா சென்றார். அதன்பிறகு நானும் சென்றேன். இந்தப் பயணங்களின்போது, "அரசியல் ரீதியில் இது எமக்குப் பாதிப்பாக அமைகின்றது" என்ற சுட்டிக் காட்டினோம். அதனைச் சீனாவும் ஏற்றுக்கொண்டது. கூட்டு வியாபாரத்தின் அடிப்படையில், அதனைக் குத்தகைக்கு வழங்குமாறு ஆலோசனை முன்வைக்கப்பட்டது.

கொழும்புத் துறைமுக நகரை, முன்னாள் அரசு 99 வருடங்களுக்கு வழங்கியது. அதனால்தான் நிறுவனங்கள் 99 வருடங்களைக் கேட்கின்றன.

துறைமுகம் 99 வருடங்களுக்குக் குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள போதிலும், அதனைக் குறைப்பதற்குரிய பேச்சு நடத்தப்பட்டு வருகின்றது.

அதேவேளை, சீன நிறுவனத்துக்கு வழங்குவது தொடர்பான உடன்படிக்கை இன்னும் தயாரிக்கப்படவில்லை. தயாரிக்கப்பட்ட பின்னர் அது சபைக்குச் சமர்ப்பிக்கப்படும். கூட்டு வியாபாரத்தை ஏற்படுத்தவே நடவடிக்கை எடுத்து வருகின்றோம். நிறுவனத்துக்கு 60 வீதமும், அரசுக்கு 40 வீதமும் பங்கு ஒதுக்கப்படும். அதனைப் பெறுவதற்கு 10 வருடங்கள் செல்லும்" என்றார். (ஜ-10)

## வேலை வாய்ப்புப் பணியக கருமபீடம் மீண்டும் திறப்பு

கொழும்பு, ஏப். 7
கட்டுநாயக்க பன்னாட்டு வானூர்தி நிலையத்தின் ஓடுதளங்களில் மேற்கொள்ளப்பட்ட சீரமைப்புப் பணிகளுக்காகக் கடந்த ஜனவரி மாதம்முதல்மூடப்பட்டிருந்த இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் கருமபீடமும் மீண்டும் திறக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வானூர்தி நிலையத்தின் உட்புகும் வாயிலுக்கு அருகே அமைந்திருக்கும் இந்தக் கருமபீடத்தில், வெளிநாட்டு தொழில்களுக்காகச் செல்லும் இலங்கையர்கள் தங்களைப் பதிவு செய்துகொள்வதற்கும், ஏற்கனவே பதிவு செய்திருந்தவர்கள் அந்தப் பதிவுகளைப் புதுப்பித்துக் கொள்வதற்கும் வசதிகள் வழங்கப்பட்டுள்ளன.

கடந்த நான்கு மாதங்களாக இந்தக் கருமபீடம் மூடப்பட்டிருந்ததால் , வெளிநாட்டுத் தொழில்களுக்குச்செல்பவர்கள் தங்களது பதிவுகளைப் பணியகத்தின் தலைமைக் காரியாலயத்திலோ அல்லது கிளைக் காரியாலயங்களிலோ முன்கூட்டியே செய்து கொள்ளவேண்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை வானூர்தி நிலையத்தின் ஓடுபாதையில் ஸ்ரீலங்கன் எயார் லைன்ஸ் நிறுவனம் அண்மையில் கொள்வனவு செய்த யு.எல்.1162 வானூர்தி நேற்று முதலாவதாகத் தரையிறங்கியது.

குறித்த ஓடுபாதையானது சுமார் 50 மில்லின் அமெரிக்க டொலர் நிதியில் அமைக்கப்பட்டுள்ளது.

இதன்மூலம், ஏ380 எயார் பஸ் ரக வானூர்திகளும் தரையிறங்கக்கூடிய வாய்ப்பு ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-4)

## இந்தியப் படகுகளை விடுவிக்க இன்னமும் தீர்மானமேதுமில்லை

கொழும்பு, ஏப். 7
இலங்கையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இந்தியக் கடற்றொழிலாளர்களின் படகுகளை விடுப்பதற்குத் தீர்மானிக்கவில்லை என்று கடற்றொழில் அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்தார்.



வடக்கு மாகாணக் கடற்றொழிலாளர்கள் பிரதிநிதிகளுக்கும், மீன்பிடித்துறை அமைச்சுக்கும் இடையிலான கலந்துரையாடல் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இந்தியாவின் கோரிக்கை அடிப்படையில், படகுகளை விடுவிக்க இலங்கை அரசு தீர்மானித்துள்ளதாகத் தகவல் வெளியாகி இருந்தது. அதற்குப் பதில் வழங்கும் முகமாகவே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

இந்தியாவுடன் பேச்சு நடத்தி, தமிழகக் கடற்றொழிலாளர்களின் அத்துமீறல்களை முற்றாகத் தடுக்க நடவடிக்கை எடுக்கப்படும். அதற்கிடையில், இலங்கை இந்தியக் கடற்றொழிலாளர்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பது தொடர்பில் இடம்பெறும் 3ஆம் கட்டப் பேச்சு இன்று கொழும்பில் இடம்பெறவுள்ளது.

அதனடிப்படையில் இந்தியக் கடற்றொழில் அமைச்சர் ராதா மோஹன் சிங் தலைமையிலான குழு ஒன்று நேற்று இலங்கை வந்தது. என்றார். (ஜ-10)

## வைத்தியசாலை கழிவறையில் சிசுவின் சடலம்

தென்பகுதியிலுள்ள தணமல்வில வைத்தியசாலைக் கழிவறையிலிருந்து சிசு ஒன்றின் சடலம் மீட்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

வைத்தியசாலை ஊழியர் ஒருவர் வழங்கிய தகவலுக்கமைய, குறித்த சிசுவின் சடலம் நேற்று முன்தினமிரவு பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது. சம்பவம்தொடர்பில் விசாரணை களை மேற்கொண்ட பொலிஸார், குறித்தசிசுவின்தாய் தொடர்பிலான தகவல்களைக் கண்டுபிடித்துள்ளனர்.

குறித்த சிசுவின் தாய் சிறுநீர் தொடர்பான நோய் ஒன்றுக்காக வைத்தியசாலைக்கு வந்துள்ளதுடன், தற்போது அம்பாந்தோட்டை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவருவதாகத் தெரிவிக்கப்பட்டது. அவர் தற்போது பொலிஸாரின் பாதுகாப்பின் கீழ் சிகிச்சை பெற்றுவருவதாகக் கூறப்பட்டது. (த-4)

## பிணைமுறி மோசடி விசாரணைகள் பரிந்துரைகளின் பின் ஆரம்பிக்கப்படும்

*நீதி அமைச்சர் தெரிவிப்பு*

கொழும்பு, ஏப். 7
இலங்கை மத்திய வங்கியின் பிணைமுறி மோசடி தொடர்பில் அரச தலைவர் ஆணைக்குழுவின் பரிந்துரைகள் கிடைத்த பின்னரே, சட்ட மா அதிபரால் விசாரணைகளை ஆரம்பிக்க முடியும். இது தொடர்பான விசாரணைகள் எப்போது ஆரம்பிக்கப்படும் என்பதைத் தற்போது கூற முடியாது. இவ்வாறு நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச நேற்று முன்தினம் நாடாளுமன்றில் தெரிவித்தார்.



நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற வாய்மூல விடைக்கான கேள்வி பதில் நேரத்தில். மகிந்த ஆதரவு பொது எதிரணி நாடாளுமன்ற உறுப்பினரான மகிந்தானந்த அலுத்கமகே இது சம்பந்தமான கேள்வியை ஒழுக்கப்பத்திரத்தில் எழுப்பியிருந்தார்.

எனினும், கேள்வி நேரத்தில் அவர் இல்லாத நிலையில் அவர் சார்பில். அந்தக்கேள்வியை நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்தன எழுப்பியிருந்தார். அதற்குப் பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர்மேலும்தெரிவித்ததாவது,

மத்திய வங்கியின் பிணைமுறி மோசடி தொடர்பான விசாரணைகள் இன்னும் ஆரம்பிக்கவில்லை. மத்திய வங்கி பிணைமுறி மோசடி தொடர்பாக அரச தலைவர் ஆணைக்குழு விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அதன்பிரகாரம் மத்திய வங்கி மோசடி தொடர்பான அரசதலைவர் ஆணைக்குழுவின் விசாரணைகள் முடிந்த பின்னரே, விசாரணைகளை ஆரம்பிக்க முடியும்.

அரசதலைவர் ஆணைக்குழுவின் பரிந்துரைகள் கிடைத்த பின்னரே, சட்டமா அதிபரால் விசாரணைகளை மேற்கொள்ள முடியும்.

எனினும் இந்த விசாரணைகள் எப்போது ஆரம்பிக்கப்படும் என்ற திகதியைக் குறிப்பிட முடியாது. பரிந்துரைகள் கிடைத்த பின்னரே அதனைப் பற்றி குறிப்பிட முடியும். என்றார். (ஜ-10)

## காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத்தினர் கலந்துரையாடல்

வவுனியா, ஏப்.7
காணாமல் ஆக்கப்பட்டவர்களின் வடக்கு, கிழக்கு மாகாண சங்க உறுப்பினர்களுக்கான கலந்துரையாடல் நேற்று முற்பகல் 10 மணிக்கு வவுனியா அருந்ததி விடுதியில் இந்தக் கலந்துரையாடல் நடைபெற்றது.
பெண்கள் தலைமை தாங்கும் போராட்டங்கள் எந்த வகையில் நடைபெறுகின்றன, போராட்டங்கள் தொடர்பான அனுபவப் பகிர்வுகள், கேப்பாப்பிலவு, வவுனியா, கிளிநொச்சி, மருதங்கேணி ஆகிய போராட்டங்களின் அனுபவப் பகிர்வுகள், பொலிஸாரின் அச்சுறுத்தல்கள், அழுத்தங்கள் தொடர்பான விடயங்கள் என்பன அதில் பகிரப்பட்டன.
பன்னாட்டு காணாமல் ஆக்கப்பட்டோர் தினமான ஓகஸ்ட் 30ஆம் திகதி பெரும் போராட்டமும், கடையடைப்பும் மேற்கொள்வது என்றும் தீர்மானிக்கப்பட்டது.
அதேவேளை நேற்றைய தினம் காணாமல் ஆக்கப்பட்டவர்களை வெளிப்படுத்தக் கோரி ஜேர்மன், சுவிஸ் போன்ற நாடுகளில் ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டன.
இரகசிய முகாம்களிலுள்ளவர்களின் விவரங்களை வெளியிட வேண்டும், அரசியல் கைதிகளுக்கு பொது மன்னிப்பு, இறந்த உறவுகளுக்கு தங்கு தடையின்றி நினைவுகூருவதற்கு அனுமதியளித்தல், வடக்கு, கிழக்கில் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் அலுவலகத்தின் கிளை அலுவலகங்கள் அமைத்தல், அதில் தமிழ் பேசக்கூடிய சட்டவாதிகள் இருத்தல் வேண்டும், உளவியல் ஆற்றுப்படுத்தல் உத்தியோகத்தர்கள் இருக்க வேண்டும் போன்ற கோரிக்கைகளை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் வலியுறுத்தினர். (ந - 21)



காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் நடத்திவரும் போராட்டங்களுக்கு ஆதரவு தெரிவித்து வவுனியாவில் மோட்டார் சைக்கிள் பேரணி நடத்தப்பட்டது. மன்னார் வீதி, பம்மைமடு ஆயுள்வேத வைத்தியசாலை முன்பாக ஆரம்பித்த பேரணி, போராட்டம் நடைபெறும் இடத்தில் முடிவடைந்தது. சுமார் 50 வரையான மோட்டார் சைக்கிள்கள் கறுப்புக் கொடிகளைப் பறக்கவிட்டவாறு பேரணியில் கலந்து கொண்டன. (ந - 231)

# உணர்வுகளை மதிக்காவிடில் போராட்ட வடிவம் நிச்சயம் மாறும்

## காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் எச்சரிக்கை



கிளிநொச்சி, ஏப்.7
காணாமல் ஆக்கப்பட்டவர்களை வெளிப்படுத்தவும், விடுவிக்கவும் வலியுறுத்தி அவர்களின் உறவினர்களால் மேற்கொள்ளப்படும் தொடர் போராட்டம் 45 நாள்கள் கடந்தும் தொடர்கின்றது.
தமது கோரிக்கைகளுக்குத் தகுந்த தீர்வு கிடைக்காவிட்டால் போராட்ட வடிவத்தை மாற்றுவது தவிர்க்க முடியாதது என்று போராட்டத்தில் ஈடுபடும் உறவினர்கள் தெரிவித்தனர்.
காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களால் வடக்கில் 4 மாவட்டங்களிலும், கிழக்கில் ஒரு மாவட்டத்திலும் தொடர் போராட்டங்கள் நடத்தப்பட்டு வருகின்றன.
"கடந்த பெப்ரவரி மாதம் 20ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட போராட்டம் 46 நாள்கள் கடந்தும் தொடர்கின்றது. அரச தலைவர், தலைமை அமைச்சர் ஆகியோர் இது தொடர்பாக எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. எம் உணர்வுகளை மதிக்காது அமைதி காக்கின்றனர். எமக்குத் தீர்வு வழங்கப்படாது விட்டால் போராட்ட வடிவத்தை மாற்றுவது தவிர்க்க முடியாது." என்று கூறினர் கிளிநொச்சி கந்தசாமி கோயில் முன்பாகத் தொடர் போராட்டத்தில் ஈடுபடும் மக்கள்.
வடக்கில் கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களிலும், கிழக்கில் திருகோணமலையிலும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் தொடர் போராட்டங்கள் நடத்துகின்றனர்.
கிளிநொச்சியில் 46ஆவது நாளாகவும், வவுனியாவில் 42ஆவது நாளாகவும், முல்லைத்தீவில் 30ஆவது நாளாகவும், மருதங்கேணியில் 23ஆவது நாளாக வும் போராட்டங்கள் தொடர்கின்றன. திரு கோணமலையில் 33ஆவது நாளாக போராட்டம் நடைபெறுகின்றது. (ந -21,7,35,26)

## டெங்கு ஒழிப்புச் செயற்பாட்டில் 112 பேர் மீது வழக்கு

வவுனியா, ஏப்.7
வவுனியாவில் வருட ஆரம்பத்திலிருந்து நேற்று வரையான காலப்பகுதியில் டெங்கு ஒழிப்புச் செயற்பாட்டின் போது 112 பேருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
இவ்வாறு வவுனியா சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகப் பணிமனையின் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் மே.ஜெயா தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது:
வவுனியாவில் தேசிய டெங்கு ஒழிப்பு நடவடிக்கை கடந்த 29ஆம் திகதியிலிருந்து முதலாம் திகதி வரை முன்னெடுக்கப்பட்டது. டெங்கு நுளம்பு பெருகும் சூழல் காணப்பட்ட இடங்களின் உரிமையாளர்கள் 37 பேருக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதை விட நூற்றுக்கும் அதிகமானவர்களுக்கு எச்சரிக்கை அறிவித்தல்கள் வழங்கப்பட்டன. அவற்றைப் பின்பற்றாதவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.
வவுனியாவில் இந்த ஆண்டு 228 பேருக்கு டெங்குத் தொற்று ஏற்பட்டுள்ளது- என்றார். (ந - 21)



இலங்கையில் இறக்குமதி செய்து விநியோகிப்போர்.
வரை. ஸ்டபர்ட் மோட்டார் (தனியார்) நிறுவனம்
Honda Sri Lanka



நேபாளத்தின் தலைநகர் காத்மண்டுவில் பச்சை குத்தியவர்களுக்கான ஓர் மாநாடு நடைபெற்று வருகிறது. பழைமையான பச்சை குத்தும் முறைகள், நவீன முறையில் பச்சை குத்துதல் போன்றன குறித்த மாநாட்டில் கற்பிக்கப்படுகின்றன. உலகெங்கிலும் இருந்து நூற்றுக்கணக்கான ஆர்வலர்கள் மாநாட்டில் கலந்துகொண்டுள்ளனர். மாநாட்டில் கலந்துகொள்பவர்கள் புதிதாகப் பச்சை குத்தவும் ஏற்கனவே வரையப்பட்ட உருவங்களை மாற்றியமைக்கவும் அங்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. (ம)

# ஜெயாவுக்கு விதிக்கப்பட்ட தண்டத்தை வசூலிக்கத் தேவையில்லை

### உயர்நீதிமன்றம் தீர்ப்பு

சென்னை, ஏப். 7

சொத்துக் குவிப்பு வழக்கில் ஜெயலலிதாவுக்கு விதிக்கப்பட்ட 100 கோடி தண்டப்பணத்தை வசூலிக்கத் தேவையில்லை என்று இந்திய உயர்நீதிமன்றம் நேற்றுமுன்தினம் தீர்ப்பு வழங்கியது. இந்த உத்தரவை அடுத்து கர்நாடக அரசின் வழக்கு தள்ளுபடி செய்யப் பட்டது.

முன்னாள் முதல்வர் ஜெயலலிதா, சசிகலா, இளவரசி, சுதாகரன் ஆகியோர் வருமானத்துக்கு அதிகமாகச் சொத்துக்களைக் குவித்தனர். இதனால் சசிகலா, இளவரசி, சுதாகரன் மூவருக்கும் 4 ஆண்டுகள் சிறைத்தண்டனையும் தலா 10 கோடி ரூபா (இந்திய மதிப்பில்) தண்டமும் விதிக்கப்பட்டது. ஜெயலலிதாவுக்கு 4 ஆண்டுகள் சிறைத்தண்டனையுடன் 100 கோடி ரூபா (இந்திய மதிப்பில்) தண்டமும் விதிக்கப்பட்டது. ஜெயலலிதா சாவடைந்ததால் அவர் வழக்கில் இருந்து விடுவிக்கப்பட்டார். எனினும் அவருக்கு விதிக்கப்பட்ட தண்டத்தை வசூலிக்க வேண்டும் என்று கர்நாடக அரசு வழக்குத் தொடர்ந்தது. ஆனால் அவர் இறந்து விட்டதால் தண்டம் விதிக்க வேண்டிய சூழல் எழவில்லை என்று உயர்நீதிமன்றம் தெரிவித்தது. (ம)





# சீனாவுக்கு எதிராக இந்தியா என்னைப் பயன்படுத்தவில்லை


### தலாய் லாமா பதிலடி


இந்தியா எந்தச் சந்தர்ப்பத்திலும் சீனாவுக்கு எதிராகத் தன்னைப் பயன்படுத்தியதில்லை என்று திபெத் ஆன்மீகத் தலைவர் தலாய் லாமா தெரிவித்தார்.

இந்தியாவின் ஓர் அங்கமான அருணாச்சல பிரதேசத்தை சீனா உரிமை கொண்டாடி வருகிறது. இதன் காரணமாக திபெத் ஆன்மிகத் தலைவர் தலாய் லாமாவை அருணாச்சல பிரதேசத்துக்குள் அனுமதிக்கக்கூடாது என இந்தியாவுக்கு சீனா எச்சரிக்கை விடுத்தது (திபெத்தையும் சீனா தன்னுடைய ஒருங்கிணைந்த பகுதி என்று தெரிவித்து வருவதால் தலாய் லாமாவை சீனா எதிரியாகப் பார்க்கிறது). ஆனால் இது இந்தியாவின் உள்நாட்டு விவகாரம் இதற்குள் சீனாவின் தலையீடு தேவையற்றது என்று இந்தியா பதிலடி கொடுத்தது. இது தொடர்பில் முறுகல்கள் நீடித்து வரும் நிலையிலேயே இந்தக் கருத்தைப் பதிவுசெய்தார் லாமா.

அருணாச்சல பிரதேசம் போம்திலாவில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே லாமா இவ்வாறு தெரிவித்தார்.

சீனாவுக்கு எதிராக என்னை ஒரு கருவியாக இந்தியா ஒருபோதும் பயன்படுத்தியது இல்லை. நான் எங்கு சென்றாலும் அகிம்சை, சமாதானம், அமைதி மற்றும் மத நல்லிணக்கம் தொடர்பாகவே பேசி வருகிறேன். என்னை இந்தியா பகடைக்காயாக்குகிறது என்ற கருத்துக்கள் முழுதும் தவறானவை என லாமா மேலும் தெரிவித்தார். (ம)





### 10 வருடங்களின் பின்னர் உருக்கம்

# தன்னைக் காத்த சிப்பாயை மீண்டும் சந்தித்தார் தலாய்

புதுடெல்லி, ஏப். 7

60 ஆண்டுகளுக்கு முன்னர் சீனாவின் ஒருபகுதியான திபெத்தில் இருந்து தப்பி வந்தபோது தன்னைப் பாதுகாத்த இந்தியச் சிப்பாயை மீண்டும் சந்தித்தார் தலாய் லாமா. டவாங் நகரில் நேற்றுமுன்தினம் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

சீனாவின் ஆட்சிக்கு எதிராக திபெத்தின் கிளர்ச்சி தோல்வியடைந்த பின்னர் 2 வாரகாலமாக மலைகளைக் கடந்து பயணம் செய்து இந்திய எல்லையில் நரேன் சந்திர தாஸ் என்ற சிப்பாயை சந்தித்தார் தலாய் லாமா. அப்போது தலாய் லாமாவுக்கு 21 வயது. நரேனுக்கு 19 வயது. நரேனின் பாதுகாப்பில் ஓர் சிப்பாயைப் போன்று வேடமிட்டு வழிநடத்தப்பட்டார் தலாய் லாமா.

"என்னைப் பாதுகாத்து வழிநடத்திய நரேன் சந்திரதாஸை மீண்டும் சந்தித்ததில் மிகவும் மகிழ்ச்சி. அவரைப் பார்த்த பின்னர் எனக்கு வயதாகிவிட்டது என்பதை உணர்கிறேன் என்று தலாய் லாமா தெரிவித்தார்" என்று இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. (ம)

சிரி

பி

ஜே

பெய்ரூட், ஏப்.
சிரியாவில் அர
ஆதரவு பெற்ற
சந்தேகிக்கப்படு
தாக்குதலின் பி
உள்ளது என்று
குற்றஞ்சாட்டிய
சிரிய அரசு, ஐ
அரசுக்கு எதிர
இருமுனைப் ே
ஐ.எஸ்ஸுக்கு
காவும், கிளர்
போரில் ரஷ்ய
ளன. இட்லிப்
ரில் அரசுக்கு எ
சிக் குழுவை
செவ்வாய்க்கிழ
வழி இரசாய
தவறியதை அ
டவர்கள் சாவ
சிகிச்சை எடுத்
ளில் பலரின் நி
உள்ளதால் உ

# பாதி மீசையுடன் வீதியில் உருண்டு த

புதுடெல்லி, ஏப். 7

பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி இந்தியத் தலைநகர் டெல்லியில் தமிழக விவசாயிகள் 24 ஆவது நாளாக நேற்றும் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தேசிய, தனியார் மற்றும் கூட்டுறவு வங்கிகளில் விவசாயிகள் பெற்றுள்ள பயிர்க் கடன்கள் அனைத்தையும் தள்ளுபடி செய்வது, வறட்சி நிவாரணம் வழங்குவதில் சிறுபோக பெரும்போக விவசாயிகள் என வித்தியாசம் காட்டாமல் ஏக்கர் ஒன்றுக்கு 25 ஆயிரம் ரூபாய் வீதம் அனைவருக்கும் வறட்சி நிவாரணம் வழங்குவது, விவசாயத் தொழிலாளர்களுக்கு நிவாரணம் வழங்குவது, காவிரி மேலாண்மை வாரியம் அமைத்தல், அண்டை மாநிலங்களிடமிருந்து தமிழகத்துக்குக் கிடைக்க வேண்டிய நீர் உரிமைகளை நிலைநாட்டுவது, நெடுவாசலில் இயற்கை எரிவாயுத் திட்டத்துக்கு ஒப்பந்தம் போட்ட மத்திய அரசுக்கு கண்டனம், மீனவர்களின் பிரச்சினைகளுக்கு நிரந்தர தீர்வு என்பன உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து தமிழக விவசாயிகள் டெல்லியில் கடந்த மூன்று வாரகாலமாக போராடி வருகின்றனர்.

தூக்குக் கயிறுடனும், எலிகள், பாம்புகளைக் கடித்துக்





## ரிய இரசாயனத் தாக்குதல்

# ின்னணியில் ரஷ்யா ஜேர்மனி குற்றச்சாட்டு

ட். ஏப். 7
வில் அரச படைகள் அல்லது அரச
பெற்ற நாடுகள் நடத்தியதாகச்
க்கப்படும் வான் வழி இரசாயனத்
லின் பின்னணியில் ரஷ்யாவே
து என்று ஜேர்மனி பகிரங்கமாக
சாட்டியது.
அரசு. ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு.
த எதிரான ஆயுதக் குழு என்று
னைப் போரில் சிக்கித் தவிக்கிறது.
ரசுக்கு எதிரான போரில் அமெரிக்
கிளர்ச்சிக் குழுவுக்கு எதிரான
ரஷ்யாவும் பக்கபலமாக உள்
ட்லிப் மாகாணத்தில் சேகுன் நக
சுக்கு எதிராகச் செயற்படும் கிளர்ச்
ழுவை இலக்குவைத்து கடந்த
ாய்க்கிழமை நடத்தப்பட்ட வான்
ரசாயனத் தாக்குதல் இலக்குத்
தை அடுத்து நூற்றுக்கும் மேற்பட்
ள் சாவடைந்தனர். 400 பேர்
ச எடுத்துவருகின்றனர். அவர்க
ரின் நிலைமை கவலைக்கிடமாக
ால் உயிரிழப்பு அதிகரிக்கலாம்



என்ற எச்சரிக்கையை சிரியாவில் செயற்பட்டுவரும் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் கண்காணிப்பகம் விடுத்தது. இந்தத் தாக்குதல் போர்க்குற்றம் என்று ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் குட்டரெஸ் தெரிவித்தார்.

இந்தத் தாக்குதலின் பின்னணியில் ரஷ்யாவே உள்ளது என்று ஜேர்மனி குற்றஞ் சாட்டியது.

அரசுக்கு எதிரான கிளர்ச்சிக் குழுவின் பகுதியில் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. கிளர்ச்சிக் குழு விவகாரத்தில் சிரிய அரசுக்கு ஆதரவாக ரஷ்யாவே உள்ளதால் ஜேர்மனி இந்தக் குற்றச் சாட்டை முன்வைத்திருக்கலாம் என்று கருதப்படுகிறது மட்டுமல்லாமல் ஈரான் மீதும் ஜேர்மனின் சந்தேகப் பார்வை விழுந்துள்ளது.

கடந்த ஆறு வருடங்களாக நடைபெற்றுவரும் உள்நாட்டுப் போரில் நடத்தப்பட்ட கொடுமையான தாக்குதல் இது என்று சிரிய எதிர்க் கட்சிகள் முன்னதாகத் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

# பிங்க் ஸ்டார் வைரம் ரூ.1,100 கோடிக்கு ஏலம்


விக்ரோறியா, ஏப். 7

ஹொங்கொங்கில் சோத்பை நிறுவனம் சார்பில் நேற்றுமுன்தினம் நடந்த ஏலத்தில் பிங்க் ஸ்டார் வைரமொன்று இலங்கை மதிப்பில் கிட்டத்தட்ட ஆயிரத்து 100 கோடி ரூபாவுக்கு ஏலம் போன்து. 59.60கரட்கொண்ட இந்த வைரம் உலகிலேயே மிகப்பெரியது என அமெரிக்காவின் ஜெம்மாலஜிகல் நிறுவனம் தெரிவித்தது.

முட்டை வடிவிலான இந்த வைரம். 1999ஆம் ஆண்டு ஆபிரிக்காவில் உள்ள சுரங்கத்தில் டிபீர்ஸ் நிறுவனத்தால் கண்டுபிடிக்கப்பட்டது.

கடந்த வருடம் கிறிஸ்டி நிறுவனத்தால் நடத்தப்பட்ட ஏலத்தில், நீலக்கல் வைரமொன்று இலங்கை மதிப்பில் கிட்டத்தட்ட 900 கோடிக்கு ஏலம் போனது.

கடந்த ஒரு வருடகாலமாக இந்த வைரமே ஏலத்தில் விற்கப்பட்ட உலகின் பெறுமதியான வைரம் என்ற பெருமையை பெற்றிருந்தது. தற்போது ஆயிரத்து 100 கோடிக்கு விற்கப்பட்ட பிங்க் ஸ்ரார் வைரம் ஏலத்தில் விற்கப்பட்ட உலகின் பெறுமதியான வைரமாக மாறியுள்ளது. (ம)



## தமிழக விவசாயிகள் போராட்டம்



கொண்டும், சாவு வீடு நடத்தியும் இதுவரை தமது ஆதங்கத்தை வெளிப்படுத்திய அவர்கள், கடந்த திங்கட்கிழமை பாதி தலை முடியை வழித்துக் கொண்டும். செவ்வாய்க்கிழமை பாதி மீசையை வழித்துக் கொண்டும். நேற்றுமுன்தினம் புதன்கிழமை கை, கால்களை கட்டிக் கொண்டும் போராட்டத்தில் ஈடுபட்டனர். போராட்டத்தில்24 ஆவது நாளான நேற்று தலைகீழாக நின்றும் வீதியில் உருண்டும் அவர்கள் தமது போராட்டத்தை நடத்தினர்என்று இந்திய ஊடகங்கள் குறிப்பிட்டன. (ம)



# மொபிடெல் நிறுவனத்தின் தலைமை நிறைவேற்று அதிகாரியாக நளின் பெரேரா தெரிவு

மொபிடெல் (பிரைவேட்) லிமிடெட் நிறுவனத்தின் தலைமை நிறைவேற்று அதிகாரி பதவிக்கு நளின் பெரேரா தெரிவுசெய்யப்பட்டுள்ளதான தகவல் தெரிவிக்கப்படுகின்றது.

இம்மாதம் முதலாம் திகதியில் இருந்து உத்தியோகபூர்வமான முறையிலே தனது பதவியை பொறுப்பேற்றுக்கொண்டுள்ள இவர் கடந்த 2001ஆம் ஆண்டு மொபிடெல் நிறுவனத்தின் சந்தைப்படுத்தல் பிரிவின் பொது முகாமையாளராக தனது பயணத்தை ஆரம்பித்துக்கொண்டதுடன் த்னது தனித்தன்மையான தலைமைத்துவச் செயற்பாடுகள் காரணமாகக் குறுகியகாலத்திலேயே சந்தைப்படுத்தல் பிரிவின் மூத்த பொது முகாமையாளராகவும் பின்பு சிரேஷ்ட பொது முகாமையாளராகவும் பதவி உயர்வுகளைப் பெற்றுக்கொண்டதாகவும் கூறப்படுகிறது.

தவிர மொபிடெல் நிறுவனத்தின் சந்தைப்படுத்தல் பிரிவின் சகல பொறுப்புக்களையும் வினைத்திறன் மிகு திட்டமிடல் மற்றும் வழிநடத்தல் செயன்முறைகளினூடு சிறப்பாக கட்டமைத்துக்கொண்டதுடன் நிர்வாகம் சார் நடவடிக்கைகளில் புதிய பல மாற்றங்களை அறிமுகப்படுத்திக்கொண்டதாக சொல்லப்படுகிறது.

மூன்று தசாப்தகாலமாக பலதரப்பட்ட முன்னணி உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிறுவனங்களில் பணியாற்றிய அனுபவம் கொண்டவராக நளின் பெரேரா இருந்தாலும் மொபைல் தகவல் தொழில்நுட்ப துறையின் வரலாற்றோடு அவரது பயணம் தனிச்சிறப்பு வாய்ந்ததாக பதிவிடப்பட்டுள்ளது.

இவர் சந்தைப்படுத்தல்துறை மற்றும் பட்டய விற்பனையாளர்துறையில் இங்கிலாந்தின் இரண்டு முதுகலை டிப்ளோமாக்களை பெற்றுக்கொண்டுள்ளதுடன் கொழும்பு பல்கலைக்கழகத்தின் வணிகத்துறை முதுகலைப்பட்டதாரியாகவும் விளங்குகின்றார்.

குறிப்பாக 2015 ஆம் ஆண்டு மொபிடெல் நிறுவனத்தின் சந்தைப்படுத்தல் துறையின் தலைமை அதிகாரியாக பொறுப்பெற்றுக்கொண்டதன் பிற்பாடு தொலைத்தொடர்புத் துறையில் மொபிடெலின் சந்தை முறைமையை மாற்றியமைத்து இலங்கையின் முன்னிலை தொலைத்தொடர்பு நிறுவனமாக்கி மொபிடெலின் அடுத்த கட்டப் பரிணாம வளர்ச்சியை துரிதப்படுத்திக்கொண்டார். தயாரிப்பு உள்ளடக்கத்திலும், அலைவரிசை அபிவிருத்தியிலும், மனிதவள மேலாண்மையிலும் அதிக கவனமெடுத்துக்கொண்டார். அவற்றுள் புதுமை மற்றும் தரம் என்பவற்றுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து நிறுவனத்தை வினைத்திறனோடு இயங்குநிலை பெறச்செய்தார். அத்தோடு ஒட்டுமொத்த தொலைத்தொடர்புத் தொழிற்றுறை பற்றியதான பரந்த அறிவையும் தெளிவான புரிதலையும் கொண்டிருந்தார். கைபேசித் தொலைத்தொடர்புத் தொழிற்றுறையில் அவருடைய நிபுணத்துவமும் செயற்பாடுகளும் தனித்துவமானதாக காணப்பட்டமை குறித்து நோக்கத்தக்கது.








"நளின் பெரேரா இலங்கையின் கைபேசித் தொழில்நுட்பத்துறை யில் ஏற்படுத்தியதான சாதனைகளில் ஒன்றாக பிறீ பெயிட் (Pre Paid) திட்டத்தின் அறிமுகம் சொல்லப்படுகிறது. இந்த அறிமுகம் என்பது கைபேசித் தொழில் புரட்சியை இலங்கையில் பரந்துபட்ட ரீதியிலே ஏற்படுத்தியிருந்தது. இவர் முற்கொடுப்பனவு சேவை உட்பட பல சேவைகளை முன்னெடுத்து வெற்றிகரமான திட்டங்களை செயற்படுத்தியதோடு நிறுவனத்தின் தொழில் தீர்வுச் செயற்பாடுகள் குறித்த மிகச்சிறந்த ஆளுமைத் தெரிவாக முன்னிலை பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது."





## 'சிங்கிள் பிறைவேற் மசெஞ்சர்'

### வட்ஸ் அப் இனை ஒத்த புதிய பிரயோகச் செயலி

தொழில்நுடபத்தின் வளர்ச்சிப் படிநிலைகள் புதிய பிரயோகங்களை தொடர்பாடல் துறையினுள் வினைத்திறனுடையதான உள்ளீடுகளாகத் தந்துகொண்டேயிருக்கிறது. அவையும் பின்னூட்டங்க ளோடே செயலுருப் பெறுகின்றது.

அந்த வகையிலே வட்ஸ்அப்பினை ஒத்ததான புதிய 'சிங்கிள் பிறைவேற் மசெஞ்சர்' (Single Private Messenger) பிரயோகச் செயலியானது தற்போது அறிமுகம் பெற்றுள்ளதாகச் சொல்லப்படுகிறது.

வட்ஸ் அப்பினை போன்றதான அடையாளத்துடன் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதான இந்தப்பிரயோகச்செயலியானதுவட்ஸ்அப்பின்வசதிகளைக்கொண்டுள்ளது.

அன்ரோய்ட் தளத்தில் இயங்குநிலை பெறும் வசதியுடன் அமைக்கப்பட்டுள்ள இந்த பிரயோகச் செயலியை அதிதிறன்பேசிகள் மற்றும் ஐ போன்களிலும் பயன்படுத்திக்கொள்ள முடிவதாக கூறப்படுகின்றது.

இந்தச் செயலியின் உதவியுடன் நாம் விரும்பும் நபருக்கான குறுந்தகவல், காணொலி அழைப்புகளை மேற்கொள்ள முடிவதுடன் இவை பயன்படுத்துவதற்கு ஏற்றவகையிலே மிக எளிதான உள்ளீடுகளின் வடிவமைப்பினையும் பெற்றுக்கொண்டுள்ளது.

இதற்கு மேலதிகமாக ஏனையவர்களுடன் புகைப்படங்கள், கோப்புக்கள் போன்றவற்றினை பகிர்ந்து கொள்ள முடிகிறது. குறிப்பாக இவற்றில் உள்ளதான எண்ட் டு எண்ட் என்கறொப்சன் முறையானது எமது தகவல்கள் திருடப்படுவதைத் தடுப்பதென்பது இவற்றின் சிறப்பம்சமாகும்.







## இலங்கையில் தனிநபர் வருமானம் அதிகரிப்பு

இலங்கையில் தனி நபர் வருமானமானது கடந்த இரண்டு ஆண்டுகளில் குறிப்பிடத்தக்க வளர்ச்சியை எட்டியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையிலே உள்நாட்டிலுள்ள சில்லறை விற்பனைச் சந்தைகளின் தொகை மதிப்பீடு 25 தொடக்கம் 30 பில்லியன் டொலர்களாக அமைந்துள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளதுடன் இந்த மதிப்பீட்டின் சமனிலையானது விரைவில் இரட்டிப்பாகும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

குறிப்பாக இலங்கையின் தனி நபர் வருமானமானது 3 ஆயிரத்து 912 டொலர்களாக அமைந்துள்ளது. இந்தத் தொகையானது தெற்கு ஆசிய நாடுகளின் பொருளாதாரத் தரப்படுத்தல் முறைமையில் முதன்மை இடத்தைப்பெற்றுள்ளதாகதெரியவருகிறது.

## விற்பனைக்கு வழங்காது மறைத்து வைக்கப்பட்டிருந்த அரிசி பறிமுதல்

விற்பனைக்கு வழங்கப்படாது மறைத்து வைக்கப்பட்டிருந்த ஒருதொகை அரிசியை பறிமுதல் செய்ய மாளிகாகந்தை நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதன்பிரகாரம் புறக்கோட்டை ஜோன் வீதியில் இயங்கி வந்த அரிசி விற்பனை நிலையமொன்றே இவ்வாறு சுற்றிவளைக்கப்பட்டதாக வும் அங்கு மறைத்து வைக்கப்பட்டிருந்ததான 17 ஆயிரத்து 150 கிலோ கிராம் அரிசியை நுகர்வோர் அதிகார சபை மீட்டுள்ளதாகவும் கைத்தொழில் மற்றும் வர்த்தகத்துறை அமைச்சு கருத்து வெளியிட்டுள்ளது.

மேலும், இந்த அரிசி சீல்வைக்கப்பட்டதுடன் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டதோடு சம்பவம் தொடர்பில் கைதுசெய்யப்பட்ட நபர் குற்றத்தை ஒப்புக்கொண்டதைத் தொடர்ந்து அவருக்கு எதிராக 12 ஆயிரத்து 500 ரூபாய் அபராதமும் விதிக்கப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

தவிர குறித்த அரிசியை விற்பனை செய்வதன் மூலமாகப்பெறப்படும் பணத்தை நுகர்வோர் அதிகாரசபையின் கணக்கில் வரவிடுமாறும் மாளிகாகந்தை மேலதிக நீதவான் மஞ்சுலரத்நாயக்க உத்தரவுபிறப்பித்துள்ளதாகவும் கைத்தொழில் மற்றும் வர்த்தகத்துறை அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.



> ஆன்ம ஈடேற்றம் கருதி பதியாகிய பரம் பொருளுடன் அதாவது சிவத்துடன் பசுவாகிய ஆன்மா இணைவதான ஓர் உன்னத நிலையினை விளக்குவதாக பங்குனி உத்தர விழா அமைகின்றது. அத்துடன் உலக இயக்கம் நடைபெற வேண்டுமாயின் சிவமும் சக்தியும் இணைய வேண்டும். சிவம் இன்றி சக்தியில்லை, சக்தியின்றி சிவமில்லை எனவே இவற்றின் இணைவே உலகத்தின் இயக்கம்.

# பரமேஸ்வரனுக்கும் பார்வதிக்கும் திருமணம் நடந்த திருநாளே பங்குனி உத்தரம்

மதுரகவி காரை
எம்.பிஅருளானந்தன்

பங்குனிமாதத்தில்உத்திரநட்சத்திரம் பௌர்ணமியில்வரும்நாளில்இந்த விரதம் கொண்டாடப்படுகின்றது.
இறைவனும்இறைவியும்அதாவது பரமேஸ்வரன் பார்வதியம்பாளின் திருமணம் நடைபெற்ற திருநாள் உத்தரநாள் சிவசக்தி ஐக்கியத்தை மகத்துவப்படுத்தும் திருநாளே இன்று கொண்டாடப்படுகின்ற பங்குனி உத்தரம்.
ஆண்டுதோறும்ஆலயங்களில்பரமேஸ்வரனுக்கும்பார்வதிக்கும்இந்தத்திருமணவிழா நடத்தப்படு
வ த ன் நோக்கம், உலகியல் வாழ்க்கையில் திருமணத்தின் புனிதத் தன்மையையும்அந்தத்திருமணத்தின் மூலம்இல்லறத்தின்நல்லறப்பணிகளையும் நிறைவேற்றும் சிறப்பினை உணர்த்துவதாக அமைகின்றது.
ஆன்ம ஈடேற்றம் கருதி பதியாகிய பரம்பொருளுடன்அதாவதுசிவத்துடன் "பசுவாகிய" ஆன்மா இணைவதான ஓர் உன்னத நிலையை விளக்குவதாகப் பங்குனி உத்தர விழா அமைகின்றது. அத்துடன் உலகஇயக்கம்நடைபெறவேண்டுமாயின் சிவமும் சக்தியும் இணைய வேண்டும். சிவம் இன்றி சக்தியில்லை, சக்தியின்றி சிவமில்லை எனவே இவற்றின் இணைவே உலகத்தின் இயக்கம்.
இந்த உத்தரத் திருநாளென்பது பார்வதி சமேதரராகப் பரமேஸ்வரனைத் திரும்ணக் கோலத்தில் தரிசித்து விரதம் அனுஷ்டிக்கப்படும் புண்ணிய நாள் தான் பங்குனி உத்தரம். இந்த விரதம் திருமண விரதம் எனவும் கலியாண சுந்தரவிரதம் எனவும் போற்றப்படுகின்றது. இந்தவிரதம் ஈழத்திலுள்ளபஞ்சஈஸ்வரங்களிலும் சிறப்பாக அனுஷ்டிக்கப்படுகின்றது.
தமிழகத்தில் மதுரையில் ஸ்ரீ மீனாட்சி சுந்தரேஸ்வர்திருக்கல்யாணம்பங்குனிஉத்தரத்தில்சிறப்பாக நிகழ்த்தப் படுகின்றது. அது மட்டுமல்ல சீதா கல்யாணமும் இந்த நாளிலேயே நடந்தது.
திருமகள் இந்தப் பங்குனி உத்தர விரதத்தினைக்கடைப்பிடித்துவிஷ்ணுவின்திருமார்பில் வீற்றிருக்கும் பேறுபெற்றார். 48 ஆண்டுகள் பங்குனி உத்தரத்தன்று விரதம் இருப்பவர்கட்கு மறுபிறவி அருள் பிறவியாக அமையும்.
இந்திரன்.இந்திராணியைப்பெற்றதும்.பிரமன் சரஸ்வதியை நாவில் வைத்ததும் சந்திரன் அழகு மிக்க இருபத்தேழு கன்னியரை மனைவியாகக் கொண்டதும் இந்த விரத மகிமையினாலேயே தான் எனப் புராணங்கள் கூறும்.
பங்குனிஉத்தரம்வருகின்றஇந்தப்பங்குனி மாதம் முழுவதும் அம்பிகை வழிபாட்டுக்கு உரியதினமாகஅமைகின்றது. பங்குனிமாத திங்கட்கிழமைகளில் பங்குனித் திங்கள் பொங்கல் வழிபாடாக தீ மிதிப்பு விழாவாகக் கொண்டாடப்படுகின்றது. ஈழத்திலே மட்டுவில் பன்றித் தலைச்சி அம்மன் ஆலயத்தில் கூட பங்குனித் திங்கள்தோறும் மிகச் சிறப்பாக இந்த விழா கொண்டாடப்படுகின்றது.
இத்தகு மகத்துவம்மிக்கதிருநாள்எதிர்வரும் 9ஆம்திகதிஞாயிற்றுக்கிழமைஅமையவுள்ளது. அந்தத் திருநாளில் நாமெல்லோரும் சிவசக்தி ஆலயங்களில் நடைபெறுகின்ற வழிபாடுகளில்இணைந்துகொள்வோமாக.




# கந்தபுராணக் கலாசார மேம்பாடு கருதிய ஒரு கவனவீர்ப்பு




கே.எஸ்.சிவஞானராஜா

**தீட்சை**
சைவசமயிகள்ஒவ்வொருவரும்சமயதீட்சை பெறவழிசமைத்தல். அந்தணப்பெருந்தகைகள் மூலம் வாய்ப்பளித்தல்.

**சிவசின்னம்**
திருநீறு, சந்தனம், குங்குமம், உருத்திராக்கம், பத்திர புஷ்பம் இவற்றுள் ஏதாவது ஒன்றையாவதுநாள்தோறும்அணிந்திடஆதரவு நல்குதல். ஆவன புரிதல் சிவமயமான மாத இதழ் வெளியிடுதல். இது மாணவர்களுக்காக.
நமஸ்காரம் தினமும் ஏதாவதொரு ஆலயம் சென்றுஅட்டாங்க/பஞ்சாங்கமௌனவழிபாடாற்றுதல். ஆரோக்கியம் பெறுதல்.

**திருமுறைப்பாராயணம்**
தேவாரம் திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, புராணம் தினமும் பாட ஏற்பாடும், ஒழுங்கும் செய்தல்.
ஆலயங்களில் மட்டுமல்ல பாடசாலைகளிலும் ஓதிட வழி சமைத்தல். புராணபடனம், கதாப்பிரசங்கம், உபந்நியாசம், நாமசங்கீர்த்தனம், பஜனை. குறிப்பாக வெள்ளி தோறும் ஆலயங்களில் பஜனையாவது இடம்பெற ஆவனபுரிதல்.



**கோமாதா பூசை வழிபாடும் பசு வளர்ப்பும் திருநீறு ஆக்கமும்**
காரைநகர் வியாவில் ஐயனார் தேவஸ்தானத்தில் கோமாதாக்கள் பல மிகவும் தெய்வீகமாக வளர்க்கப்பட்டு திருநீறும் ஆக்கப்படுகிறது.
மகாராணி சோமு இந்தப்பணியை உளமாரவே ஆற்றுகின்றார். இங்கேபசுவேமருந்தாகிறது.

**சமத்துவம்**
ஒருகாலத்தில்பாராமுகமாக இருந்தஆலயங்கள், இன்றுவரை ஒதுக்கப்பட்டவையாகவே இருக்கின்றன. அத்தகைய ஆலயங்கள் சமநிலை பெறவேண்டும்.

**வழக்குகள் விடுவிக்கப்படல்**
தெய்வங்களை நீதிமன்றத்துக்கு எடுத்துச் செல்வதில்படித்தவர்களேமுன்னிற்பதனைப் பார்க்கலாம்.

நீதிமன்றம்வரைஎடுத்துச்சென்றுசிறையிடுவது ஆரோக்கியமானதல்ல. (14.03.2017) வெளிவந்த ஊடகத்தில் மானிப்பாயில் ஒரு சம்பவம்கவலையளித்தது.

**பதவிகள்**
ஒருவர்5வருடம்கூடஒருபதவியில்இருப்பது ஏற்புடையதல்ல. காரணம் சமயம் ஒருவருக்கு மட்டுமல்ல பலருக்கும் சந்தர்ப்பம் அளிப்பதாகும். தாமாக விலகும் பக்குவம் வளரவேஇதயங்கள்இளகவேண்டும். இறங்குவதும் இரங்குவதுமே தேவையானது.

**பெண்களுக்கும் வாய்ப்பு**
காலத்தின்வேண்டுதல்இதுவாகும். சிலஆலயங்களில்பெண்கள்பஞ்சபுராணம், பிள்ளையார்கதைபடிப்பதற்குத்தடைவிதிக்கப்பட்டுள்ளது. ஏன், பெண்பெறுவதற்குமட்டும்படைக்கப்படவில்லை!
மது, மாது, போதை, கடத்தல், வன்புணர்வு, இறைச்சிக்கடைகள், வேள்வி, களவு, போலிகள், விபச்சாரம்தொடர்பானவிழிப்புணர்வுக் கருத்தரங்குகள் பதாகைகள் விளம்ப ரங்களை முன்னெடுத்தல் வேண்டும்.
பாலியல் சுரண்டல்கள், பிறர்மனை நாட்டம் உடையவர்களால் வரும் ஆபத்துக்களுக்கு எச்சரிக்கை விடுத்தல்.

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com



## சரியான நேரத்தில் வந்துள்ள மிக அவசியமான அழுத்தம்

பன்னாட்டு மன்னிப்புச் சபை மிக முக்கியமான விடயத்தை இலங்கையின் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவிடம் வலியுறுத்தியிருக்கிறது. ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் இலங்கைக்கு வழங்கப்பட்டிருக்கும் இரண்டு வருட காலம் என்பது நீங்கள் செயலிழந்து போய்க் கிடப்பதற்கான அவகாசம் அல்ல, தெளிவான கால எல்லைகளை வகுத்துக்கொண்டு தெளிவாகச்செயற்படுவதற்கான அவகாசம் என்று தெரிவித்திருக்கிறது மன்னிப்புச் சபை.

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் கடந்த மாதம் நிறைவேற்றப்பட்ட இலங்கை தொடர்பான தீர்மானத்துக்கு எதிராக கொழும்பிலுள்ள சிங்கள அரசியல் தலைவர்கள் அனைவரும் கருத்துத் தெரிவித்துவரும் நிலையில், மன்னிப்புச்சபையின் இந்த அழுத்தம் வந்துள்ளமை கவனிக்கத்தக்கது. பொருத்தமானதும் அவசியமானதுமான நேரத்தில் மன்னிப்புச்சபை தனது அழுத்தத்தைப் பயன்படுத்தியுள்ளது.

செயலாளர்சயில்செட்டி தலைமையிலான மன்னிப்புச்சபையின் உயர்மட்டக்குழுவினர் வடக்குக்கும் நேரில் வந்து நிலமைகளைப் பார்த்தனர். பாதிக்கப்பட்ட மக்களுடன் நேரில் பேசினர். அதன் பின்னர் அவர்கள் கூறிய விடயமும் மிகவும் முக்கியமானது. "மக்கள் பொறுமையிழந்துவிட்டனர்" என்று அவர்கள் கூறியிருக்கின்றனர். போர் முடிவடைந்து 8 ஆண்டுகள் கடந்துவிட்ட போதும் தமது பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்படாமல் இருப்பதால் மக்கள் தமது பொறுமையை இழந்திருப்பது நியாயமானதுதான் என்பதை அவர்களும் ஏற்றுக்கொள்கிறார்கள்.

தெற்கில் தலைவர்கள் என்ன சொன்னாலும் போரின்போது நடந்ததாகக் கூறப்படும் மனித உரிமைகளின் மீறல்கள் குறித்த உண்மைகள் கண்டறியப்பட வேண்டும் என்று அவர் வலியுறுத்தியிருக்கிறார். அப்படி உண்மைகளைக் கண்டறிவதற்கு வெளிநாட்டு நீதிபதிகளின் பங்களிப்புடன் கூடிய கலப்பு நீதிமன்றம் நிறுவப்பட வேண்டியதன் அவசியத்தையும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

இலங்கை அரசின் தலைவரும், தலைமை அமைச்சரும் அத்தகைய கலப்பு நீதிமன்றம் ஒன்றை ஏற்கப்போவதில்லை என்றும், அதனை ஏற்பதற்கு நாட்டின் சட்டத்தில் இடமில்லை என்றும் முறையே தெரிவித்து மனித உரிமைகள் சபையின் பரிந்துரையை நிராகரித்துவிட்டார்கள். அண்மையில் யாழ்ப்பாணம் வந்திருந்த அமைச்சர் ராஜித சேனாரத்தின இன்னும் ஒருபடி மேலே போய் போர்க்குற்றங்களே நடக்கவில்லை; பின்னர் எதற்கு விசாரணை என்று கூறிச் சென்றார்.

இப்படி அரசதலைவர்கள் கலப்பு நீதிமன்றத்தின் ஊடான போர்க்குற்ற விசாரணை ஒன்றை முழுமையாக நிராகரித்துவரும் நிலையிலேயே கலப்பு நீதிமன்றத்தின் ஊடான விசாரணைதான் வேண்டும் என்பதைப் பன்னாட்டு மன்னிப்புச்சபை வலியுறுத்தியிருக்கிறது.

படையினர் ஆக்கிரமித்து வைத்துள்ள மக்களின் காணிகளைத் திரும்ப ஒப்படைப்பது, வடக்கில் படையினரின் எண்ணிக்கையைக் குறைப்பது, காணாமற்போனவர்கள் தொடர்பில் விசாரணை நடத்துவது உள்ளிட்ட விடயங்களிலும் கொழும்புக்கு அழுத்தம் கொடுத்துள்ளது மன்னிப்புச் சபை.

மன்னிப்புச் சபை உலக அரங்கில் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு மனித உரிமைகள் அமைப்பு. அமெரிக்காவைத் தளமாகக் கொண்டு இயங்கினாலும் உலக நாடுகள் அனைத்திலும் நடைபெறும் மனித உரிமைகளின் மீறல்கள் குறித்துக் கவனம் செலுத்தி வருகின்ற ஓர் அமைப்பு. இலங்கையில் மனித உரிமைகளை மேம்படுத்தும் விடயத்தில் தொடர்ச்சியான அக்கறையை வெளிப்படுத்திவருகின்ற அமைப்பும்கூட.

அப்படிப்பட்ட ஓர் அமைப்பு நேரடியாக நிலமைகளை ஆராய்ந்து அறிந்த பின்னர் கொழும்பு அரசுக்கு வழங்கியுள்ள இந்த அழுத்தம் மிகவும் காத்திரமானது. புறக்கணிக்க முடியாததும்கூட.

இலங்கையின் தற்போதைய நிலையைத் தொடர்ந்தும் அழுத்தத்தின்கீழ் வைத்திருக்கும் நோக்கில் "நீதி மட்டுமே எமது காயங்களை ஆற்றுப்படுத்தும்" என்கிற பரப்புரை ஒன்றையும் மன்னிப்புச் சபை ஆரம்பித்திருக்கிறது.

ஐ.நா. மனித உரிமைகள் சபை போன்ற உயர் இடங்களில் வாக்குறுதிகளை வழங்கிவிட்டு காலத்தைக் கடத்திச் சென்றே தாம் நினைத்ததைச் சாதித்துவிடலாம் என்று நினைக்கக்கூடிய தெற்கு அரசியல்வாதிகளுக்கு உறுதியாகச் சொல்லப்பட்டிருக்கக்கூடிய செய்தியாக மன்னிப்புச்சபையின் அழுத்தத்தை எடுத்துக்கொள்ளலாம்.

எனவே கொழும்பு, இனியும் ஏமாற்று நாடகத்தை அரங்கேற்றாமல் விரைந்து அடுத்துவரும் இரண்டு ஆண்டுகளில் உருப்படியான நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும். இல்லையேல் உலகநாடுகளிடம் இருந்தும், மனித உரிமைகள் அமைப்புகளிடம் இருந்தும் கடுமையான அழுத்தத்தை எதிர்கொள்ளவேண்டியிருக்கும்.

மகிந்த ராஜபக்ச ஆட்சிக்காலத்தில் பாதாளத்தில் வீழ்ந்து கிடந்த இலங்கையின் மதிப்பை நாம்தான் தூக்கி நிறுத்தினோம் என்று மார்தட்டிக்கொள்ளும் இந்த அரசு அதனைப் பாதுகாக்கவேண்டுமாயின் தீர்மானத்தை நிறைவேற்றித்தானாகவேண்டும்.

# தளர்வு நிலை கண்டுவரும் தமிழர்களது நம்பிக்கை



மு.ஈழத்தமிழ்மணி

> போர் முடிவுக்கு வந்த பின்னரும், தமிழ் மக்களின் பிரச்சினைகளில் குறிப்பிட்டுக் கூறத் தக்க எதுவொன்றும் மகிந்த ராஜபக்ச அரசின் காலத்தில் தீர்க்கப் படவேயில்லை. ஆனால் அவற்றில் குறிப் பிடத்தக்க ஒரு சில பிரச்சினைகளைக் கூட நல்லாட்சி அரசு நிறைவேற்றி வைக்காததே தமிழ் மக்கள் நல்லாட்சி அரசு மீது இன்று நம்பிக்கை யிழந்து வரும் நிலை மைக்கு காரணம்.

நாட்டில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டுத் தற்போது 27 மாதங்கள் கடந்துள்ளன. தமிழ் பேசும் மக்களின் ஆதரவால் அரச தலைவர் தேர்தலில் வெற்றி பெற்ற மைத்திரிபால சிறிசேனவின் தலைமையிலான அரசு மீது தமிழ் மக்கள் ஆரம்பத்தில் வைத்திருந்த நம்பிக்கை தற்போது படிப்படியாகத் தளர்ந்து வருகின்றது. புதிய ஆட்சி மாற்றத்தால் மக்களுக்கு பெரிதாகச் சொல்லிக் கொள்ளத் தக்க நன்மைகள் எதுவுமே கிடைக்கவில்லை.

வடக்கு, கிழக்கு மாகாணத்தில் வாழுகின்ற தமிழ் மக்கள் மத்தியில் நல்லாட்சி அரசின் செயற்பாடுகள் குறித்து சந்தேகம் வலுத்து வருகின்றது. தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கான தீர்வு தொடர்பாகப் போர் முடிவுக்கு வந்த பின்னர் மகிந்த அரசு நடந்து கொண்டதுபோல், மைத்திரி அரசும் காலத்தை இழுத்தடிப்பதிலேயே கவனம் செலுத்தி வருகின்றது.

### சிதைவடைந்து செல்லும் அரசு மீதான தமிழர்களது நம்பிக்கை

இன்றைய அரசின் நிர்வாகம், சிறிலங்கா சுதந்திரக் கட்சி, ஐக்கிய தேசியக் கட்சியுடன் கூட்டுச் சேர்ந்து நல்லாட்சி என்ற பெயரில் முன்னெடுக்கப்பட்டு வந்தாலும், ஈழத்தமிழர்களின் எதிர்காலம் இந்த நல்லாட்சி அரசின் நிர்வாகத்திலேயே தங்கியிருக்கின்றது என்ற நம்பிக்கையில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பும் இன்றைய அரசுக்கு தனது முழு ஆதரவையும் வழங்கி வருகின்றது. ஈழத்தமிழர்களின் முன்னாலுள்ள பிரதான சவால்கள் எவை? தமிழ் மக்கள் மீதான சவால்களை எதிர் கொள்வதற்கான வழி முறைகளில் கடைப்பிடிக்கப் பட வேண்டியவை எவை? என்பவை குறித்து மைத்திரி - ரணில் நல்லாட்சி அரசின் தலைவர்கள் கடும் சவால்களுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலை உருவாகியுள்ளது.

நல்லாட்சி அரசின் இந்த 27 மாதகால நிர்வாகத்தில் நாட்டின் முக்கிய ஐந்து பிரச்சினைகளில் ஏதாவது ஒன்றுக்காவது தீர்வு காணப்பட்டுள்ளதா என ஆராய்ந்தால், அதற்குச் சாதகமான பதில் எதுவும் இன்றுவரையில் இல்லை என்றே கூற வேண்டும்.

ஈழத்தமிழ் மக்களின் ஆதாரப் பிரச்சினைகள், அவசிய பிரச்சினைகள், அடிப்படைப்பிரச்சினைகள் என்பவற்றுடன் உரிமைப்பிரச்சினை, மற்றும் தமிழ் மக்களின் தொடர்போராட்டப் பிரச்சினைகளும் வருட ஆரம்பத்திலிருந்து நல்லாட்சி அரசுக்கு மேலும் மேலும் சவாலாகவே அமைந்து வருகின்றன. இவ்வளவு பிரச்சினைகளையும் தீர்ப்பதற்கு நல்லாட்சி அரசுக்கு தனது ஆறு ஆண்டுகள் கால அவகாசம் போதாது என்றே கூற வேண்டும்.

2020ஆம் ஆண்டுக்கு முன்னராவது இந்த நாட்டுத் தமிழர்களின் பிரச்சினை தீர்க்கப்பட்டுள்ளதாக வரலாற்றுப் பதிவு இடம்பெறுமா? என்பதும் சந்தேகத்துக்கு உரியதே.

போர் முடிவுக்கு வந்த பின்னரும், தமிழ் மக்களின் பிரச்சினைகளில் குறிப்பிட்டுக்கூறத்தக்க எதுவும் மகிந்த ராஜபக்ச அரசின் காலத்தில் தீர்க்கப்படவேயில்லை.

ஆனால் அவற்றில் குறிப்பிடத்தக்க ஒரு சில பிரச்சினைகளைக் கூட நல்லாட்சி அரசு நிறைவேற்றி வைக்

காததே தமிழ் மக்கள் நல்லாட்சி அரசு மீது இன்று நம்பிக்கையிழந்து வரும் நிலைமைக்கு காரணம்.

**எந்தவொரு பிரச்சினைக்கும் முழுமையான தீர்வு கிட்டவில்லை**

முன்னைய மகிந்த ஆட்சிக் காலத்தில் இடம் பெற்றமை போன்றே, தற்போதைய ஆட்சியிலும் காணிச் சுவீகரிப்பு, சிங்களக் குடியேற்றங்கள், விகாரைகள் மற்றும் புத்தர் சிலைகள் நிறுவுதல் போன்ற நியாயமற்ற செயற்பாடுகள் தொடர்ந்தும் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன. மகிந்த ஆட்சியிலும் பல ஆணைக்குழுக்கள் நியமிக்கப்பட்டு விசாரணைகள் நடைபெற்று அவற்றின் அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்ட போதிலும், மேற்கொண்டு எந்தவிதமான நகர்வுகளும் இடம்பெறவில்லை. தமிழர்களுக்கு ஏமாற்றமே மிஞ்சியது. அதேபோன்ற நிலை இந்த அரசிலும் தமிழ் மக்களுக்கு ஏற்படலாம் என்ற சந்தேகம் தலைதூக்கியிருக்கின்றது.

அரச தலைவர் மைத்திரி இன்றைய அரசியல் சூழலில் பல நெருக்கடிகளுக்கு முகம் கொடுக்க வேண்டியவராக ஆகியுள்ளார். தம்மைப் பரம எதிரியாகக் கருதும் முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவைச் சுதந்திரக் கட்சியிலிருந்தோ, தென்னிலங்கை அரசியலிருந்தோ ஓரங்கட்ட முடியாதவராகவே மைத்திரிபால உள்ளார்.

தன்னால் தோற்கடிக்கப்பட்ட தலைவரொருவரை மீண்டும் நாடாளுமன்றத்துக்கு வர வழி வகுத்துக் கொடுத்து குருநாகல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினராக ஆவதற்கு வாய்ப்பளித்த மைத்திரிபாலவுக்கு எதிராக இன்று மகிந்த ராஜபக்சவின் கை ஓங்கி வருகிறது.

மகிந்த ஆட்சியில் இடம்பெற்ற ஊழல்கள், நிதி மோசடிகள் மறைமுகமாக இடம்பெற்ற பல அரசியல்படுகொலைகள், கடத்தல்கள் என்பவை தொடர்பாக மைத்திரி ஆட்சியில் பல உண்மைகள் வெளிக் கொண்டு வரப்பட்டாலும், மகிந்தவின் சகோதரர்கள், மகிந்தவின் மனைவி,அவரது மகன்மார் மீது அரசு மேற்கொண்டு வருகின்ற விசாரணைகளுக்கு மத்தியில் மகிந்த இன்னமும்ஒருசெயற்றிறன்மிக்க தலைவராகவே சிங்களப் பெரும்பான்மை இனத்தவர்களது கணிப்பில் இருந்து வருகிறார்.



மகிந்தவின் இனவாத அரசியல் கருத்து வெளிப்பாடுகளையும், செயற்பாடுகளையும் மைத்திரி அரசால் தடுக்க முடியாதுள்ளது.

முன்னாள் அரச தலைவர் என்ற அந்தஸ்தைக் காட்டிலும், இன்று நாடாளுமன்ற உறுப்பினராக இருப்பதனால், தானும் நாட்டின் ஒரு தலைவரே என்ற எண்ணத்தினூடாகவே அவரது அரசியல் பயணம் தொடர்ந்தவண்ணமுள்ளது.

இன்றைய அரசால் தோற்கடிக்க முடியாத அதீத சக்தி கொண்டவராகவே மகிந்த விளங்கி வருகின்றார். அத்தோடு மைத்திரி அரசின் பலம், பலவீனம் என்பவற்றையும் அவர் நன்கு புரிந்து வைத்துள்ளார்.

இனப்பிரச்சினைத் தீர்வு குறித்த மைத்திரி அரசின் முயற்சிக்கு மகிந்த தரப்பினர் பெரும் முட்டுக் கட்டையாகவே இருந்து வருவார்கள். இனப்பிரச்சினைக்கான தீர்வு மிக நெருக்கடி நிலையிலேயே உள்ளது.

ரணில் - மைத்திரி கூட்டு அரசுக்கு இன்று பல வகையான எதிர் நிலை அம்சங்களே சவால்களாகத் தொடர்ந்தும் இருக்கப்போகின்றன. 65 ஆண்டுகளாக ஈழத்தமிழர்களின் பிரச்சினைகளைத் தீர்க்காமல் ஏமாற்றி வந்த சிங்கள ஆட்சியாளர்கள் வரிசையில் மைத்திரி - ரணில் கூட்டாட்சியில் தமிழர்களை ஏமாற்றும் படலம் தொடர்வதற்கான அறிகுறிகள் ஆரம்பமாகிவிட்டன.

**பன்னாட்டு நீதிபதிகளது பங்களிப்பை ஏற்க மறுப்பு**

வருட ஆரம்பத்தில் சுகாதார அமைச்சரும், அமைச்சரவைப் பேச்சாளருமான ராஜித சேனாரத்தின போரின் போது பாதிக்கப்புட்ட மக்களுக்கான நீதி வழங்கும் பொறிமுறையில் எந்தக் காரணம் கொண்டும் பன்னாட்டு நீதிபதிகளை அரசு ஏற்றுக்கொள்ளும் சாத்தியமில்லை எனக் கூறியிருந்தார். நாங்கள் நியமித்த செயலணியின் சகல பரிந்துரைகளையும் ஏற்றுக் கொள்ள வேண்டியது அவசியம் என்றில்லை. பன்னாட்டு நீதிபதிகளை ஏற்றுக் கொள்ளப்போவதில்லை. என்பதை ஐ.நாவிடம் தெளிவுபடுத்தி விட்டோம் என்று கூறியிருந்தார் அரசதலைவர்.

காணாமல் போனவர்கள் தொடர்பான விடயத்தில் மைத்திரி அரசு, அவர்களின் உறவினர்களுக்கு எந்த விதமான பதிலையும் வழங்காது ஏமாற்றி வருகின்றது.

படையினரால் கையகப்படுத்தப்பட்ட தமிழ் மக்களின் நிலங்கள் முழுமையாக மீளளிக்கப்படாமை, பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்குவதாகக் கூறிவிட்டு, அதன் கீழ் கைதுகள் இன்றும் தொடர்ந்து வருகின்றமை தமிழ் மக்கள் மத்தியில் பெரும் கவலையையும் தாக்கத்தையும் உருவாக்கி வருகின்றன.

நாட்டில் இன்று இடம்பெறுவது நல்லாட்சிதானா? என்ற கேள்விக்கு மத்தியில் தமிழ் மக்கள் இன்னமும் தீர்க்கப்படாத பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். மீள் குடியேற்றம், காணாமல் போனோர் விடயங்களில் மைத்திரி தலைமையிலான நல்லாட்சி அரசு தமிழ் மக்கள் மீது கடும் இறுக்கமான நிலைப்பாட்டைப் பேணி வருவதாகத் தெரிகின்றது.

இந்த இரண்டு விடயங்கள் தொடர்பாக இராணுவத்தினரின் பிரசன்னம், அச்சுறுத்தல்கள் என்பவற்றுக்கு மத்தியில் தமிழ் மக்கள் தொடர்போராட்டங்களை நடத்தி வருகின்றனர்.


**மகிந்த அரசின் போக்கிலேயே மைத்திரி அரசும்**

தமிழ் மக்கள் நடத்துகின்ற போராட்டங்களுக்கு தடைவிதிப்பதிலும், காணொளிப் பதிவு செய்வதிலும் ஆர்வம் காட்டும் இராணுவத்தினரின் தற்போதைய நடவடிக்கைகள் மகிந்த ஆட்சிக் காலத்தை ஒத்ததாகவே இருக்கின்றன.

கேப்பாப்பிலவு மக்கள் நில மீட்புப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்ற நிலையில், அவர்களின் போராட்டத்தை நசுக்குவதற்காக படையினர் நீதிமன்றம் சென்றனர். ஆனால் நீதிமன்றமோ போராட்டத்துக்கான தடையை விதிக்க முடியாதெனவும், சாத்வீக வழியில் போராடுவது அவர்களின் உரிமையாகும் எனத் தீர்ப்பளித்துள்ளது.

படையினரின் அச்சுறுத்தல்கள், நெருக்குதல்கள் தமிழ் மக்களை படிப்படியாக நிம்மதியிழக்கச் செய்கின்றன. மைத்திரியின் நல்லாட்சியிலும் இராணுவத்தினரின் செயற்பாடுகள் யாவும் தமிழ் மக்கள் மீது திணிக்கப்பட்டு வருவது, படையினரின் பிரசன்னத்தைத் தமிழ்ப்பிரதேசங்களில் தொடர்ந்தும் நிலை நிறுத்துவதற்காகும் என்றே எண்ணத் தோன்றுகின்றது. அந்த வகையில் மகிந்தவின் பாதையில்தான் மைத்திரியும் பயணிக்கின்றாரா என எண்ண வேண்டியுள்ளது.

அரச தலைவர் மைத்திரி இன்றைய அரசியல் சூழலில் பல நெருக்கடிகளுக்கு முகம் கொடுக்க வேண்டியவராக ஆகியுள்ளார். தம்மைப் பரம எதிரியாகக் கருதும் முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவைச் சுதந்திரக் கட்சியிலிருந்தோ, தென்னிலங்கை அரசியலிருந்தோ ஓரங்கட்ட முடியாதவராகவே மைத்திரிபால உள்ளார். தன்னால் தோற்கடிக்கப்பட்ட தலைவரொருவரை மீண்டும் நாடாளுமன்றத்துக்கு வர வழி வகுத்துக் கொடுத்து குருநாகல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினராக ஆவதற்கு வாய்ப்பளித்த மைத்திரிபாலவுக்கு எதிராக இன்று மகிந்த ராஜபக்சவின் கை ஓங்கி வருகிறது.



## வாசகர் திருமுகம்

### விசுவாசமான அரச பணிக்கு மதிப்பும் மரியாதையும் நிச்சயம் கிட்டும்

பெரும்பாலான அரசியல்வாதிகளும், உயர் பதவிகளை வகிக்கும் அரச அதிகாரிகளும் தமது பதவிகளைத் தமக்குக் கிட்டும் அரிய வாய்ப்பாகக் கருதி, காற்றுள்ளபோதே தூற்றிக் கொள்ளும் முனைப்பில் அரச வளங்களையும், நிதியையும் ஏதோ விதத்தில் சுத்துமாத்துச் செய்து முறையற்ற விதத்தில் ஈட்டிக் கொள்வதுடன், சட்டத்தின் பிடியில் அகப்படாது சமயோசிதமாகத் தப்பித்துக் கொள்வதும் இன்றைய காலகட்டத்தில் ஒரு வழக்கமாக ஆகிவிட்டுள்ளது.

இவர்களில் ஒரு தரப்பினர் மனச்சாட்சிக்கு விரோதமில்லாது நாட்டு மக்களுக்கு நன்மை பயக்கும் விதத்தில் சேவை ஆற்றுவதையும் மறுத்துரைக்க இயலாது. தமக்குக் கிட்டிய வாய்ப்பைப் பயன்படுத்திச் சலுகைகளையோ நிதி வருமானங்களையோ ஈட்டிக் கொள்ளத் தவறும் தரப்பினர் ஏமாளிகள் என அடையாளப்படுத்தப்படுவதும் உண்டு.

அரச துறையில் ஊழலும் லஞ்சமும் மலிந்து போய்விட்டுள்ள இன்றைய நிலையில், மாத்தளை மாவட்டச் செயலராக அரச உயர் பதவி வகித்த பிரமுகர், சேவையிலிருந்து தாம் ஓய்வு பெற்ற தினத்தன்று தமது உத்தியோகபூர்வ ஆவணங்கள் உட்படத் தாம் பயன்படுத்தி வந்த உத்தியோகபூர்வ வாகனத்தையும் உரிய அதிகாரிகளிடம் கையளித்துவிட்டு அரச பொதுப் பேருந்து மூலம் தமது வீட்டுக்குத் திரும்பிச் சென்றதாக பத்திரிகைச் செய்தியொன்று வெளியாகியிருந்தது.

சுய இலாபம், சுய கௌரவம் தேடிக் கொள்ளும் நோக்கில் தமக்கு வாய்க்கும் பொதுப் பணிபுரியும் வாய்ப்பைப் பயன்படுத்த முயலும் இன்றைய பெரும்பாலான அரச துறைப் பிரமுகர்கள் மத்தியில், முகம் தெரியாத அந்த அதிகாரியின் விசுவாசமான பணி தொடர்பாக மனதில் ஒரு மூலையில் மதிப்பும் கௌரவமும் ஏற்படுவதைத் தவிர்க்க இயலாதுள்ளது.

*வி.காங்கேயன்.*
*கொக்குவில்.*

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT



# அழகாக மாற நாகினி நடிகை செய்த வேலை

தற்போது தொலைக்காட்சி நாடகங்களில் மிகவும் பிரபல மடைந்து விட்டன. நடிகர், நடிகைகள் நாடகங்களில் நடித்து சினிமாவுக்கு வரும் சூழலும் நிலவுகிறது.

தற்போது தொலைக்காட்சியில் ஒளிபரப்பாகிவரும் நாகினி தொடரில் நடித்துவரும் மௌனி ராய்க்கு ரசிகர்கள் பலர் உள்ளனர். நாகினி முதல் பாகம் முடிந்து தற்போது இரண்டாவது பாகம் ஒளி பரப்பாகி வருகிறது. இதில் மௌனிராய் இரண்டு வேடங்களில் நடிக்கிறார். பிரபலமடைந்துள்ள இந்த நடிகை பொலிவூட் நடிகைகளைப் போன்று அறுவை சிகிச்சை செய்து கொண்டார் எனத் தகவல் வெளியாகியுள்ளது. தான் இன்னும் அழகாகத் தெரியவேண்டும் என்பதற்காக மௌனி ராய் உதடு அறுவை சிகிச்சை செய்துள்ளார். இது குறித்து செய்தியாளர்கள் மௌனி ராயிடம் கேட்டதற்குப் பத்திரிகையாளர் சந்திப்பில் இருந்து கோபமாக வெளியேறி விட்டாராம்.

``500 ரூபாவுக்குச் சில்லறை கேட்டா, சில்லறை இல்லை, ஹார்லிக்ஸ் போத்தல் தரவா? னு கேக்குறாய்ங்க...''




``அடேய்... ஒரு ரூபா சில்லறை இல்லனு சொக்லேட் கொடுத்தப்பவே உங்களை கண்டிச்சிருக்கனும்டா...''

``சைக்கிள் வேணும்னு பையன் கேட்டான்...!''
``நீ சைக்கிள் உயரமே இல்லை எப்பிடிடா ஓட்டுவே என்றேன்...!''



``பையன் சொல்றான், பேருந்து ஓட்டுறவர் பேருந்து உயரமா இருக்காரு...?''

``ஏண்ணே என்னைச் சுடுகாட்டுக்கு கூட்டிட்டு வந்தீங்க?''



``நீதானே அடக்கமான பொண்ணு வேணும்ன்னு கேட்ட....''




## இன்றைய ராசி உங்களுக்கு எப்படி

தருபவர்: வித்யா



**மேடம்:** அடுத்தவர் விடயத்தில் தலையிட வேண்டாம். தொழில், வியாபாரத்தில் மந்த நிலை உருவாகும். லாபம்சுமாராகஇருக்கும். பணியாளர்கள் பணிச்சுமைக்கு ஆளாவர். பிள்ளைகளின் நலனில் அக்கறை கொள்வர்.

**இடபம்:** குடும்பத்தினரின் அன்பும், ஆதரவும் கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் நல்ல வளர்ச்சி உண்டாகும். வருமானம் அதிகரிக்கும். மனைவியின் தேவையறிந்து நிறைவேற்றுவீர்கள்.

**மிதுனம்:** எதிர்கால வளர்ச்சி குறித்துத் திட்டமிடுவீர்கள். தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்தலாபம் கிடைக்கும். பணியாளர்கள், சக ஊழியர்களின் ஆதரவு கிடைக்கப் பெறுவர். தாய் வீட்டினரின் உதவி கிடைக்கும்.

**கடகம்:** முக்கிய பணி நிறைவேற விடா முயற்சி தேவைப்படும். தொழில், வியாபாரத்தில் ஆதாயம் சுமாராக இருக்கும். பணியாளர்கள் நிர்வாகத்தினரின் எதிர்ப்பைச் சந்திப்பர்.

**சிங்கம்:** புதிய முயற்சியில் ஈடுபட்டு வெற்றி காண்பீர்கள். நண்பரிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும். பணியாளர்கள், பணி விடயமாக வெளியூர் செல்வர்.

**கன்னி:** இனிமையாகப் பேசி அனைவரையும் கவர்வீர்கள். தொழில், வியாபாரத்தில் அபரிமிதமான வளர்ச்சி ஏற்படும். சேமிக்கும் விதத்தில் லாபம் கிடைக்கும். பணியாளர்களுக்கு விரும்பிய சலுகை கிடைக்கும்.

**துலாம்:** பேச்சு, செயலில் உற்சாகம் நிறைந்திருக்கும். தொழில், வியாபாரத்தில் வருமானம் திருப்தியளிக்கும். பணியாளர்கள் எதிர்பார்த்த இடமாற்றம் கிடைக்கப் பெறுவர். பெண்கள் ஆடை, ஆபரணம் வாங்குவர்.

**விருச்சிகம்:** திட்டமிட்ட செயல் நிறைவேறுவதில் தாமதம் உண்டாகும். தொழில், வியாபாரத்தில் சுமாரான லாபம் கிடைக்கும். பணியாளர்கள், சக ஊழியர்களால் பணிச்சுமையைச் சந்திப்பர்.

**தனுசு:** நண்பர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் லாபம் சுமாராக இருக்கும். பணியாளர்கள் பணிச் சுமையைத்திறம்படச்சமாளிப்பர். உறவினர் வருகையால், வீட்டுச் செலவு அதிகரிக்கும்.

**மகரம்:** நற்செயலில் ஈடுபட்டு புகழ் பெறுவீர்கள். தொழில், வியாபாரத்தில் வருமானம் திருப்தியளிக்கும். பணியாளர்கள் பணியிடத்தில் செல்வாக்குடன் திகழ்வர். பெண்கள், வீட்டு உபயோகப் பொருள் வாங்குவர்.

**கும்பம்:** சமூகத்தில் அந்தஸ்து மிக்கவராக திகழ்வீர்கள். தொழில், வியாபாரத்தில் வியத்தகு வளர்ச்சி உண்டாகும். சேமிக்கும் விதத்தில் லாபம் வரும். பெண்கள், குடும்பத்தினருடன் விருந்து, விழாவில் பங்கேற்பர்.

**மீனம்:** பேச்சில் நிதானம் தேவை. தொழில், வியாபாரத்தில் லாபம் சுமாராக இருக்கும். பணியாளர்கள், சக ஊழியர்களால் பணிச் சுமையைச் சந்திப்பர். பெண்கள், பிள்ளைகளால் சிரமத்துக்கு ஆளாகலாம்.



### தேவதை

கற்றுக் கொடுப்பது யாராக இருந்தாலும், கற்றுக் கொள்ளுங்கள். தெரியாத ஒன்றைத் தெரிந்து கொள்வதில் தவறொன்றும் இல்லை.

## சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | | 4 | | 5 | 7 | | | |
| | | | 8 | | | | 4 | |
| | | | 1 | | 4 | | 7 | 8 |
| 9 | | | 6 | | | | 5 | |
| 4 | | 5 | | | | 6 | | 3 |
| | 8 | | | | 5 | | | 9 |
| 5 | 2 | | 4 | | 1 | | | |
| | 4 | | 5 | | 8 | | | |
| | | | 3 | 9 | | | | |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண் களை ஒழுங்கு படுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்ப வற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவை கள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ் வாறு நிரப்பப்படு கையில் உள்பெட்டி களுக்குள்ளும் அவ் வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனைய வற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமா கப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 4 | 1 | 3 | 8 | 5 | 2 | 7 | 9 |
| 9 | 5 | 2 | 1 | 7 | 6 | 4 | 3 | 8 |
| 7 | 3 | 8 | 2 | 9 | 4 | 5 | 6 | 1 |
| 1 | 2 | 6 | 4 | 5 | 7 | 9 | 8 | 3 |
| 8 | 7 | 5 | 9 | 2 | 3 | 1 | 4 | 6 |
| 3 | 9 | 4 | 8 | 6 | 1 | 7 | 2 | 5 |
| 4 | 1 | 7 | 6 | 3 | 9 | 8 | 5 | 2 |
| 5 | 8 | 3 | 7 | 1 | 2 | 6 | 9 | 4 |
| 2 | 6 | 9 | 5 | 4 | 8 | 3 | 1 | 7 |




ராசிகளுக்கான

# சித்திரைப் புத்தாண்டுப் பலன்கள்

## இடபம்

கண்டகச்சனியின் காலம் தொடர்ந்து கொண்டிருந்தாலும் பிறக்கப்போகும் புத்தாண்டு முழுவதும் உங்களது செயல்களில் சனியினால் தடையேதும் உண்டாகாது என்பதால் அதை நினைத்துக் கவலை கொள்ளத்தேவையில்லை. எடுத்த வேலைகளில் செயற்றிறன் அதிகரிக்கும். முழு முயற்சியுடன் செயல்களை முடித்து வெற்றியும் நிம்மதியும் காண்பீர்கள். முக்கியமாக தொழில்முறையில் சிறப்பான முன்னேற்றம் கிடைக்கும். நண்பர் ஒருவரோடு இணைந்து செய்யும் காரியங்கள் உங்களுடைய புகழை உயர்த்துவதோடு சிறப்பான இலாபமும் பெற்றுத் தரும். ஆனால் ஓய்வில்லாமல் கூடுதலாக உழைக்க வேண்டியிருக்கும்.

சொந்தபந்தங்களுடனான உறவில் உள்ள விரிசலைக் களைய முற்படுவீர்கள். நிலுவையில் உள்ள உறவினர் வழிப் பிரச்சினைகள் சுமுக முடிவுக்கு வரும். உடன்பிறந்த சகோதரர்களுக்கு இடையே புதிய பிரச்சினைகள் துளிர்விடும் என்பதால் மிகவும் பொறுமையுடனும், பொறுப்புடனும் செயற்படுவது கட்டாயமுமாகும். குடும்பத்தில் சுபகாரியங்கள் நடப்பதற்கான வாய்ப்புக்கள் உள்ளன. கொடுக்கல் வாங்கலை முற்றிலும் தவிர்க்கவும். அடுத்தவர்களுக்கு உதவி செய்யும்போது எச்சரிக்கையாக இருங்கள். உங்களின் முக்கிய நபர் ஒருவர் நம்பிக்கைத் துரோகம் செய்யக்கூடும். வாகனங்களை மாற்றவும், புதியவற்றை வாங்கவும் நேரம் கனிந்து வரும். வாழ்க்கைத் துணையின் உடல் மற்றும் மனநிலையில் கூடுதல் கவனம் அவசியம்.

குடும்பத்தில் அமைதி மற்றும் மகிழ்ச்சிக்காகவும், தேவையில்லாத விவாதங்களைத் தவிர்க்கவும். தம்பதியருக்குள் விட்டுக்கொடுத்துச் செல்வது அவசியம். முன்பின் தெரியாதவர்களிடம் அதிக எச்சரிக்கை தேவை. நண்பர்களோடு விவாதத்தைத் தவிர்க்கவும். மருத்துவச் செலவுகள் ஏற்படும். உடல்நிலையில் தோன்றும் சிறுபிரச்சினைகளையும் அலட்சியப்படுத்தாது உடனுக்குடன் மருத்துவரின் ஆலோசனை பெறுவது அவசியம். முன்னோர்களுக்குச் செய்ய வேண்டிய கிரியாதிகளைக் கட்டாயம் செய்வது அவசியம். அரசு அதிகாரிகள், பொலிஸார், நீதித்துறையினர் ஆகியோரின் துணையுடன் பொதுக்காரியங்களில் வெற்றி காண்பீர்கள்.

மாணவர்களின் கல்வி மேம்பட சனி பகவான் துணையிருப்பார். பெண்கள் தெய்வ நம்பிக்கையோடு குடும்பப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பீர்கள். அக்கம்பக்கத்தினரிடம் எச்சரிக்கை அவசியம். பிள்ளைகளின் முன்னேற்றத்தில் உங்கள் பங்களிப்பு முக்கியத்துவம் பெறும்.

தொழில் சிறப்பான முன்னேற்றம் பெறும். கூட்டுத்தொழில், இயந்திரங்கள் சார்ந்த தொழிலில் இலாபம் உண்டு. வருடத்தின் முற்பகுதியில் சுபசெலவுகளுக்கான வாய்ப்பு உண்டு. எதிலும் புன்னகையுடன் கூடிய செயற்பாடு கட்டாயம் வெற்றி தரும். பொதுவாக உழைப்பினால் உயர்வு காண வேண்டிய ஆண்டாக அமையும்.

**பரிகாரம்:**

மாதந்தோறும் கிருத்திகை விரதம் இருப்பதும், கிருத்திகை நட்சத்திர நாளில் சுதர்ஸனர் சந்நிதியில் விளக்கேற்றி வழிபடுவதும் நன்மை தரும்.






பெண்கள் மருதாணி போடுவது வழக்கம். மருதாணி போல் ராற்றோ ஸ்ரிக்கர்கள் சந்தைக்கு வந்துள்ளன. அவற்றில் புது வடிவங்களில் தற்போது ராற்றோக்கள் சந்தைக்கு வந்துள்ளன. இவை 395 ரூபாவில் இருந்து விற்பனை செய்யப்படுகின்றன.

# அடிவயிற்றில் உள்ள உறுப்புகளுக்கு சக்தி தரும் உஜாஸ் முத்திரை


உஜாஸ் என்றால் விடியல் அல்லது புதிய தொடக்கம் என்று அர்த்தம். பூமியின் ஒவ்வொரு நாளும் புதிதாய் விடிவது போல, உஜாஸ் முத்திரையும் நம்மைப் புதிதாக மலரச் செய்கிறது. ஒரு புதிய தொடக்கத்தைக் கொடுக்கிறது, உற்சாமான மனநிலையைப் பெருக்குகிறது என்பதால், இந்த முத்திரைக்கு 'உஜாஸ் முத்திரை' என்று பெயர்.

**செய்முறை**

விரிப்பில் சப்பணம் இட்டு அமர்ந்த வாறோ, கால்களைத் தரையில் நன்கு பதித்தபடி நாற்காலியில் அமர்ந்தோ செய்யலாம். கைகள் உடலைத் தொடக் கூடாது. தொப்புளுக்குக் கீழே அடிவயிற்றுப் பகுதியில் வைத்து, இரு கை விரல்களையும் கோர்த்துக் கொள்ள வேண்டும். தினமும் காலை, மாலை இரு வேளையும் 15 தொடக்கம் 20 நிமிடங்கள் வரை செய்யலாம்.

பலன்கள்

* அடிவயிறு மற்றும் பிறப்பு உறுப்புகளுக்குச் சக்தி அளிக்கிறது. அடிவயிற்றில் உள்ள அனைத்து உறுப்புகளும் வலுப்பெறும்.
* கர்ப்பப்பை, சினைப்பை, முட்டை ஆகியவற்றின் வளர்ச்சிக்கும் ஆரோக்கியத்துக்கும் உதவும்.
* ஆண்களின் வீரிய விருத்திக்கு உதவி செய்வதுடன், விந்தணுக்கள் உற்பத்திக்கும் உதவுகிறது.
* ஹோர்மோன் குறைபாடுகளைச் சரிசெய்யும்.



## வரலாற்றில் இன்றைய தினம்

### 07.04.2017

1946 -பிரான்சிடமிருந்து சிரியா சுதந்திர மடைந்தமை உத்தியோகபூர்வமாக அங்கீகரிக்கப்பட்டது.
1955 -ஐக்கியராஜ்யத்தின் பிரதமர் பதவியிலிருந்து வின்ஸ்டன் சேர்ச்சில் விலகினார்.
1964 -சிஸ்டம் 360 கணினியை IBM வெளியிட்டது.
1971 -வியட்னாமில் இருந்து விலக்கப்படும் அமெரிக்க படைவீரர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க தீர்மானித்துள்ளதாக அமெரிக்க அரசதலைவர் றிச்சட் நிக்ஸன் அறிவித்தார்.
1978 -நியூட்ரன் குண்டு மேம்பாடு அமெரிக்க அரச தலைவர் ஜிம்மி காட்டரால் இல்லாமல் செய்யப்பட்டது.
1980 -ஈரானுடனான உறவை அமெரிக்கா துண்டித்தது.
1989 -சோவியத் நீர்மூழ்கிக் கப்பல் நோர்வேக்கு அப்பால் கடலில் மூழ்கியதில் 42 மாலுமிகள் உயிரிழந்தனர்.
1990 -பயணிகள் படகு ஸ்கன் டினேபியன் ஸ்டாரில் தீப்பிடித்ததில் 159 பேர் உயிரிழந்தனர்
1994 -ருவாண்டா கிகலியில் டுட்டிஸினரால் இனப்படுகொலை தொடங்கப்பட்டது
1993 -திருமலை பருத்தித்துறை பயணிகள் கப்பல் சேவைதொடங்க மறுவாழ்வு அமைச்சு முயற்சி 1993 -நீதி மன்றத் தீர்ப்பையடுத்து பல்கலைக்கழக அனுமதியில் சிக்கல் தீர்க்க ஆணைக்குழு முயற்சி
1997 -அரசு, ஐ.தே.க உடன்பட்டால் மட்டும் தீர்வு வந்துவிடாதென அரசியல் ஆய்வாளர்கள் தெரிவிப்பு
1997 -அரசு ஐ.தே.க உடன்பாட்டை பௌத்த காங்கிரஸ் வரவேற்று அறிக்கை.

**நாளை**

**பங்குனி-26**
சனிக்கிழமை -08.04.2017
திதி: துவாதசி மு.ப.10.28
நட்சத்திரம்: பூரம் பி.இ.01.30
சுபநேரம்:03.07-04.37 வரை
ராகுகாலம்:09.07-10.37 வரை
சனிப்பிரதோஷ விரதம்

# 91 ஆவது பிறந்தநாள் வாழ்த்து









## திருமதி யோகராணி நடராசா

(தாமோதரம்பிள்ளை செல்லம்மா தம்பதியரின் அன்பு மகளும் நடராஜா வைத்திலிங்கத்தின் அன்பு மனைவியும் வைத்திலிங்கம் தங்கமுத்து தம்பதியரின் அன்பு மருமகளும்)

நூறாண்டு காலம் வாழ்க
நோய்நொடியில்லாமல் வளர்க
அன்னையும்பிதாவும் முன்னறி தெய்வம்
என்ற ஔவை வாக்குக்கமைய
எமக்கு அமைந்த தெய்வங்களை
வாழ்த்தி வணங்குகின்றோம்.



## வாழ்த்துவோர்,

**பிள்ளைகள் :-** சச்சிதானந்தம், திருஞானசோதி, சுசீலாதேவி, சிவசோதி, அமரர் ஞானபண்டிதன், ஜெயராசா, வரதராஜா, அமரர் மங்கையற்கரசி, குகதாசன், சிவதாசன், வசந்தி(கனடா), நிறஞ்சனிதேவி (ஆஸ்திரேலியா).

**மருமக்கள் :-** ந. கமலாம்பிகை(UK), தி. தனலட்சுமி(UK), செ. செல்வரட்ணம்(UK), S.வக்சலா (UK), பு.நந்தினி(UK), J. தயா(UK), V.மதி(UK), அமரர் றாஜசிங்கம்(UK), K. மேனகா(UK), S. மதி(UK), T. சிவா (கனடா), S. திருக்குமார் (ஆஸ்திரேலியா).

**பேரப்பிள்ளைகள் :-** S.எழில், S.கவின், S.சுபா, T.லோகன், K.தர்சினி, K.தர்மினி, S.அருண், S.நிமலன், J.ஜெயா-டிலானி, J.லவா-லட்சுமி, J.வர்சி, J.லக்சி, R.நவின், S.சுகன்யா, S.வித்தியா, கிருஷ்ணா, S.கிருஷாந்தன், S.கிருஷாந்தி(கனடா), சிந்து(கனடா), பானு(கனடா), லக்ஷன்(கனடா), சாளினி, சாமினி, T.நிஷாந்தி (ஆஸ்திரேலியா), T. ஆரதி(ஆஸ்திரேலியா)

**பூட்டப்பிள்ளைகள் :-** அரவிந், வினிசா, டிமிசா, டிவானி, ஜஸ்மி, மாயா, கிரன்.

**தகவல் : சுசீலாதேவி செல்வரட்ணம்**

## மொத்த...

மகாநாயக்க தேரர்கள், அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவிடம் கோரிக்கை முன்வைத்துள்ளனர். கொழும்பு அரசின் ஆட்சிப் பீடத்தில் செல்வாக்குச் செலுத்தக் கூடிய மகாநாயக்க தேரர்கள் இருவரும், அரசதலைவருக்கு 21விடயங்களைச் சுட்டிக்காட்டி நீண்ட கடிதத்தை அனுப்பி வைத்துள்ளனர். அந்தக் கடிதத்திலேயே மேற்படி கோரிக்கையையும் குறிப்பிட்டுள்ளனர்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

கண்டி தலதா மாளிகைக்கு முன்னால் உள்ள வீதியை மீண்டும் திறக்கக் கூடாது. இலங்கையில் செயற்படும் அரச சார்பற்ற அமைப்புக்களின் செயற்பாடுகளைக் கண்காணிக்க வேண்டும், புதிய அரசமைப்பை உருவாக்குவது அல்லது அரசமைப்பில் மாற்றங்களைக் கொண்டு வருவது குறித்து மக்களுக்குத் தெரியப்படுத்தவேண்டும், வனவிலங்கு பாதுகாப்புப் பகுதிகளை உறுதிப்படுத்துவது, நல்லிணக்கச் சபை குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துவது போன்ற நடவடிக்கைகள் குறித்தும் அந்தக் கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அதற்கு மேலாக, அரச தலைவரின் அதிகாரங்களை உறுதிப்படுத்துவதன் மூலம் வடக்கு - கிழக்கு மக்களின் பிரச்சினைக்குத் தீர்வைக் காண்பதற்கு முயலவேண்டும், கொழும்பு அரசின் கரங்களில் அதிகாரங்கள் காணப்படும் அரசியல் தீர்வு ஏற்படுத்தப்பட வேண்டும்,

முஸ்லிம், தமிழ் மக்கள் இருக்கும் கிராமங்களின் நடுவில் வாழும் சிங்கள கிராமங்களின் வாழ்வில் முன்னேற்றத்தை ஏற்படுத்த முயல வேண்டும், இவ்வாறான பிரதேசங்களில் உள்ள அரச அதிகாரிகள் தமிழ் பேசுவோராக உள்ளனர். சிங்கள மக்கள் புறக்கணிக் கப்படுகின்றனர். இதனால் சிங்கள மக்கள் அங்கிருந்து தமது பாரம்பரியத்தை கைவிட்டு வெளியேற வேண்டிய நிலை ஏற்படுகின்றது - என்றும் அந்தக் கடிதத்தில் அரச தலைவருக்கு எடுத்துரைத்துள்ளனர். (த-5)

### வீடு வாடகைக்கு உண்டு

பருத்தித்துறை வீதி நீர்வேலி சந்தியில் சுற்று மதிலுடன் கூடிய வீடு வாடகைக்கு விடப்படும். (நிறுவனங்கள் விரும்பத்தக்கது.)

தொடர்பு .077 633 1914

### வேலையாள்கள் தேவை

கடையில் வேலை செய்யக்கூடிய படித்த ஆர்வமுள்ள ஆண், பெண் இருபாலாரும் தேவை.

தொடர்புகளுக்கு. 076 664 4749

### SUPER BALL சுப்பர் போல்

உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 637
சீட்டிழுப்பு திகதி 06.04.2017 வியாழக்கிழமை

வெற்றி இலக்கங்கள்: 29 33 46 47 P

அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 41, 599, 352/=

நீல நிற டிக்கட்டுக்கள் 06.04.2017 ஆம் திகதி சனிக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.

### ஜயோதா

உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 1355
சீட்டிழுப்பு திகதி 2017.04.06

வெற்றி இலக்கங்கள்: 06 29 48 63 L

அடுத்த திங்கட்கிழமைக்கான ஜக்பொட் ரூ. 10,000,000/-

## யாழ்ப்பாணம், மாவிட்டபுரம், வீணியவரை ஸ்ரீ ராஜ ராஜேஸ்வரி அம்பாள் தேவஸ்தானம்

அம்பிகை அடியார்களே!

வீணியவரை ஸ்ரீராஜராஜேஸ்வரி அம்பாள் ஆலய வருஷாபிஷேகம் (கும்பாபிஷேக தினம்) பங்குனி உத்தரம் 09.04.2017 ஞாயிற்றுக்கிழமை பூர்வாங்கக் கிரியைகள் 08.04.2017 சனிக் கிழமை மாலை 5.30 மணிக்கு ஆரம்பமாகி 09.04.2017 ஞாயிற்றுக்கிழமை காலை 7.30 மணிக்கு பூஜைகள் ஆரம்பமாகி அம்பாளிற்கு 1008 சங்காபிஷேகமும் அன்னதானமும் நடை பெறும். அன்று மாலை 4 மணிக்கு விசேஷ பூஜைகளைத் தொடர்ந்து வசந்த மண்டபப் பூஜையும் திருவூஞ்சலும் இடம்பெற்று அம்பாள் பூந்தண்டி கையில் வெளிவீதி உலா வருவாள் அடியவர்கள் இந் நிகழ்வுக்ளில் கலந்து கொண்டு அம்பாளின் இஷ்ட சித்திகளை பெற்று உய்வீர்களாக

அடியவர்கள் தங்களால் இயன்ற பால் தயிர் இளநீர் பழவகை பூக்கள் மற்றும் பூஜை பொருட்களை சமர்ப்பிக்கலாம்.

ஆலய தர்மகர்த்தா.

## கண்ணீர் அஞ்சலி



நேற்று 06.04.2017 வியாழக் கிழமை இயற்கை எய்திய எமது அன்புக்குரிய ஐயா

**அமரர் சின்னத்தம்பி கந்தப்பு**

(தில்லையம்பலப்பிள்ளையார் ஆலய தர்மகர்த்தா, கரவெட்டி கிழக்கு.)

அவர்களின் ஆத்மா தில்லையம்பலப்பிள்ளையார் திருவடிகளில் இன்புற்றிருக்க பிரார்த்திக்கின்றோம். ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

திருநெல்வேலி பழங்கிணற்றடி,
ஸ்ரீவீரகத்தி விநாயகர் ஆலயம்.

## கொக்குவில் உப அலுவலகம், நல்லூர் பிரதேசசபை, கொக்குவில் உப அலுவலகம்
## ஆதனப் பெயர்மாற்றம்

**ஆதன உரிமையாளர் பெயர் : செல்லத்தம்பி லோகநாதன்**
**வட்டாரம் - 10, முத்தட்டுமடம் 2ஆம் ஒழுங்கை,**
**ஆதன இலக்கம் : 36 / 4**

மேற்படி விவரத்தோடு ஆதனம் காணப்பட்ட போது அதே ஆதனத்தைச் செல்லத்தம்பி லோகநாதன் என்பவர் ஆதனப் பெயர்மாற்றத்துக்கு விண்ணப்பித்துள்ளார்.

குறித்த ஆதனத்தைக் கோண்டாவில் மேற்கைச் சேர்ந்த இளையதம்பி நாகலிங்கத்துக்கு 1944 ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் 20 ஆம் திகதி நொத்தாரிசு வேலுப்பிள்ளை விநாசித்தம்பி முன்பாக 2218ஆம் அறுதி உறுதியால் அவருக்கு சொந்தம் என்றும் 1973இல் அவர் வாரிசின்றி இறக்க வாய்ச்சொல் மூலம் நாகமுத்து செல்லத்தம்பிக்கு கையளித்திருந்தார் என்றும் அதனைத் தொடர்ந்து தொடர்ந்தும் செல்லத்தம்பி லோகநாதன் என்பவர் தான் ஆட்சி செய்து வருவதனால் பிரசித்த நொத்தாரிசு இளங்கீரன் முகதாவில் 24.10.2016 இல் 6367ஆம் இலக்க உறுதியின் பிரகாரம், வெளிப்படுத்தல் சாதன உறுதி ஊடாக உரிமைகோரி, பெயர்மாற்று விண்ணப்பம் சமர்ப்பித்துள்ளார்.

எனவே குறித்த ஆதனத்தின் உறுதி வெளிப்படுத்தலாக காணப்படுவதால் இவ் ஆதனம் தொடர்பாக ஆட்சேபனைகள் ஏதும் தெரிவிப்பின் பத்திரிகைப் பிரசுரத்திகதியிலிருந்து 30 நாள்களுக்குள் சட்டபூர்வமாக ஆவணங்களோடு எழுத்து மூலமாகவோ அல்லது நேரடியாகவோ வெளிநாட்டில் வசிப்பவரர்களாக இருந்தால் இங்குள்ள உறவினரூடாகவோ ஆட்சேபனையைத் தெரிவிக்குமாறும் யாரும் ஆட்சேபனை தெரிவிக்காத சந்தர்ப்பத்தில் விண்ணப்பதாரியின் பெயருக்கு குறித்த இலக்கமுடைய ஆவணத்தை பெயர்மாற்றம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனையும் இந்த ஆதனப் பெயர் மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்புக்கும் நல்லூர் பிரதேச சபை பொறுப்பாளி அல்ல என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

செயலாளர்,
நல்லூர் பிரதேச சபை.

BRITISH COLLEGE OF HIGHER STUDIES

எமது கற்கைநெறிகள் Writing, Speaking, Reading, Listening என வகைப்படுத்தப்பட்டு ஒவ்வொரு பிரிவும் மிகச் சிறந்த ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகின்றது.

BCHS

Excellent Teachers' Panel & Individual Attention

Diploma / Advanced Diploma in English

ஓரளவு ஆங்கில அறிவு உள்ளவர்கள் மேலும் அறிவை விருத்தி செய்ய சிறப்பாக அமைக்கப்பட்ட கற்கைநெறி. ஆங்கில அறிவு, இலக்கணம், இலக்கியம் என விரிவாகக் கற்பிக்கப்படும்.

IELTS Life Skills A1 Exam - Sponsor / Settlement Visa

மூலம் UK செல்பவர்களுக்கு British High Commission னால் அங்கீகரிக்கப்பட்ட பரீட்சை

Spoken English With Grammar - Quick Learning Course

குறுகிய காலத்தில் ஆங்கிலத்தில் புலமை பெற விரும்புபவர்களுக்கு இது பொருத்தமானதாகும். பாடசாலை மாணவர்கள், தொழில்புரிவோர், ஆங்கிலம் கற்க விரும்புவோருக்கு உகந்தது.

IELTS (Academic / General ) Student Migration Visa

மூலம் செல்பவர்களது Approved Centre for Registering Online (ORS) Candidates

Spoken Sinhala

சிங்களத்தில் சரளமாகக் கதைக்க விரும்புபவர்களுக்கு உகந்த முறையில் கற்பிக்கப்படும். மாணவர்கள், தொழில் புரிவோர், சிங்களம் கற்க விரும்புவோர் அனைவருக்கும்

Diploma in Sinhala

ஓரளவு சிங்கள அறிவு உள்ளவர்கள் மேலும் சிங்கள அறிவை விருத்தி செய்ய, சிங்களத்தினை மேலும் விரிவாகக் கற்றுக் கொள்ள விரும்புவோர்களின் தெரிவு.

வகுப்புக்கள் ஆரம்பம்

மேலதிக விபரங்களுக்கும் இலவச ஆலோசனைகளுக்கும் இன்றே எம்மைத் தொடர்பு கொள்ளவும்.

Young Learners English (YLE)

வயதெல்லை 7 - 15 உட்பட்ட மாணவர்களுக்கான சர்வதேசப் பரீட்சை உடன் University of Cambridge இனால் சான்றிதழ் வழங்கப்படும்.

Jaffna Branch :
No.15, Sirambiyady Lane, off Stanley Road, Jaffna.
Tel : 021 222 4550 | 076 3166 060

## 5பொலிஸாரின்...

இந்த வழக்கு யாழ்ப்பாணம் நீதிமன்றில் நீதிவான் சி.சதீஸ்தரன் முன்னிலையில் நேற்று விசாரணைக்கு வந்தது. சந்தேகநபர்களான 5 பொலிஸ் உத்தியோகத்தர்களும் மன்றில் முற்படுத்தப்பட்டனர்.

வழக்கின் மேலதிக விசாரணை அறிக்கைகள் எவையும் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் நேற்று முன்வைக்கப்படவில்லை. இந்த நிலையில் சந்தேகநபர்களின் விளக்கமறியலை எதிர்வரும் 20ஆம் திகதி வரை நீடித்து நீதிவான் உத்தரவிட்டார்.

*பின்னணி*

யாழ்ப்பாணம் காங்கேசன்துறை சாலையில் கொக்குவில் குளப்பிட்டிச் சந்தியை அண்மித்து கடந்த ஒக்ரோபர் 19ஆம் திகதி நள்ளிரவு மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் இரண்டு பேர் துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்டனர். கிளிநொச்சி பாரதிபுரத்தைச் சேர்ந்த நடராசா கஜன், யாழ்ப்பாணம் கந்தரோடையைச் சேர்ந்த விஜயகுமார் சுலக்சன் ஆகியோர் துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்டனர். இவர்கள் யாழ். பல்கலைக்கழக 2ஆம் 3ஆம் வருட மாணவர்கள்.

அவர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்திய குற்றச்சாட்டில் 5 பொலிஸார் கைது செய்யப்பட்டனர். இந்தச் சம்பவத்தை விபத்து உயிரிழப்பாகவே பொலிஸார் முன்னர் வெளிக்காட்ட முற்பட்ட போதும், பின்னர் கொலை என்பதனை அவர்கள் ஏற்றுக்கொண்டனர். (வ-12)

## இடைபுகு...

யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர்கள் இருவர் கடந்த ஆண்டு சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தில் 5 பொலிஸார் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். இந்தச் சம்பவம் தொடர்பான வழக்கு யாழ்ப்பாணம் நீதிவான் மன்றில் இடம்பெற்று வருகின்றது.

சந்தேகநபர்களான 5 பொலிஸாரும், தமது வழக்கை யாழ்ப்பாணம் நீதிவான் மன்றிலிருந்து கொழும்பு நீதிவான் மன்றுக்கு இடமாற்றுமாறு கோரி, தனித்தனியே இடமாற்ற மனுவை மேன்முறையீட்டு நீதிமன்றில் தாக்கல் செய்துள்ளனர்.

"வழக்கு யாழ்ப்பாணத்தில் நடைபெற்று வருவதால், சட்டத்தரணிகள் எவரும் எமக்காக முன்னிலையாக வருகின்றார்கள் இல்லை. பாதுகாப்பைக் காரணம் காண்பித்து கொழும்பிலிருந்து சட்டத்தரணிகள் யாழ்ப்பாணத்துக்கு வரமறுகிறார்கள். எனவே எம் மீதான குற்றச்சாட்டு வழக்கை கொழும்பு நீதிவான் மன்றுக்கு இடமாற்ற வேண்டும்" என்று 5 பொலிஸாரும் இடமாற்ற மனுவில் கோரியுள்ளனர்.

இந்த மனு மேன்முறையீட்டு நீதிமன்றில் நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. சுட்டுக் கொல்லப்பட்ட மாணவர்களில் ஒருவரான சுலக்சனின் தந்தையார் சி.விஜயகுமார், இந்த வழக்கில் தம்மையும் இடைபுகு மனுதாரராக ஏற்றுகுமாறு, சட்டத்தரணி மொகான் பாலேந்திராவின் அறிவுறுத்தலில், மூத்த சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் மற்றும் கே.சயந்தன் ஊடாக விண்ணப்பம் செய்திருந்தார்.

'பாதிக்கப்பட்ட இரண்டு பேர் சார்பிலும் அந்த விண்ணப்பத்தைச் செய்வதாக' மன்றில் சட்டத்தரணிகள் தெரிவித்தனர். மன்று அதனை ஏற்றுக் கொண்டது. ஆட்சேபணைகளை மே மாதம் 29ஆம் திகதிக்கு முன்னர் கோப்பிடுமாறு பாதிக்கப்பட்டவர்கள் சார்பில் முன்னிலையான சட்டத்தரணிகளுக்கு மன்று அறிவுறுத்தியது. (வ-5)

## காய்ச்சலால்...

வைத்தியசாலைகளுக்குச் சென்றமையே. எனவே சிகிச்சை பெறுவதில் தாமதம் வேண்டாம். இவ்வாறு கிளிநொச்சிப் பிராந்திய சுகாதார சேவை கள் திணைக்களம் தெரிவித்தது.

அது மேலும் தெரிவித்துள்ளதாவது:

கிளிநொச்சி மாவட்டத்தில் 592 பேர் பன்றிக் காய்ச்சலுக்கான சிகிச்சையைப் பெற்றுள்ளனர்.

பன்றிக் காய்ச்சல் தற்போது இலங்கையில் பல மாவட்டங்களில் அதி தீவிரமாகப் பரவிவருகிறது. புதுவருடப் பண்டிகைக் காலம் ஆகையால் பொதுமக்கள் நாட்டின் பல பகுதிகளுக்கும் சென்றுவரும்போது இந்த வைரஸ் காய்ச்சலும் மாவட்டத்தில் மிக வேகமாகப் பரவ வாய்ப்புள்ளது.

இது கர்ப்பிணித் தாய்மார், பிரசவத்தின் பின்னரான தாய்மார், இரண்டு வயதிற்கு உட்பட்ட குழந்தைகள், 65 வயதிற்கு மேற்பட்ட முதியவர்கள், முட்டு வருத்தம், சலரோக வருத்தம் உடையவர்கள் ஆகியோரைத் தாக்கும். விளைவுகள் கடுமையாக இருக்கும்.

கர்ப்பவதிகள் இந்தக் காலப் பகுதியில் மக்கள் கூடும் இடங்கள், சந்தைகள், கொண்டாட்டங்கள், பேரூந்துப் பயணங்கள், ரயில் பயணங்கள், இந்த நோயினால் பாதிப்புற்றோரைப் பராமரித்தல் என்பவற்றைத் தவிர்ப்பதால் இந்த நோய் தொற்றிலிருந்து தம்மைப் பாதுகாத்துக்கொள்ள முடியும்.

கிளிநொச்சி மாவட்டத்தில் இதன் தாக்கமானது ஜனவரி 25 ஆம் திகதியிலிருந்து கண்டறியப்பட்டது. அன்றிலிருந்து கடந்த ஏப்ரல் 3ஆம் திகதி வரையான 67 நாள்களுக்குள் கிளிநொச்சி மாவட்டப் பொது வைத்தியசாலையில் 592 நோயாளர்கள் இந்த இன்புளுவன்சா நோய்க்கான சிகிச்சையைப் பெற்றுள்ளனர். இவர்களில் 227 கர்ப்பவதிகளும், 38 சிறார்களும் அடங்குவர். மேற்படி 592 நோயாளர்களுள் 60 கர்ப்பவதிகள் மற்றும் 13 சிறுவர்கள் உட்பட 85 பொதுமக்கள் இன்புளுவன்சா வைரஸ்க் காய்ச்சலினால் பாதிக்கப்பட்டிருந்தமை கொழும்பு மருத்துவ ஆராய்ச்சி நிறுவகத்தினால் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்றுள்ளது. (து-4-35)

## ஈபிடிபியில்...

பட்டிருந்தார். வழக்கின் தொடர் விசாரணைகள் யாழ்ப்பாண மேல் நீதிமன்றில் நீதிபதி மா.இளஞ்செழியன் முன்னிலையில் நேற்று இடம்பெற்றன.

வழக்கின் எதிரி கந்தசாமி ஜெகதீஸ்வரன் சாட்சி கூண்டில் நின்று சாட்சியமளித்தார்.

"பொலிஸார் என்னைக் கைதுசெய்து பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்திருந்த வேளை மக்கள் வெளியில் போராட்டம் நடத்தினார்கள். என்னை தம்மிடம் ஒப்படைக்குமாறும் அவர்கள் கோரினார்கள்" என்று எதிரி சாட்சியமளித்தார்.

அதன் போது நீதிபதி "ஏன் மக்கள் உமக்கு எதிராகப் போராட்டம் நடாத்தினார்கள் " என எதிரியிடம் வினாவினார்.

"நான் இருந்த இடம் பிழை. ஈழ மக்கள் ஜனநாயக கட்சியில் இணைந்திருந்தேன். அந்தக் கால பகுதியில் சில அதிகாரங்களில் சிலவற்றை நான் செய்தேன். அதனால் , நெடுந்தீவு மக்கள் என் மீது வெறுப்பாக இருந்தார்கள். அதனாலேயே எனக்கு எதிராக மக்கள் போராட்டம் நடத்தினார்கள்" என்று மன்றிடம் தெரிவித்தார் எதிரி.

"சாவென்று வந்துவிட்டது. இனி எதுக்குப் பயப்பட வேண்டும் என்று மன்றிடம் எதிரி தெரிவித்தார். நீதிபதி சாவென்று ஏன் கூறுகிறீர்கள்? என்று எதிரியிடம் கேட்டார். "நான்தான் கொலை செய்தேன் என்றுதானே எல்லோரும் கூறுகிறார்கள். அதற்காகத் தான் இவ்வாறு கூறினேன்" என்று எதிரி மன்றிடம் தெரிவித்தார்.

முன்னதாக பல் மருத்துவ நிபுணர் ஜனனி வீரரட்ணம் மன்றில் சாட்சியமளித்தார்.

"பற்கட்டு தடயவியல் அறிக்கையை 2012ஆம் ஆண்டு மார்ச் மாதம் 19ஆம் திகதி பண்டார என்ற பொலிஸ் உத்தியோகத்தரால் சான்றுப்பொருளான கடிக்கப்பட்ட தோலினுடைய பகுதி என்னிடம் ஒப்படைக்கப்பட்டது. ஊர்காவற்றுறை நீதிவான் மன்றின் உத்தரவின் பேரில் நான் அதைப் பெற்றுக்கொண்டேன். எதிரியையும் முற்படுத்தினார்கள். அவரது பல் வரிசையை ஒளிப்படம் எடுத்தோம். அவருடைய பல்வரிசையில் நெகரீவ் றீப்பிகேக்கேனை தயாரித்து பொசிரிவ் றீப்பிளிக்கேனை இன்னொரு பிரிவாக எடுத்தேன். இதனடிப்படையில் அச்சு அசலாக மேற்தாடைப் பல்வரிசையும் எதிரியின் உண்மையான பல்வரிசையும் அப்படியே இருந்தது.

ஒரு கடிகாயத்தை இரண்டு வகையில் ஆய்வு செய்யலாம். இதனடிப்படையில் இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய பல்வரிசையை பற்றன் அனலைஸ் என்ற ஆய்வு வகையின் ஊடாகவே செய்திருந்தேன். இதனால் மிகவும் துல்லியமாக செய்ய முடிந்தது.

எதிரியினுடைய மேற்பகுதிப் பற்கள் இரண்டும் சிறுமியின் கையில் இருந்து பெறப்பட்ட அடையாளமும் ஒன்றாகவே இருந்தது. அதனை ஒப்பீடு செய்து மாதிரியைக் கொண்டு அதனை மன்றில் செய்தும் காட்டினார்.

துல்லியமாகச் சரியாக இருந்ததற்கு காரணம் ஒருவருடைய பல் வடிவத்தை ஒத்ததாக இன்னொருவருடைய பல் வடிவம் இருக்க முடியாது. இரட்டையர்களாக இருந்தாலும் அவ்வாறு இருக்க முடியாது என்பது விஞ்ஞான ரீதியான உண்மை.

எதிரியின் மேல் தாடையின் முன்னுள்ள பற்களும் சிறுமியின் கையில் உள்ள பல் அடையாளமும் மிகத்துல்லியமாகப் பொருந்தியிருந்தது" என்று பல் மருத்துவ நிபுணர் சாட்சியமளித்தார்.

வழக்குத் தொடுனர் மற்றும் எதிரி தரப்பு சாட்சியங்கள் நிறைவடைந்த நிலையில் அரச சட்டத்தரணி நாகரட்ணம் நிசாந் தனது தொகுப்புரையை மன்றில் முன்வைத்தார்

"கண்கண்ட சாட்சியங்கள் எதுவும் இல்லாத நிலையிலும் சூழ்நிலைச் சாட்சிகளுடன் கூடியதாக வழக்கை தொடுத்திருக்கிறேன். இரண்டு குற்றச்சாட்டுக்கள் இந்த எதிரி மீது உள்ளன. எனவே எதிரிக்கு தூக்குத் தண்டனை வழங்குமாறும் 20வருடங்களுக்கு குறையாத சிறைத்தண்டனை வழங்குமாறும் மன்றிடம் மன்றாட்டமாய்க் கேட்டு நிற்கிறேன்" என்றார் அரச சட்டத்தரணி.

எதிரி தரப்பில் முன்னிலையான சட்டத்தரணி ரஞ்சித்குமார் தனது தொகுப்புரையில், "குறித்த நபர் சார்பில் கண்கண்ட சாட்சிகள் எதுவும் இல்லை. ஏனைய சான்றுகளை வைத்து எவ்வாறு குற்றம் சுமத்த முடியும். சாட்சியங்களின் வாக்குமூலங்களை தமிழ் மொழியில் பதிவு செய்த பொலிஸார், எதிரியின் வாக்குமூலத்தை மட்டும் ஏன் சிங்கள மொழியில் பதிவிட்டார்கள். எதிரியின் மீது தேவையற்ற குற்றச்சாட்டுத்தான் சுமத்தப்பட்டிருக்கின்றது என்பதை மன்றிடம் தெரிவித்துக்கொள்கிறேன். பற்கட்டு தடயவியலை வைத்துக் கொண்டும், டி.என்.ஏ பரிசோதனையையும் வைத்துக்கொண்டு எவ்வாறு ஒருவரை குற்றஞ்சாட்ட முடியும்? எனது கட்சிக்காரர் மீது குற்றமிழைக்கவில்லை. எனவே அவரை விடுதலை செய்யுமாறு மன்றிடம் கேட்டுக் கொள்கின்றேன்" என்றார்.

தொகுப்புரைகளைப் பரிசீலனை செய்த நீதிபதி மா.இளஞ்செழியன், தீர்ப்புக்காக வழக்கை இன்றுவரை ஒத்திவைத்தார். அதுவரை எதிரியை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (வ-37-12)

## வறட்சி...

வறட்சியை எதிர்கொண்டுள்ள விவசாயிகளுக்கு மார்ச் மாதத்திலிருந்து அடுத்த போகம் வரையில் மாதாந்தம் தலா 10 ஆயிரம் ரூபா வழங்குவதற்கு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தலைமையில் கடந்த பெப்ரவரி மாதம் நடைபெற்ற கலந்துரையாடலில் தீர்மானிக்கப்பட்டிருந்தது. இருப்பினும் கொடுப்பனவு வழங்கல் இன்னமும் நடைமுறைக்கு வரவில்லை. இவ்வாறானதொரு நிலையிலேயே அமைச்சர் துமிந்த திசாநாயக்க மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

"தற்போதைய பெரும்போகக் காலத்தில் நிலவிவரும் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள விவசாயக் குடும்பங்கள் ஒவ்வொன்றுக்கும் தலா பத்தாயிரம் ரூபா நிதியுதவி வழங்கப்படும். வறட்சியால் பயிர்கள் பாதிக்கப்பட்டவர்கள் மட்டுமன்றி, வறட்சியை முன்னிட்டு பயிரிடாதவர்களும் இந்த நிதியுதவியைப் பெறத் தகுதி பெறுவார்கள். நிதியுதவியை கூடிய விரைவில் உரிய விவசாயிகளுக்கு வழங்குவதற்கு, சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளதாகவும்" அமைச்சர் திசாநாயக்க தெரிவித்துள்ளார். (து-5)

## மிதமிஞ்சிய...

மருத்துவர் அனில் ஜயசிங்க தெரிவித்தார்.

அதிகரித்துள்ள உஷ்ண நிலையால் வைரஸ் காய்ச்சலின் தாக்கம் தீவிரமடைந்திருப்பதாகவும், சிறு பிள்ளைகளையும், 80 வயதுக்கு மேற்பட்டோரையும் அது எளிதில் தாக்கக்கூடிய அபாயம் இருப்பதாகவும் அவர் கூறினார். அதிக வெயிலில் வெளியில் நடமாடுவதைத் தவிர்த்துக் கொள்ளுமாறும், இறுக்கமான ஆடைகளை அணிவதைக் குறைத்துக் கொள்ளுமாறும் ஆலோசனை வழங்கிய அனில் ஜயசிங்க, வைரஸ் காய்ச்சலுக்கான குணங்குறிகள் காணப்பட்டால் தாமதமின்றிச் சிகிச்சை பெற்றுக்கொள்ளவேண்டியது அவசியம் எனவும் வலியுறுத்தியுள்ளார். (து-4)

## இரசாயனத்...

பின்னணியில் ரஷ்யாவே உள்ளது என்று ஜேர்மனி பகிரங்கமாக குற்றஞ்சாட்டியது. இட்லிப் மாகாணத்தில் சேகுன் நகரில் அரசுக்கு எதிராகச் செயற்படும் கிளர்ச்சிக் குழுவை இலக்குவைத்து கடந்த செவ்வாய்க்கிழமை நடத்தப்பட்ட வான் வழி இரசாயனத் தாக்குதல் இலக்குத் தவறியதை அடுத்து நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் சாவடைந்தனர். இந்தத் தாக்குதல் போர்க் குற்றம் என்று ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் குட்டரெஸ் தெரிவித்தார். இந்தத் தாக்குதலின் பின்னணியில் ரஷ்யாவே உள்ளது என்று ஜேர்மனி குற்றஞ்சாட்டியது.

அரசுக்கு எதிரான கிளர்ச்சிக் குழுவின் பகுதியில் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. கிளர்ச்சிக் குழு விவகாரத்தில் சிரிய அரசுக்கு ஆதரவாக ரஷ்யாவே உள்ளதால் ஜேர்மனி இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்திருக்கலாம் என்று கருதப்படுகிறது. மட்டுமல்லாமல் ஈரான் மீதும் ஜேர்மனின் சந்தேகப் பார்வை விழுந்துள்ளது. (மற்றொரு செய்தி பக்கம் 15) (ம)

## ஆவணங்கள்...

ஆவணங்கள் சகிதம் எதிர்க்கட்சித் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தன் அவைக்கு வந்திருந்தார்.

விவாதம் நடைபெறாது தடைப்பட்டதால் அவர் மிகுந்த கவலையடைந்தார் என்று ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் மகிந்த ஆதரவு அணி நாடாளுமன்ற உறுப்பினர் தினேஷ் குணவர்தன தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று மகிந்த அணியான பொது எதிரணியால் ஐ.நா. தீர்மானம் தொடர்பில் ஒத்திவைப்புவேளை விவாதம் கொண்டுவரப்பட இருந்தது. விவாதத்துக்கு நேரம் ஒதுக்கப்பட்டுள்ள விதம் தொடர்பில் எழுந்த சர்ச்சையால் இன்று வெள்ளிக்கிழமை 10.30 மணிவரை சபை ஒத்திவைக்கப்பட்டது.

இதன் பின்னர் நாடாளுமன்றத்தில் அமைந்துள்ள ஊடகவியலாளர்களின் அறைக்கு வந்த பொது எதிரணி உறுப்பினர்களான தினேஷ் குணவர்தன, பந்துல குணவர்தன, நாமல் ராஜபக்ச, டலஸ் அழகப்பெரும மற்றும் ஜயந்த தர்தாச ஆகியோர் சபையில் நடந்தவற்றை ஊடகவியலாளர்களிடம் எடுத்துரைத்தனர்.

நடந்த சம்பவம் தொடர்பில் எதிர்க்கட்சி எவ்வாறான நிலைப்பாட்டில் உள்ளது என ஊடகவியலாளர் ஒருவர் தினேஷ் குணவர்தனவிடம் கேள்வி எழுப்பினார்.

இதற்குப் பதிலளித்த அவர்,

இது அசாதாரணமானது என்று எதிர்க்கட்சித் தலைவர் சம்பந்தன் என்னிடம் குறிப்பிட்டார். சபை ஒத்திவைப்புவேளை பிரேரணை முன்வைக்கும் தரப்புக்குக் குறைந்தபட்சம் 45 நிமிடங்களாவது வழங்கியிருக்கவேண்டும் என சம்பந்தன் தெரிவித்தார்.

அநுரகுமார திஸாநாயக்க தனது பதவியைத் (எதிர்க்கட்சி பிரதம கொறடா) தக்கவைத்துக் கொள்வதற்காகவே பேசுகின்றார். பொது எதிரணியைக் கட்சியாக ஏற்றுக்கொண்டே கட்சித் தலைவர்களின் கூட்டத்திலும் எமக்கு அங்கத்துவம் வழங்கப்பட்டுள்ளது. இந்தச் சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்தை நாங்களே கொண்டு வந்தோம். அதற்கான நேரம் வழங்கும்போது மாத்திரம் நொண்டிச் சாட்டுக் கூறுகின்றனர்.

நாட்டுக்கு எதிராக ஜெனிவாவில் கொண்டுவரப்பட்டுள்ள யோசனையில் உள்ள பிரச்சினைகள் குறித்துப் பேச வேண்டியுள்ளது. அதற்கமையவே இந்த விவாதத்தைக் கொண்டு வந்தோம். இதில் பேசுவதற்காக நான், நாமல், டலஸ், ஜயந்த தரமதாச ஆகியோர் தயாராகி இருந்தோம். எனினும், 210 மொத்த நிமிடங்களில் எமக்கு வெறுமனே 32 நிமிடங்கள் மாத்திரமே ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் நான் யோசனை முன்வைப்பதற்கே இந்த நேரம் போதாமல் இருந்தது" என்றார்.

அதேவேளை, ஐ.நா. தீர்மான விவாதத்தில் உரையாற்றுவதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நேற்று தயார் நிலையிலேயே இருந்தது.

கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் உட்பட அந்தக் கட்சியின் உறுப்பினர்கள் பலரும் அவைக்கு வந்திருந்தனர். குறிப்பாக பல ஆவணங்களைச் சபைக்குள் கொண்டு வந்து தமது தரப்பு நியாயத்தை தெளிவுபடுத்துவதற்குச் சம்பந்தன் தயார்நிலையிலேயே இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (து-4)

## ஜேர்மனியில்...

தரிப்பிடத்தில் தாக்கப்பட்டுப்படுகாயமடைந்த இவர் மருத்துவமனையில்சேர்க்கப்பட்டுள்ளார். (து-5)

# சொல்வதெழுதுதல்

ஒருவர் கூறும் விடயத்தை மற்றொருவர் கேட்டு கிரகித்து எழுதுவதே சொல்வதெழுதுதல் எனப்படும்.

**சொல்வதெழுதுதலின் போது கவனத்தில் கொள்ள வேண்டிய விடயங்களாவன:**

- சொல்பவற்றைக் கூர்ந்து கேட்டு மனதில் பதித்தல்
- மனதில் பதித்ததை எழுத வேண்டிய இடத்தில் நன்கு பார்த்து உறுப்பமைய எழுதுதல். உறுப்பமைய எழுதும் போது முன்னதாகவே கற்றுக் கொண்டபடி எழுதுக்களுக்கான கையசைவுகளைப் பயன்படுத்தல்.
- விரைவாக எழுதுதல்.
- சொற்களுக்கிடையே இடைவெளிகள் விட்டு எழுதுதல்.
- நிறுத்தற் குறியீடுகளைச் சரியாக இடுதல்.
- ல, ள, ழ, ர, ற, ன, ண, ந ஆகிய எழுதுக்களின் உச்சரிப்பு வேறு பாடுகளைக் கேட்டு கிரகித்து எழுத்துப் பிழைகளின்றி சரியாக எழுதுதல்.



## சொல்வதெழுதுதலின் நன்மைகள்


- பேசும் மொழியை விரைவாகவும், சரியாகவும் பொருளுணர்ந்து கொள்ள இது ஒரு நல்ல பயிற்சியும் வாய்ப்புமாகும்.
- கூர்ந்து கவனிக்கும் ஆற்றலையும், கேட்கும் ஆற்றலையும் மன ஒருமைப் பாட்டையும் நன்கு வளர்க்கிறது.
- நிறுத்தற் குறிகளை உரிய இடங்களில் இடுவதற்கான பயிற்சியைத் தருகிறது.
- கையெழுத்தின் விரைவையும், தெளிவையும் வளர்க்கத் துணை நிற்கின்றது.
- ஆசிரியரின் உச்சரிப்பை மாணவர்கள் சரியாகப் பின்பற்றுகிறார்களா என அறிய உதவுகின்றது.
- மாணவர் விடும் தவறுகளை அவர்களே அறிந்து மீண்டும் அத்தவறுகள் ஏற்படாது திருத்திக் கொள்ள உதவுகிறது.

**தரம் 1 மாணவர்களுக்கான சொல்வதெழுதுதல் சொற்கள்**

| | |
|---|---|
| 1. பந்து | 11. வானம் |
| 2. கிளி | 12. மரம் |
| 3. நாய் | 13. தம்பி |
| 4. காகம் | 14. வாழை |
| 5. குருவி | 15. சேவல் |
| 6. கோழி | 16. பசு |
| 7. பூனை | 17. கன்று |
| 8. மாடு | 18. தம்பி |
| 9. குயில் | 19. பால் |
| 10. வண்டு | 20. கரும்பு |



## புள்ளிகளை இணைத்து படம் வரைவோம்






## அகரம் முதல் ஃ வரை

அன்பிலே ஒழுகிடு
ஆற்றலைப் பெருக்கிடு
இரக்கத்தைப் பேணிடு
ஈவதை வளர்த்திடு
உண்மையைப் பேசிடு
ஊறுகள் தவிர்த்திடு
எண்ணியே செய்திடு
ஏழையை மதித்திடு
ஐயத்தை அகற்றிடு
ஒற்றுமையாய் வாழ்ந்திடு
ஓதுவதைத் தொடர்ந்திடு
ஔடதம் அளவோடெடு
ஆயுதம் (ஃ) களைந்திடு



## 'இக்ளு' வீடுகள்

எஸ்கிமோவர் என்ற இனத்தவரால் பனிக்கட்டிப் பாளங்களால் கோள வடிவத்தில் தற்காலிகமாக அமைக்கப்படும் குளிர்கால வீடுகள் அல்லது வேட்டை வசிப்பிடங்கள் 'இக்ளு' எனப்படுகின்றன. அதிக பனிக்கட்டி விழுகின்ற வடதுருவப் பகுதிகளில் குறிப்பாக கிறீன்லாந்தின் கிழக்குக் கரையோரத்திலிருந்து கிழக்கு சைபீரியா வரையும், வட அமெரிக்காவின் ஆக்டிக் பகுதியிலும் எஸ்கிமோவரால் இந்த வீடுகள் அமைக்கப்படுகின்றன. இந்த வீடுகள் தாழ்வான வாயில்களைக் கொண்டிருக்கும். நுண்ணிய துகள்களைக் கொண்ட, ஆனால் இறுகி இருக்கக் கூடிய பனிக் குவியலைத் தேர்ந்தெடுத்து, அதனைப் பாளங்களாக வெட்டி இந்த வீட்டை அமைக்கத் தொடங்குவர். பனிப் பாளங்கள் முதலில் வரிசையாக வட்ட வடிவில் வைக்கப்படும். பின்னர் இந்தப் பாளங்களின் மேற்பரப்பு சாய்வு கோணம் ஏற்படும் வகையில் செதுக்கப்படும். பின்னர் மேலும் மேலும் பல அடுக்குகளாகப் பாளங்கள் வைக்கப்பட்டு செதுக்கப்படும். மேலே போகப்போக சுவரின் சுற்றளவு குறுகிக் கொண்டே போக, ஒரு கூண்டு வடிவம் (கோள வடிவம்) உருவாகும். கூண்டின் உச்சியில் காற்றோட்டத்துக்காக ஒரு துவாரம் விடப்படும். எஸ்கிமோவர் கோடை காலத்தில் துருவமான் தோலால் மூடப்பட்ட கூடாரங்களிலும் மாரி காலத்தில் இந்த இக்ளு குடிசைகளிலும் வசிப்பர்.

## முட்டாள் தினம் ஏப்ரல் 01



1564ஆம் ஆண்டின் பிரான்ஸ் நாட்டை ஆண்டுவந்த 10ஆம் சார்லஸ் மன்னன் புதிய கலண்டர் முறையைப் புகுத்தினார். அதற்கு முன்பு இருந்த கலண்டர் முறைப்படி ஆங்கில புதுவருடம் ஏப்ரல் முதலாம் திகதியிலிருந்தே ஆரம்பமானது. மன்னர் புகுத்திய இந்த புதிய கலண்டர் முறைப்படி, ஆங்கில புதுவருடம் ஜனவரி முதலாம் திகதியிலிருந்து ஆரம்பிக்கும் என்று நாட்டு மக்களுக்கு அறியத்தரப்பட்டது. சிலர் இந்தப் புதிய முறையை ஏற்க மறுத்து, பழைய ஏப்ரல் முதலாம் திகதியை புதிய வருட தினமாக கொண்டாடினர். புதிய கலண்டர் முறையை ஏற்றுக் கொண்டவர்கள், ஏப்ரல் முதலாம் திகதியை புதுவருட தினமாகக் கொண்டாடிய பழைமை வாதிகளை,அன்றைய தினத்தில் 'முட்டாள்கள்' என்று கேலி செய்யத் தொடங்கினர். அதன் காரணமாகவே ஏப்ரல் முதலாம் திகதி முட்டாள்கள் தினமாகக் கொண்டாடப்படுகிறது.

## முள்ளம் பன்றியும் ஓநாயும்

தன் முன்னால் வந்து நின்ற ஓநாயைக் கோபமாகப் பார்த்து தன் முட்களைச் சிலிர்த்து நின்றது முள்ளம் பன்றி. ஓநாய் பதற்றத்துடன் "பயப்படாதே, உன் அழகை ரசிக்கத்தான் நான் வந்தேன்" என்றது. "என்னது நான் அழகா? என்று வியப்போடும், சற்று வெட்கத்தோடும் கேட்டது பன்றி. "ஆமாம் நீ கொள்ளை அழகு. உன்னைப் போல ஒரு அழகியை நான் இதுவரை பார்த்ததேயில்லை. ஆனால் உன் அழகைக்கெடுப்பதெல்லாம் உன் உடம்பில் இருக்கும் அந்த முள்ளுகள்தான்" என்றது நரி. "ஆனால் இந்த முள்ளுகள் தானே என்னைப் பாதுகாக்கின்றன" என்றது பன்றி. "உண்மைதான், ஆனால் அந்த முள்ளுகளை எடுத்து விட்டாயானால் உன் அழகு இன்னும் பேரழகாகி விடும். அதற்குப் பின்னர் உன் அழகைப் பார்ப்பவர்களுக்கு உன்னைக் கொல்ல மனசே வராது" என்றது ஓநாய்.

ஓநாயின் பசப்பு வார்த்தையில் முள்ளம் பன்றி மிகவும் மயங்கிப் போயிற்று. "சரி நீ இன்று போய் நாளை வந்து என் அழகைப் பார்" என்று கூறி ஓநாயை வழியனுப்பி வைத்தது. ஓநாய் போன பின்பு முள்ளம் பன்றி பலமாக யோசித்தது. தன்னுடைய முட்களை எவரின் உதவியுடன் அகற்றுவது என யோசித்தது. தனது சகாக்களிடம் அகற்றும்படி கேட்க முடியாதே அவர்கள், தான் மேலும் அழகாகி விடுவேனென்ற பொறாமையால் முட்களை அகற்ற விரும்ப மாட்டார்கள் என்று தனக்குத் தானே யோசித்துக் கொண்டிருக்கையில் அவ்வழியே குரங்கு ஒன்று வந்தது. அதனைத் தன்னிடத்தில் அழைத்த பன்றி "குரங்காரே! எனக்கு ஒரு உதவி செய்ய வேண்டும். தாங்கள் ஆணும் பெண்ணுமாக ஒருவருக் கொருவர் நன்றாகப் பேன் பார்ப்பதில் வல்லவர்கள் என்று நான் அறிந்திருக்கிறேன்" என்றது. குரங்கு "ஆமாம். சரி, அதற்கு நான் என்ன செய்ய வேண்டும்" என்றது. எனது உடம்பிலும் நிறையப் பேன்கள் உள்ளன. பேன்களை அகற்றுவதற்கு இந்த முள்ளுகள் எனக்குத் தடையாக உள்ளன. நீர் இந்த முள்ளுகளை அகற்றி எனது பேன் தொல்லையை நீக்க உதவ வேண்டும்" என்றது பன்றி. குரங்கோ தன்னை முள்ளம் பன்றி புகழ்ந்ததில் மகிழ்ச்சியடைந்து, பன்றி யின் முட்களை ஒவ்வொன்றாகப் பிடுங்கி அகற்றத் தொடங்கியது. முள்ளம்பன்றியின் உடல் உரோமங்கள் சிலவே முட்களாக மாற்றமடைந்திருந்ததால் அவற்றைப் பிடுங்கி அகற்றுவதில் பன்றிக்கு வலி எதுவும் ஏற்படவில்லை.

குரங்கு தன் வேலையை முடித்துக் கொண்டு, பேன் பார்க்கத் தொடங்கியது. "நன்றி குரங்காரே! இன்று நீர் மிகவும் களைப்படைந்து விட்டீர். நாளை பேன் எடுப்பதை வைத்துக் கொள்வோம்" எனக் கூறி தன் புதர் நிறைந்த பொந்துக்குள் போய் மறைந்தது பன்றி.

மறுநாள் தன்னைத் தேடி வந்த ஓநாயைப் பார்த்து பன்றி "இப்போது எப்படி? நான் இன்று இன்னும் அழகாயிருக்கிறேனா?" என கேட்டது. மகிழ்வோடு "ஓ.... அழகாய் மட்டுமல்ல அடித்துச் சாப்பிடுவதற்கு வசதியாகவும் இருக்கிறாய்" என்று கூறி சிரித்த படி பன்றி மேலே பாய்ந்தது ஓநாய்.

**வீண் புகழ்ச்சியில் மயங்கவும் கூடாது.**
**போலிகளைக் கண்டு ஏமாந்து விடவும் கூடாது.**






யாழ்ப்பாண அணி


நல்லூர் அணி

# யாழ்ப்பாணத்தை எதிர்க்கிறது நல்லூர்; கூடைப்பந்தாட்ட இறுதியில்

யாழ்ப்பாணம், ஏப். 7
யாழ்ப்பாணம் மாவட்ட பிரதேச செயலகங்களுக்கு இடையிலான கூடைப்பந்தாட்டத் தொடரில் யாழ்ப்பாணம் பிரதேசசெயலகமும், நல்லூர் பிரதேச செயலகமும் இறுதிக்குத் தகுதிபெற்றன.
யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் கூடைப்பந்தாட்டத் திடலில் நேற்றுமுன்தினம் இந்த அரையிறுதிகள் நடைபெற்றன.
முதலாவது அரையிறுதியில் யாழ்ப்பாணம் பிரதேச செயலக அணியை எதிர்த்து சாவகச்சேரி பிரதேச செயலக அணி மோதியது.
76:42 என்ற புள்ளிகளின் அடிப்படையில் யாழ்ப்பாணம் பிரதேச செயலக அணி வெற்றிபெற்றது.
தொடர்ந்து இடம்பெற்ற இரண்டாவது அரையிறுதி ஆட்டத்தில் நல்லூர் பிரதேச செயலக அணியை எதிர்த்து பருத்தித்துறைப் பிரதேச செயலக அணி மோதியது.
77:50 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதிபெற்றது நல்லூர் பிரதேச செயலக அணி. (ம-23)

# கலைமதி இறுதியில்

யாழ்ப்பாணம், ஏப். 7
அரியாலையின் 98 ஆவது சுதேசிய திருநாள் கொண்டாட்டத்தை முன்னிட்டு யாழ்ப்பாணம் மாவட்ட ரீதியாக இரு பிரிவாக நடத்தப்பட்டுவரும் கரப்பந்தாட்டத் தொடரில் 'ஏ' பிரிவில் புத்தூர் கலைமதி அணி இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது.
அரியாலை திருமகள் சனசமூக நிலைய கரப்பந்தாட்டத் திடலில் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்ற அரையிறுதி ஆட்டத்தில் ஆவரங்கால் இந்து இளைஞர் அணியை எதிர்த்து புத்தூர் கலைமதி அணி மோதியது.
5 செற்களைக் கொண்ட அரையிறுதி ஆட்டத்தின் முதலாவது செற்றை 25:16 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றியது கலைமதி. இரண்டாவது செற்றை 27:25 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி பதிலடி கொடுத்தது இந்து இளைஞர். மூன்றாவது மற்றும் நான்காவது செற்களை முறையே 25:23, 25:20 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது கலைமதி. (ம-23)


விஜிதரன்

# சென். தோமஸ் 'பி' அரையிறுதியில்

யாழ்ப்பாணம், ஏப். 7
திக்கம் மத்திய சனசமூக நிலையத்தின் வைரவிழாவை முன்னிட்டு திக்கம் இளைஞர் விளையாட்டுக் கழகம் வடமாகாண ரீதியில் நடத்தும் கபடித் தொடரில் பருத்தித்துறை சென். தோமஸ் 'பி' அணி அரையிறுதிக்குத் தகுதிபெற்றது.
திக்கம் இளைஞர் விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற காலிறுதி ஆட்டத்தில் சென். தோமஸ் 'பி' அணியை எதிர்த்து ஸ்ரார் ஈகிள்ஸ் அணி மோதியது. 54:39 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்று அரையிறுதிக்குத் தகுதிபெற்றது சென். தோமஸ் 'பி' அணி. ஆட்டநாயகனாக தோமஸின் விஜிதரன் தெரிவானார். (ம-422)

# திக்கம் இளைஞரின் கபடி ஜசிந்தா அரையிறுதியில்

யாழ்ப்பாணம், ஏப். 7
திக்கம் சனசமூக நிலையததின் வைரவிழாவை முன்னிட்டு உதயன் பத்திரிகையின் ஊடக அனுசரணையில் திக்கம் இளைஞர் விளையாட்டுக் கழகம் நடத்தும் கபடித் தொடரில் பண்டத்தரிப்பு ஜசிந்தா அணி அரையிறுதிக்குத் தகுதிபெற்றது.
திக்கம் இளைஞர் விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்று நடைபெற்ற காலிறுதியாட்டத்தில் பண்டத்தரிப்பு ஜசிந்தா அணியை எதிர்த்து அச்சுவேலி புனித தெரேசாள் மகளிர் கல்லூரி அணி மோதியது.
ஆட்டம் ஆரம்பம் முதல் ஆதிக்கம் செலுத்திய பண்டத்தரிப்பு ஜசிந்தா அணி 35:5 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்று அரையிறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது. (ம-422)




# இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், ஏப். 7
அரியாலையின் 98 ஆவது சுதேசிய திருநாள் கொண்டாட்டத்தை முன்னிட்டு யாழ்ப்பாணம் மாவட்ட ரீதியாக இரு பிரிவாக நடத்தப்பட்டுவரும் கரப்பந்தாட்டத் தொடரின் அரையிறுதி ஆட்டங்கள் சில இன்று நடைபெறவுள்ளன.
அரியாலை திருமகள் சனசமூக நிலைய மைதானத்தில் இன்று இரவு 7 மணிக்கு இடம்பெறும் பி பிரிவினருக்கான ஆட்டத்தில் யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தை எதிர்த்து புத்தூர் வளர்மதி விளையாட்டுக் கழகமும் தொடர்ந்து இரவு 8மணிக்கு இடம்பெறும் 'ஏ' பிரிவு ஆட்டத்தில் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து இளவாலை மத்திய விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன. (ம-108-422)

# இந்து இளைஞர் இறுதியாட்டத்தில்

அரியாலையின் 98 ஆவது சுதேசிய திருநாள் கொண்டாட்டத்தை முன்னிட்டு யாழ்ப்பாணம் மாவட்ட ரீதியாக இரு பிரிவாக நடத்தப்பட்டுவரும் கரப்பந்தாட்டத் தொடரில் 'பி' பிரிவில் சண்டிலிப்பாய் இந்து இளைஞர் அணி இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது.
அரியாலை திருமகள் சனசமூக நிலைய கரப்பந்தாட்டத் திடலில் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்ற அரையிறுதி ஆட்டத்தில் சண்டிலிப்பாய் இந்து இளைஞர் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து நீர்வேலி ஐக்கிய விளையாட்டுக் கழக அணி மோதியது.
5 செற்களைக் கொண்டதாக ஆட்டம் அமைந்தது. முதல் மூன்று செற்களையும் முறையே 25:19, 25:23, 25:21 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி 3:0 என்ற நேர் செற் கணக்கில் வெற்றிபெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதிபெற்றது சண்டிலிப்பாய்,இந்து இளைஞர் அணி. (ம-23)



# மலிங்க ஹற்றிக்

பங்களாதேஷுக்கு எதிராக நேற்று நடைபெற்ற இரண்டாவதும் இறுதியானதுமான ரி - 20 ஆட்டத்தில் இலங்கை அணியின் வேகப்பந்து வீச்சாளர் மலிங்க ஹற்றிக் படைத்தார்.
நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற பங்களாதேஷ் முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. அந்த அணி எதிர்கொண்ட 19ஆவது பந்துப் பரிமாற்றத்தை மலிங்க வீசினார். மூன்றாவது பந்தில் ரகிமையும் நான்காவது பந்தில் மோர்ரசாவையும் போல்ட் செய்த மலிங்க ஐந்தாவது பந்தில் மிராஸை எல்.பி.டபிள்யு. செய்து தனது ஹற்றிக் அடைவை நிலைநாட்டினார்.
நேற்றைய ஆட்டமே பங்களாதேஷ் அணியின் தலைவர் மோர்ரசாவின் இறதியாட்டமாக அமைந்தது. இந்த ஆட்டத்தில் அவர் ஓட்டமெதனையும் பெறாது குறிப்பாக ஹற்றிக் இலக்குகளுக்குள் உள்ளடங்கியமை பங்களாதேஷ் ரசிகர்களுக்கு அதிர்ச்சியைக் கொடுத்துள்ளது. (ம)

# சாதிக்குமா மே.தீவுகள்

மேற்கிந்தியத் தீவுகள் - பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான மூன்று ஆட்டங்களைக் கொண்ட ஒருநாள் தொடர் தீவுகளின் கயானாவில் இன்று ஆரம்பமாகிறது.

பாகிஸ்தான் அணி மேற்கிந்தியத் தீவுகளுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளது. இந்த இரு அணிகளுக்கும் இடையிலான ரி-20 தொடரை 3:1 என்ற அடிப்படையில் கைப்பற்றியது பாகிஸ்தான். சொந்த மண்ணில் ரி-20 தொடரை இழந்ததை அடுத்து ஒருநாள் தொடரையாவது கைப்பற்ற வேண்டும் என்ற தர்மசங்கடமான நிலை தீவுகளுக்கு ஏற்பட்டுள்ளது. (ம)




# சிமித் நெருப்பாட்டம் புனே திரில் வெற்றி




ஐ.பி.எல். தொடரில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் அணித்தலைவர் சிமித்தின் பொறுப்பானதும் அதிரடியானதுமான ஆட்டம் கைகொடுக்க ஒரு பந்து மட்டுமே மீதமிருக்க மும்பையை வீழ்த்தியது புனே.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற புனே களத்தடுப்பைத் தீர்மானித்தது. முதலில் துடுப்பெடுத்தாடிய மும்பை 8 இலக்குகளை இழந்து 184 ஓட்டங்களைக் குவித்தது.

பதிலுக்குக் களமிறங்கிய புனேக்கு ஆரம்ப வீரர் ரகானே வெற்றிக்கான அடித்தளத்தை அமைத்துக் கொடுத்தார். அவர் 27 பந்துகளில் அரைச்சதம் கடந்து 60 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். சிமித் ஆரம்பம் முதலே பொறுப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினார். அவரின் அரைச்சதம் 37 பந்துகளில் பதிவானது. இறுதிப்பந்துப் பரிமாற்றத்தில் 13 ஓட்டங்கள் தேவை என்ற நிலை. முதல் மூன்று பந்துகளிலும் ஒவ்வொரு ஓட்டங்களே பெறப்பட்டன. நான்காவதும், ஐந்தாவதுமான பந்துகளை சிக்சருக்கு விளாசி ஆட்டத்தை வெற்றியுடன் முடித்தார் புனே அணியின் தலைவர் சிமித். (ம)

## தமிழருக்குப் பதில் தமிழர்

புனே, ஏப். 7

நடப்பு வருட ஐ.பி.எல். தொடரில் இருந்து புனே அணியில் இடம்பெற்றிருந்த தமிழக வீரர் அஸ்வின் விலகியுள்ள நிலையில் அந்த இடத்தை மற்றொரு தமிழகத்தின் வீரர் சுந்தர் பிரதியீடு செய்தார். (ம)




# வங்கப் புலிகள் வேட்டைக்கு இலங்கைச் சிங்கங்கள் இரை

## வெற்றியுடன் விடைபெற்றார் மோர்ரசா

இலங்கைக்கு எதிரான இறுதி ரி-20 ஆட்டத்தில் வெற்றிபெற்று தொடரை 1:1 என்றாக்கியது பங்களாதேஷ் அணி.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற பங்களாதேஷ் முதலில் துடுப்பெடுத்தாட ஆரம்பித்தது. அந்த அணியின் ஆரம்ப வீரர்கள் மிகச் சிறந்த அடித்தளத்தை அமைத்துக் கொடுத்தனர். இணைப்பாட்டமாக 71 ஓட்டங்கள் பகிரப்பட்ட பின்னரேயே முதல் இலக்குச் சரிக்கப்பட்டது. வீழ்ந்தவர் சர்க்கர். வீழ்த்தியவர் குணரத்ன. சக ஆரம்ப வீரரான கையிஸ் அடுத்த சிலநிமிடங்களில் சர்கரைத் தேடிச் சென்றார். சகிப் அல் ஹசன் மத்திய வரிசையை வழக்கம்போல் பலப்படுத்தினார். மலிங்கவின் ஹற்றிக் சிறிது ஆட்டம்காண வைத்தாலும் மொஸ்டக் கொசைன், சபீர் ரகுமான் கிடைத்த வாய்ப்பைப் பயன்படுத்த 9 இலக்குகளை இழந்து 176 ஓட்டங்களைக் குவித்தது பங்களாதேஷ் அணி. பதிலுக்குக் களமிறங்கிய இலங்கை பத்தொன்பதே ஓட்டங்களில் ஆரம்ப வீரர்கள் இருவரையும் இழந்தது. இருவரையும் சகிப் அல் ஹசனே அனுப்பி வைத்தார். கப்புக்கெதர ஓர் முனையில் நிலைத்துநின்று அரைச்சதம் கடந்தாலும் மத்திய வரிசையில் குணரத்ன, சிறிவர்தன ஓட்டமெதனையும் பெறாமல் ஆட்டமிழந்து பின்னடைவைக் கொடுத்தனர். தடுமாற்றம் நீண்டு செல்ல படிப்படியாக இலங்கையின் தோல்வி உறுதியானது. முடிவில் 131 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்து 45 ஓட்டங்களால் இலங்கை படுதோல்வியடைந்தது.

இந்த ஆட்டமே பங்களாதேஷ் அணித்தலைவர் மோர்ரசாவின் இறுதி ரி-20 ஆட்டமாகும். நேற்றுடன் அவர் பன்னாட்டு ரி-20 அரங்கில் இருந்து வெற்றியுடன் விடைபெற்றார். (ம)




# ஐக்கியம் அரையிறுதிக்குத் தகுதி

யாழ்ப்பாணம், ஏப். 7

திக்கம் சனசமூக நிலையத்தின் வைரவிழாவை முன்னிட்டு திக்கம் இளைஞர் விளையாட்டுக் கழகம் உதயன் ஊடக அனுசரணையில் நடத்திவரும் வடமாகாண ரீதியிலான கபடித் தொடரில் பெண்கள் பிரிவில் பருத்தித்துறை ஐக்கிய அணி அரையிறுதிக்குத் தகுதிபெற்றது.

திக்கம் இளைஞர் விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற காலிறுதியாட்டத்தில் பருத்தித்துறை ஐக்கிய அணியை எதிர்த்து வல்வை அணி மோதியது. ஆட்டம் ஆரம்பம் முதல் ஆதிக்கம் செலுத்திய பருத்தித்துறை ஐக்கிய அணி 42:7 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்று அரையிறுதிக்குத் தகுதி பெற்றது. (ம-422)





கரணவாய் கொலின்ஸ் விளையாட்டுக் கழகம் வடமராட்சி அணிகளுக்கு இடையில் நடத்தும் 'ஸ்டார் ஒவ் வடமராட்சி' கிண்ணத்துக்கான துடுப்பாட்டத் தொடரின் இறுதியாட்டம் கொலின்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் நாளை சனிக்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளது. இறுதியாட்டத்தில் கரவெட்டி ஞானம்ஸ் அணியை எதிர்த்து வல்வெட்டித்துறை கழுகுகள் அணி மோதவுள்ளது. (ம-422)

# விடைபெறுகிறார் மிஸ்பா



பன்னாட்டு கிரிக்கெட் அரங்கில் இருந்து பாகிஸ்தான் டெஸ்ட் அணியின் தலைவரான மிஸ்பா உல் ஹக், மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான தொடருடன் ஓய்வு பெறவுள்ளார்.

பாகிஸ்தான் அணி மேற்கிந்தியத் தீவுகளுக்குச் சுற்றுப் பயணம் செய்துள்ளது. இந்த இரு அணிகளுக்கும் இடையிலான மூன்று ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடர் எதிர்வரும் 21ஆம் திகதி ஆரம்பித்து அடுத்த மாதம் 14ஆம் திகதி முடிவடையவுள்ளது. இந்தத்தொடரே மிஸ் பாவின் இறுதி டெஸ்ட் தொடராகும். (*)

FRENCH LANGUAGE CENTRE
பிரெஞ்சு மொழி வகுப்பு
Embassy ஆல் அங்கீகரிக்கப்பட்ட International Diploma in French
இலகுவாக எழுத, வாசிக்க, சரியான உச்சரிப்புடன் கதைக்க...
2006 முதல் இன்றுவரை 1246 மாணவர்கள்

இல. 40, பலாலி வீதி, (ஆரியகுளம்)
15.04.2017 சனி 10am
0779 789 456
021 221 7781

No.181, 1st Floor, பிரதான வீதி, நெல்லியடி
17.04.2017 பி.ப. 4.00
021 320 2973

IELTS
Life Skills A1, B1
வகுப்புக்களும்.....

(இலுப்பையடி சந்திக்கு அண்மையில் கராஜ் முன்பாக)

## Vacancies For Internal Audit Officer

We are looking for a dynamic and Professionally qualified person who is seeking a challenging career in internal audit to join the Internal Audit Division of the Northern Central Hospital (Private) Limited. Ideal candidate should possess following qualifications.

- Business level of ICASL or skills level of ACCA, or AAT Completed.
- At-least two years of audit experience in a reputed audit firm / reputed commercial establishment.
- Previous experience in health care sector would be a definite advantage.
- Age should be below 35 years.
- Good command in English both verbal and written communication.
- Proficiency in MS Office.

If you are really interested, please sent your CV before 15th April, by e-mail or post or deliver to the Receptionist Counter.

Human Resources Manager,
Northern Central Hospitals (Private) Limited.
No.342,Palay Road, Jaffna
Contact Number : 077 773 2892
e-mail - nchjaffna@gmail.com

போட்டிப்பரீட்சை வகுப்புக்கள்
கணக்காளர் சேவை
சனி
(08.04.2017)
ஞாயிறு
(09.04.2017)
திங்கள்
(10.04.2017)
காலை 9 -4 மணி வரை வினாத்தாள்கள் மீட்டல்

SLAS, முகாமைத்துவ உதவியாளர் அபிவிருத்தி உத்தியோகஸ்தர் தகவல் திணைக்கள விரியோக உத்தியோகஸ்தர் பரீட்சை வகுப்புக்கள் நடைபெறுகின்றன.
தொடர்புகள் -076 688 3394
021 222 3382
யாழ்ப்பாணக்கல்லூரி பட்டப்படிப்புக்கள் பிரிவு
யாழ். ஆஸ்பத்திரி வீதி, கொமர்ஷல்வங்கி அருகில்

பெண் பணியாளர்கள் தேவை
யாழ்.நகரில் இயங்கும் பிரபல வெளிநாட்டுப் பொதிகள் சேவை நிறுவனத்தில் பணிபுரிவதற்கு பெண் பணியாளர்கள் தேவை. 07, 08, 09 ஆம் திகதிகளில் நேரில் சமுகம் தரவும். அருள் குளோபல் என்ரர பிறைசஸ்
இல. 01, பிறவுண் வீதி, நாவலர் வீதி சந்தி, யாழ்ப்பாணம். 021 222 6113

New Sky Computer Training Centre
விடுமுறைகால கணினி வகுப்புக்கள்
* Word 2016 - 3 Weeks
* Excel 2016 - 3 Weeks
* PowerPoint - 2 Weeks
* Photoshop CC - 3 Weeks
* CorelDraw X7 - 3 Weeks
*Indesign CC, Illustrator CC, PageMaker
*Kids Programe - சிறுவர்களுக்கானது
Internet & E-mail - 2 Weeks
TP:0212215992, 0779672038
இல.7/6 பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்
(யாழ் மாநகர சபைக்கு முன்னால்)

NALIN Information Technologies Pvt Ltd.
NALIN INFORMATION TECHNOLOGIES (PVT) LTD.
வடமாகாண பாடசாலைகளுக்கு விசேட விலைகளில்
Fingerprint Time attendance Device

உங்கள் பாடசாலைகளுக்கு விசேட விலையில் 2 வருட உத்தரவாதத்துடன் 1000 நபர்களுக்கான வரவினைப் பதிவுசெய்யக்கூடிய Fingerprint Time Attendance Deviceகளைப் பொருத்திடுங்கள்.

வடமாகாணத்தில் எமது தொழில்நுட்பவியலாளர்களால் 500இற்கு மேற்பட்ட அரச மற்றும் தனியார் நிறுவனங்களில் Fingerprint Time Attendance Deviceகள் விசேடமாக பொருத்தப்பட்டுள்ளது.

Fingerprint Time attendance Device இலவசமாக நிறுவிக் கொடுக்கப்படும் Free Installation

Rs. 12,500.00 முதல்
* இச்சலுகை சித்திரை 15வரை மட்டுமே.

மிகவிரைவில் தமிழில் Software தங்களுக்கு பெற்றுத்தரப்படும். * நிபந்தனைக்கு உட்பட்டது.

No. 195/2, Parameswara Junction, Palaly Road, Jaffna.
021 222 1121
077 766 7975

இயக்கச்சியில்... உறுதியுடன்
காணி விற்பனைக்கு
கற்பகவனம்
1 ஏக்கர், 2 ஏக்கர் காணிகள்
A9 இல் இருந்து 1km தூரத்தில்
5 லட்சம் செலுத்தி காணியினை சொந்தமாக்குங்கள்
மிகுதியை 5 வருட மாதாந்த தவணையில் செலுத்தலாம்
7 காணிகளே கையிருப்பில்!



1 ஏக்கர் – 16 பரப்பு
- 40 தென்னை
- 40 - 60 தேக்கு
- 20 கஜு மரம்
- 10 - 15 மாமரம்
- 01 குழாய்க்கிணறு
- சுற்று முட்கம்பிவேலி படலையுடன்

2 ஏக்கர் – 32 பரப்பு
- 80 தென்னை
- 80 - 90 தேக்கு
- 40 கஜு மரம்
- 20 - 30 மாமரம்
- 01 குழாய்க்கிணறு
- சுற்று முட்கம்பிவேலி படலையுடன்

- 15 அடி அகல பாதை
- 5 வருட பராமரிப்பு
- 24 மணிநேர பாதுகாப்பு
- துறைசார் வல்லுனர்களின் ஆலோசனை
- விடுமுறை வீடு அமைப்பதற்கான இடவசதி
- மாதாந்த பராமரிப்பு அறிக்கை
- விளைபொருட்களுக்கான சந்தை வசதி

பொதுவான வசதிகள்
பொது விடுதி · உணவகம் · உடற்பயிற்சிக்கூடம் · நீச்சல் தடாகம் · விளையாட்டுத்திடல்
நடைபயிற்சிக்கான பாதை · மீன்பிடி குளம் · முந்திரிகை தோட்டம் · மூலிகைத் தோட்டம்

மேலதிக பெறுமதிசேர் சேவைகள் (கட்டணங்களிற்கு உட்பட்டது)
- இயற்கை விவசாயம்
- மின்சார வசதி
- தண்ணீர்த்தாங்கி
- ஓய்வுக் கொட்டில்
- நீண்டகால நீர்விநியோக அமைப்பு
- மரக்கறித்தோட்டம்
- உள்ளக பூந்தோட்டம்
- பாதுகாப்பு கமரா (இணைய இணைப்புடன்)
- 5 வருடங்களிற்கு பின்னரான பராமரிப்பு



சி. அனுராஜ்
உரிமையாளர், விற்பனையாளர்

078 284 5000 021 492 7778
551A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
Good Gift Property Developers (Pvt) Ltd
Reg. No.: PV 115306

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 06.04.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

ஐ.நா....

உரிய நேரம் ஒதுக்கப்படவில்லை எனச் சுட்டிக் காட்டி மகிந்த அணியான பொது எதிரணி சர்ச்சையில் ஈடுபட்டதால் குறித்த விவாதம் நடைபெறாமலேயே நாடாளுமன்ற அமர்வு நேற்று ஒத்திவைக்கப்பட்டது.

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை மையப்படுத்தியே குறித்த சபை ஒத்திவைப்புவேளை பிரேரணையை மகிந்த அணி கொண்டு வந்திருந்தது.

**தொடக்கப் புள்ளி வைத்த தினேஷ்**

நேற்று ஆரம்பகட்டச் சபை நடவடிக்கைகள் முடிவடைந்த பின்னர், விவாதத்தை ஆரம்பிக்குமாறு நாடாளுமன்ற உறுப்பினர் தினேஷ் குணவர்தனவிடம் சபாநாயகர் கரு ஜயசூரிய கோரிக்கை விடுத்தார். இதன்போதே சிறப்புக் கேள்வியொன்றை எழுப்பிச் சர்ச்சைக்கு ஆரம்பப் புள்ளி வைத்தார் தினேஷ்

"ஐ.நா.மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் தொடர்பில் விவாதம் நடத்துவதற்கு சந்தர்ப்பம் வழங்குமாறு ஒருமாதத்துக்கு முன்னரே கோரிக்கை விடுக்கப்பட்டது. இதன்பிரகாரம் இன்று (நேற்று) அதற்குரிய வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. விவாதத்துக்கு 210 நிமிடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.

அதில் 52 உறுப்பினர்களைக் கொண்ட பொது எதிரணிக்கு 32 நிமிடங்கள் மாத்திரமே வழங்கப்பட்டுள்ளன. பிரேரணையைக் கொண்டுவரும் தரப்புக்கே கூடுதல் நேரம் வழங்கப்படவேண்டும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஜே.வி.பி. ஆகியன சபை ஒத்திவைப்புவேளை பிரேரணையைக் கொண்டுவரும் போது ஒருமணி நேரம் வழங்கப்படுகின்றது.

பொது எதிரணிக்கு மட்டும் ஏன் குறுகிய நேர ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது? இதில் என்ன நியாயம் இருக்கின்றது. எமது தரப்புக்கும் ஒரு மணிநேரம் அவசியம்" என்று வாதிட்டார் தினேஷ் குணவர்தன.

இதற்குப் பதிலளித்த ஆளுங்கட்சி பிரதம கொறடாவான அமைச்சர் கயந்த கருணாதிலக, சபாநாயகரே, அமரபுர தவுந்தன ஞானசார தேரருக்கு சுதந்திர சதுக்கத்தில் இறுதிக்கிரியை நடைபெறவுள்ளதால் அவருக்கு கௌரவம் செலுத்தும் வகையில் சபை நடவடிக்கைகளை 3 மணியுடன் முடிப்பதற்குக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் இணக்கம் காணப்பட்டது என்று கூறினார்.

**பேசித் தீர்க்கலாம் என்றார் சபாநாயகர்**

அப்போதும் தினேஷ் குணவர்தன ஓயவில்லை. தொடர்ந்தும் சத்தமாகப் பேசியவாறே இருந்தார். இதன்போது குறுக்கீடு செய்த சபாநாயகர், ஆரம்பகட்டச் சபை நடவடிக்கைகள் இன்று முன்கூட்டியே முடிந்துள்ளன. அதில் 30 நிமிடங்கள் எஞ்சியிருக்கின்றன. எனவே, சுமுகமாகப் பேச்சு நடத்தி அந்த 30 நிமிடங்களைப் பெற்றுக்கொள்ளலாம்-என்றார்.

**வெட்கக்கேடானது என்றார் டலஸ்**

அவ்வேளையில் ஒழுங்குப் பிரச்சினையொன்றை எழுப்பிய நாடாளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும, "தேரருக்கு இறுதிக் கிரியை செலுத்துவதற்காக நேரம் குறைக்கப்பட்டுள்ளது. செய்வதற்கு வேறு வழியில்லை என்ற தொனியில் ஆளுங்கட்சி பிரதம கொறடா கருத்து வெளியிடுகின்றார். தேரருக்காக நேரம் குறைப்பதற்கு பொது எதிரணி எதிர்ப்பில்லை. பொது எதிரணி முன்வைக்கும் தர்க்கத்தை இதனுடன் தொடர்புபடுத்த வேண்டாம்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஜே.வி.பி. ஆகியன பிரேரணைகள் கொண்டுவரும்போது அந்தத் தரப்புக்கு கூடுதல் நேரம் ஒதுக்கப்படும். இன்று (நேற்று) 210 நிமிடங்களுள் 1/7 பங்கு நேரமே எமக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. இது வெட்கப்படவேண்டிய விடயம்" என்று சுட்டிக்காட்டி தினேஷின் கருத்தை ஆமோதிக்கும் வகையில் பேசினார். டலஸ் கடும் சீற்றத்துடன் உரையாற்றுகையில் சபையில் அமைதியை ஏற்படுத்துவதற்குச் சபாநாயகர் பெரும்பாடுபட்டார்.

"உறுப்பினரே! தயவுசெய்து பேச்சு நடத்தி இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணுங்கள்" என்று ஒருகட்டத்தில் சபாநாயகர் குறிப்பிட்டார்.

**அரச தலைவருடன் பேச நேரம் வாங்கித் தரலாம்**

இதையடுத்து கருத்து வெளியிட்ட சபை முதல்வரான அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல, "சபாநாயகரே! எந்த நாளும் இதே பிரச்சினையை இவர்கள் எழுப்புகின்றார்கள். ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தலைவரான அரச தலைவருடன் பேச்சு நடத்துவதன் ஊடாக இந்தப் பிரச்சினைக்கு அவர்களால் தீர்வைக்காண முடியும். மைத்திரியுடனான சந்திப்புக்கான நேரத்தை நாம் பெற்றுத்தருகின்றோம். பிரச்சினையைத் தீர்த்துக்கொள்ளுங்கள்" என்று சிரித்தபடியே கூறினார். இதனால் சர்ச்சைக்கு மத்தியிலும் சபையில் பெரும் சிரிப்பொலி ஏற்பட்டது.

சிறிது நேரத்துக்குப் பின்னர் மீண்டும் கூச்சல் ஏற்பட்டது. சபைக்குள் அமைதியை ஏற்படுத்துவதற்கு சபாநாயகர் மீண்டும், மீண்டும் தலையீடுகளைச் செய்தார். நிலைமை கட்டுப்பாட்டுக்குள் வரவில்லை. எஞ்சியுள்ள 30 நிமிடங்களை மகிந்த அணிக்கு வழங்க சபாநாயகர் இணக்கம் தெரிவித்தார். ஏனைய விடயங்களைக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் பேசலாம் என்றார்.

**கூட்டணியுடன் பேசாமல் முடிவுக்கு வரமுடியாது**

"நாடாளுமன்றத்தில் 6 கட்சிகளே அங்கம் வகிக்கின்றன. எதிரணியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஜே.வி.பி., ஈ.பி.டி.பி. ஆகிய 3 கட்சிகளே இருக்கின்றன. மகிந்த அணிக்கு ஏற்பட்டுள்ள பிரச்சினை உட்கட்சி விவகாரம். அதை அவர்கள்தான் தீர்க்க வேண்டும்" என்று சுட்டிக்காட்டி பொது எதிரணி மீது கடும் விமர்சனங்கள் ஆளும்கட்சியினரால் முன்வைக்கப்பட்டன.

இதையடுத்து பந்துல குணவர்தன, வாசுதேவ நாணயக்கார, உதயகம்மன்பில ஆகியோரும் கருத்துக்களை வெளியிட்டனர்.

"ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் அனுமதியின்றி தீர்மானமொன்றை என்னால் எடுக்க முடியாது.

இன்று விவாதத்தை நடத்துவோம். பிறிதொரு நாளில் இது பற்றிப் பேசி இறுதி முடிவை எடுக்கலாம்" என்று இவர்களுக்குப் பதிலளித்தார் சபாநாயகர். ஆனாலும், பொது எதிரணியினர் ஓயவில்லை.

இதனால், இருதரப்புக்கும் இடையில் வாக்குவாதம் ஏற்பட்டது. இதையடுத்து முற்பகல் 11.25 மணிக்கு சபை நடவடிக்கைகளை சபையின் அனுமதியுடன் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிவரை சபாநாயகர் ஒத்திவைத்தார்.

சபை நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்வதற்கு உறுப்பினர்கள் ஒத்துழைப்பு வழங்காமை கவலையளிக்கின்றது எனவும் சபாநாயகர் குறிப்பிட்டார். நேற்றைய தினம் சுமார் ஒருமணிநேரமே சபை நடவடிக்கைகள் நடைபெற்றன.

எனவே, பிறிதொரு நாளிலேயே ஐ.நா. தீர்மானம் தொடர்பில் விவாதம் நடைபெறவுள்ளது. (த-4)




## மரண அறிவித்தல்

# செல்வரத்தினம் புஸ்பமலர்



அச்செழு வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்வரத்தினம் புஸ்பமலர் நேற்று (06.04.2017) வியாழக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் செல்வரத்தினத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான நாகமுத்து மாணிக்கம் தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான பொன்னையா பூரணம் தம்பதியரின் அன்பு மருமகளும் இராசமலர், தேவமலர், தவமலர், சரஸ்வதி, கமலேஸ்வரி, குலசிங்கம், முத்துராசா மற்றும் காலஞ்சென்ற குணரத்தினத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் சபேசன், நிதர்சன் (இலங்கை போக்குவரத்துச் சபை) ஆகியோரின் பாசமிகு தாயும் தர்சிகாவின் பாசமிகு மாமியும் கதிர்காமர், அற்புதலிங்கம், பாலேந்திரன், காலஞ்சென்றசதாசிவம்மற்றும்பிறேம், குனரத்தினம், நாகரத்தினம், இராசரத்தினம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் கோகுல்ராம், கிசாணி ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.04.2017) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பி.ப. 4.00 மணியளவில் அச்செழு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**அச்செழு வடக்கு, நீர்வேலி.**

**தகவல்: குடும்பத்தினர்.**

**077 087 0590, 077 662 1933**

## 31 ஆம் நாள் நினைவு அஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



கடந்த 08.03.2017 புதன்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவி

**அமரர்**
**தங்கரத்தினம்**
**சுப்பிரமணியம் (பவாக்கா,மயிலிட்டி)**

அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் எதிர்வரும் 07.04.2017 வெள்ளிக்கிழமை காலை கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும் .வீட்டுக்கிருத்திய நிகழ்வு 09.04.2017 ஞாயிற்றுக்கிழமை மு.ப 11.00 மணியளவில் எமது இல்லத்திலும்("சிவபதி" பன்னாலை,தெல்லிப்பழை) நடைபெறும் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனநிகழ்விலும் கலந்துகொள்ளும்வண்ணம் தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

குறிப்பு .இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**"சிவபதி"**
**பன்னாலை, தெல்லிப்பழை.**
**0212059701**

**திரு.திருமதி சயந்தன் குடும்பம்.**
**திரு.திருமதி ஜெயரஞ்சன் குடும்பம்.**
**திரு.திருமதி ஜெயந்தன் குடும்பம்.**

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

**தோற்றம்**
**1931 . 02 . 08**



**மறைவு**
**2017 . 03 . 08**

## திருமதி இலட்சுமிப்பிள்ளை நடராசா


கடந்த 08.03.2017 புதன்கிழமை இறைபதமடைந்த எமது குடும்பத் தலைவி திருமதி நடராசா இலட்சுமிப்பிள்ளை அவர்களின் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டோருக்கும், நேரிலும், தொலைபேசியிலும், அனுதாபங்களைத் தெரிவித்தோருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளை தெரிவிப்பதோடு இன்று 07.03.2017 வெள்ளிக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறவுள்ள ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கினறோம்.

**இலட்சுமி இல்லம்**
**மீசாலை மேற்கு, மீசாலை.**

**குடும்பத்தினர்**

## மரண அறிவித்தல்

# கனகசபை சதாசிவம்



மீசாலை கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கனகசபை சதாசிவம் நேற்று (06.04.2017) வியாழக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகசபை-தில்லைநாயகி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான நமசிவாயம்-தெய்வானை தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற சிவக்கொழுந்துவின் அன்புக் கணவரும் பரமசிவம் பாமதி(தாதிய உத்தியோகத்தர், யாழ். போதனா வைத்தியசாலை), பாமலர் (சுகாதார உதவியாளர், யாழ். போதனா வைத்தியசாலை) ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்ற சிவபாதசுந்தரம் மற்றும் ஈஸ்வரி(ஓய்வுநிலை ஆசிரியை) ஆகியோரின் அன்புச் சகோதரரும் இராஜராஜேஸ்வரி (தென்மராட்சி கல்வி வலயம்), விஜயகாந்தன் ஆகியோரின் அன்பு மாமனும் லதுார்சியாவின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.04.2017) வெள்ளிக்கிழமை மு.ப. 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சாவகச்சேரி, கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**மீசாலை கிழக்கு,**
**மீசாலை.**

**தகவல்: குடும்பத்தினர்.**

## யாழ் மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கம்

இல.183,
ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி.

பதிவு இல.649
Tel: 021 2223814

559,
நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

### விசேட பொதுச்சபைக் கூட்டம்


யாழ். மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கத்தின் விசேட பொதுச்சபைக் கூட்டம் 2017.04.19ஆம் திகதி புதன் கிழமை முற்பகல் 11.00 மணிக்கு சங்கத் தலைவர் திரு. இ. பேரின்ப நாயகம் அவர்கள் தலைமையில் சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இதில் சகல அங்கத்தவர்களையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றேன்.

**முக்கிய குறிப்பு :**
குறித்த நேரத்தில் கூட்டத்தை ஆரம்பிப்பதற்கு ஏற்றவாறு அனைவரும் வருகை தரவும்.

கா.பாஸ்கரன்,
செயலாளர்.

## மரண அறிவித்தல்கள்

### செல்லத்துரை கனகரத்தினம்



பெரிய மதவடி, வீமன்காமத்தைப் பிறப்பிடமாகவும் வீரக்கொடியார் வீதி, நுணாவில் சந்தியை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை கனகரத்தினம் நேற்று முன்தினம் (05.04.2017) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.


அன்னார் காலஞ்சென்ற செல்லத்துரை முத்தம்மா தம்பதியரின் மூத்த மகனும் காலஞ்சென்ற நடேசபிள்ளை தவமணி தேவி தம்பதியரின் பாசமிகு மருமகனும் உதய குமாரியின் (மல்லிகா) அன்புக் கணவரும் சுகுணா, கலையரசி, கலைச்செல்வி, கௌரிதரன், கீர்த்தனா, கௌரிசங்கர், கபில்ராஜ், சுகிதரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஜெகநாதன், விஜயரட்ணம்(றூபன்), யூட்சிறீகாந், கோபிநாத் ஆகியோரின் அன்பு நிறைந்த மாமனும் தர்மிலன், தர்மிகா, தருண், மிதுனன், டிலக்சனா(அபி), மதனுஜா, விஸ்னுஜா ஆகியோரின் பாசமிகு தாத்தாவும் கமலாதேவி, இந்திராதேவி, யோகலிங்கம், பரராஜசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் பத்மினி, சாந்தகுமாரி, ரசந்தினி மற்றும் காலஞ்சென்ற நாகராசா குமுதினி, பாமிதன் சுபாஸ்கரன், அமுதினி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.04.2017) வெள்ளிக்கிழமை பிற்பகல் 03.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைக்காக பூதவுடல் நுணாவில் குச்சப்பிட்டி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**வீரக்கொடியார் வீதி,**
**நுணாவில் சந்தி, சாவகச்சேரி.**

**தகவல்**
**குடும்பத்தினர்.**

### சடையன் சின்னத்துரை



மண்ணில் 18.04.1932
விண்ணில் 06.04. 2017

அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும், டச்சுவீதி, கட்டைப்பிராயை வசிப்பிட மாகவும் கொண்ட சடையன் சின்னத்துரை நேற்று (06.04.2017) வியாழக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சடையன் - சின்னன் தம்பதியரின் மகனும் சின்னர் - முத்தம்மா தம்பதியரின் மருமகனும் பூமணியின் பாசமிகு கணவரும் கலாவதி காலஞ்சென்ற தர்மகுலசிங்கம், கமலாதேவி, பாலசிங்கம் காலஞ்சென்ற இராசலிங்கம், கமலவேணி, சண்முகலிங்கம் ஆகியோரின் அன்புத்தந்தையும் தவராசா, இராசலட்சுமி, தவேந்திரராசா, கவிதா, மகாலிங்கம், யசோதா ஆகியோரின் அன்பு மாமனாரும் கமலராசா, சுகந்தராசா, உருத்திகா, மகிந்தராஜ், பிரதீபன், கம்ல்ராஜ், டனுஷன், லகீபன், கஜிந்தன், தரணியா, விகிதன், துளசிதரன் ஆகியோரின் அன்புப்பேரனும் பவித்திரன் பகினுஜா ஆகியோரின் பாசமிகு பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.04.2017) வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்க்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**டச்சு வீதி,**
**கோப்பாய் தெற்கு, கோப்பாய்.**
**077 6583 592**

**தகவல்:**
**குடும்பத்தினர்**

## உடனடி வேலைவாய்ப்பு

★ **மலேசியா**
டணில் சிகரட் கொம்பனி (30 ஆண்கள்)
RM 1500 SR 49,500+OT உணவு, தங்குமிட மருத்துவ வசதிகள் உண்டு (வயது 18-40)
★ **புறோடோவா கார் கம்பனி** (லேபர் ஆண்கள் 20)
RM 1800 SR 59,400 உணவு தங்குமிட வசதி மருத்துவ வசதி உண்டு (வயது 18-40) +OT
★ **சவுதி - ஹோட்டல்** (லேபர்) 15 ஆண்கள்
RL 1100 SR 44,000+OT உணவு, தங்குமிட வசதி, மருத்துவ வசதி உண்டு +OT
★ **கட்டார்** - றைலர் (30 ஆண்கள்)
RS 1800 SR 72,000+OT உணவு தங்குமிட வசதி மருத்துவ வசதி உண்டு

**NEW GULF LANKAN MANPOWER**
**136, Dam Street, Colombo-12.**
**Phone No: 077 044 7386 / 077 8898 752**
**e-mail:asianlanka27@gmail.com**

## மரண அறிவித்தல்கள்

### சின்னத்தம்பி ராஜேந்திரா



உடுவில் கிழக்கு, கற்பகப் பிள்ளையார் கோவிலடியைப் பிறப்பிடமாகவும் சுவிஸ் Hergiswil ஐ வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி ராஜேந்திரா 31.03.2017 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் சின்னத்தம்பி - லீலாவதி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற அரியம்மா மற்றும் மகேஸ்வரி, மகேந்திரா, பாலேந்திரா, தெய்வேந்திரா, யோகேஸ்வரி, காலஞ்சென்ற பத்மாவதி மற்றும் புஷ்பவதி, கமலாவதி, புவனேந்திரா, கஜேந்திரா, சரஸ்வதி, திலகவதி ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்றவர்களான தம்பிராஜா, சின்னத்துரை, சிவகுருநாதன், பூவிலிங்கம், சச்சிதானந்தம், பாலசிங்கம், சாந்தி மற்றும் சிவமலர், சிறியா, சொர்ணமலர், யோகலக்சுமி, கருணாகரன், செல்வராஜா ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (07.04.2017) வெள்ளிக்கிழமை Krematorium, Friedhof Stadt Luzern, Friedentalstrasse 60, 6004 Luzern என்னும் மயாணத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*விநாயகர் வீதி,*
*நல்லூர் வடக்கு,*
*யாழ்ப்பாணம்.*

தகவல்:
**பா.கமலாவதி** (சகோதரி)

### திருமதி செல்வராணி (செல்லம்) யோகர்



நவாலியை பிறப்பிடமாகவும், ஏழாலை மத்தியை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வராணி (செல்லம்) யோகர் நேற்று (06.04.2017) வியாழக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி யோகர் (C.T.B கோண்டாவில் முகாமையாளர்) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற நாகம்பிள்ளை - கற்பகம் தம்பதியரின் அன்புமகளும் காலஞ்சென்ற சின்னத்தம்பி - இலட்சினி தம்பதியரின் அன்பு மருமகளும் சிவகோணேசலிங்கம் (ஊடக ஆசிரியர்), சிவயோகவதனி (ஆசிரியர், வசவிளான் மத்திய மகா வித்தியாயலம்), சிவமோகரஜனி (முன்னை நாள் ஆசிரியர் - லெனின் முன்பள்ளி), சிவபாக்கியநளினி (DO - பிரதேச சபை கொடிகாமம்), சிவதயாளினி ( DO - யா/போதனா வைத்தியசாலை), சிவஉமாகரன் (பணியாளர் யா/பல்கலைகழகம் உயர் பட்டபடிப்புகள் பீடம்) ஆகியோரின் அன்புத்தாயும் மேரிசுதர்சினி ( DO - பிரதேச செயலகம் சண்டிலிப்பாய்), லோகேஸ்வரன் (மோகன்), நகுலேஸ்வரன், தர்மசீலன் (ஆசிரியர், வரணி மத்திய கல்லூரி), ஜோதீஸ்வரன் (கனடா) ஆகியோரின் அன்புமாமியும் காலஞ்சென்ற மதுரைச்செல்வி சனாதனர், சர்வேதிகன், சதுர்த்திகன், சிவகர்சன், பிரதீசா, நிவர்சா, சஜீசா, மேரிடன்யா ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் பாலசிங்கம் (நடேசு) காலஞ்சென்ற செல்வராசா, சிவபாக்கியம் ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.04.2017) வெள்ளிக் கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஏழாலை மத்தி உசத்தியோடை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**ஏழாலை மத்தியகிழக்கு.**

**தகவல்:**
**குடும்பத்தினர்**
**077 644 6514**

*மகிந்த...*

உறுப்பினர்களும் எதிரணிப் பக்கம் வந்து அமர்ந்தால் எதிர்க்கட்சித் தலைவர் பதவியை நாளையே வழங்குவதற்கு நாம் தயார்.

இவ்வாறு தெரிவித்தார் எதிர்க்கட்சிப் பிரதம கொறடாவும் மக்கள் விடுதலை முன்னணி யின் தலைவருமான அனுரகுமார திஸாநாயக்க.

நாடாளுமன்றத்தில் ஐ.நா. தீர்மான விவாதத்துக்கான நேர ஒதுக்கீடு தொடர்பில் எழுந்த சர்ச்சையின்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:

ஐக்கிய தேசியக் கட்சி, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி, இலங்கைத் தமிழரசுக் கட்சி, மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி.), சிறிலங்கா முஸ்லிம் காங்கிஸ், ஈ.பி.டி.பி. ஆகிய 6 கட்சிகளே நாடாளுமன்றத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. அவற்றைத் தவிர வேறு எந்தக் கட்சிக்கும் நாடாளுமன்றத்தில் அங்கீகாரம் வழங்கப்படவில்லை.

ஐக்கிய தேசியக் கட்சி, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆகிய மூன்று கட்சிகளும் அரசில் அங்கம் வகிக்கின்றன.

இலங்கைத் தமிழரசுக் கட்சி, ஜே.வி.பி., ஈ.பி.டி.பி. ஆகிய 3 கட்சிகளும் எதிரணியில் இருக்கின்றன. எதிரணிப் பக்கம் வந்து ஒரு குழு அமர்வதால் மாத்திரம் எதிர்க்கட்சித் தலைவர் பதவியை வழங்கி விட முடியாது. இது தவறான முன்னுதாரணமாகவும் அமையும்.

எதிர்காலத்தில் அரசொன்று அமைந்த பின்னர், அந்த அரசிலுள்ள குழுவொன்றை எதிர் வரிசையில் அமர வைத்து எதிர்க்கட்சித் தலைவர் பதவியையும் சுவீகரிக்கும் திட்டத்துக்கு அது வழிவகுக்கக்கூடும். நாடாளுமன்ற சம்பிரதாயம் பாதுகாக்கப்படவேண்டும். மேற்கூறப்பட்ட மூன்று கட்சிகளே எதிர்க்கட்சிகளாக அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

நாடாளுமன்ற சம்பிரதாயத்தின் பிரகாரம் விவாதம் நடைபெறுகின்றபோது எதிர்க்கட்சிகளுக்கு 60 சதவீத நேரமும், ஆளுங்கட்சிக்கு 40 சதவீத நேரமும் ஒதுக்கப்படும். இந்த நடைமுறையை முன்னாள் அரசியல் அமைச்சராக இருந்த பஸில் ராஜபக்ச 50 இற்கு 50 என்ற விகிதத்தில் மாற்றியமைத்தார். இதற்கு நாம் எதிர்ப்பை வெளியிட்டோம். ஆனாலும், எதிரணிக்குரிய அந்த 60 வீத நேர ஒதுக்கீடு கிடைக்கவில்லை.

தற்போது எதிரணிப் பக்கம் குறிப்பிட்டளவு எண்ணிக்கையான உறுப்பினர்களே இருப்பதால் 60 வீத நேர ஒதுக்கீட்டைக் கேட்கவில்லை. 30 வீதம் வழங்கினால் போதும் என கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் அறிவித்துள்ளோம்.

முதல் தடவையாக நாடாளுமன்றத்தில் 70 வீத நேரம் ஆளுங்கட்சிக்கும், 30 சதவீத நேரம் எதிரணிக்கும் ஒதுக்கப்பட்டு வருகின்றது. அந்த 70வீத நேர ஒதுக்கீட்டில் 40 வீதம் ஐக்கிய தேசியக் கட்சிக்கும், 30 வீதம் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புக்கும் பகிரப்பட்டுள்ளது. ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்குரிய 30 வீத நேர ஒதுக்கீட்டிலேயே எதிரணிப் பக்கமுள்ள அந்தக் கட்சி உறுப்பினர்களுக்கும் வழங்கப்படும். இது அவர்களின் கட்சிப் பிரச்சினை. இது நாடாளுமன்றத்துக்கு உரிய காரணி அல்ல.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் செயலாளர், பொருளாளர் ஆகியோர் ஆளும் தரப்பில் இருக்கின்றனர். இந்தக் குழுவை எதிரணி எனக் கூறமுடியாது. ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் உள்ள ஒட்டுமொத்த உறுப்பினர்களும் நாளையே எதிரணிப் பக்கம் வந்தால் எதிர்க்கட்சித் தலைவர் பதவியை வழங்குவதற்குகூட நாம் தயார் - என்றார்.

(த-4)